Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



…ந்திரநாட்டு …கநானூறு

பன்மொழிப் புலவர்

இரா. மதிவாணன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ओ३म्
पुस्तक संख्या .....
पञ्जिका संख्या .....
पुस्तक पर सर्व प्रकार की निशानियां लगाना वर्जित है। कोई सज्जन पन्द्रह दिन से अधिक देर तक पुस्तक अपने पास नहीं रख सकते। अधिक देर तक रखने के लिये पुनः आज्ञा प्राप्त करनी चाहिये।

Professor)
...rmologicaf

Madras-8.

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय
गुरूकुल कांगड़ी विश्वविद्यालय हरिद्वार
वर्ग संख्या ——— आगत संख्या ———
पुस्तक - वितरण की तिथि नीचे अंकित है
इस तिथि सहित 35वें दिन तक यह पुस्तक
पुस्तकालय में वापिस आ जानी चाहिए । अन्यथा 10
5 पैसे प्रतिदिन के हिसाब से विलम्ब - दण्ड लगेगा ।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆந்திர நாட்டு அகநானூறு

Translation of Gatha sapta sati

[செருமானிய மொழியில் பல பதிப்புகளாக வெளிவந்த நூல்]

காதாசப்தசதி என்னும் பிராகிருத மூல நூலிலிருந்து
தெரிந்தெடுக்கப்பட்ட நானூறு அகப்பாடல்களின்
தமிழாக்கமும், அப்பாடல்களுக்குத்
தமிழ் நெறி தழுவி, மொழி பெயர்ப்பாசிரியர்
பேராசிரியர்

இரா. மதிவாணனர்

தாமே வகுத்த திணை - துறை குறிப்புகளும் அடங்கியது.

தாய்நாடு பதிப்பகம்
31. புகைவண்டி நிலையப் பாதை
வில்லிவாக்கம், சென்னை-49

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHICAL DATA

1	Title of the book	– Andhira naattu aga naanooru
2	Language	– Tamil (Translated from Prakrit)
3	Edition	– First
4	Date of publication	– Sept 1978
5	Translator	– R. Madhivanan M A., B. Ed, Compiler, Directorate of Tamil Etymological Dictionary Project, Madras-8
6	Copy right holder	– R. Madhivanan
7	Paper used	– White printing
8	Size of the book	– Demmy Size, 14¼×21¼ cm.
9	Printing types used	– 8, 10, 12, 14, 18 points
10	Number of pages	– 220 pages
11	Number of copies	– 2200
12	Artist	– Eswari
13	Printer	– S. Dhanyakumar Press, Madras-17
14	Binding	– ,,
15	Price	– Rs. 10-50
16	Publisher	– Thaainaadu Pathippagam 31, Railway Station Road Villivakkam, Madras-49
17	Subject	– Literature
18	Summary	– Poems on love
19	Call Number	– 0,35,1 D1,G 31L8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளடக்கம்

அணிந்துரை

முன்னுரை

1. குறிஞ்சித் திணை—காதலோவியங்கள் 1

2. முல்லைத் திணை—இல்லறம் என்னும் நல்லறம் 54

3. பாலைத் திணை —பிரிவென்னும் எரிமலை 84

4. மருதத் திணை —ஊடலை வளர்த்த உரையாடல்கள் 135

5. நெய்தல் திணை —கடுக்கும் என் நெஞ்சம் 187

6. கைக்கிளை —எற்றென்னை உற்ற துயர் 196

7. பெருந்திணை —சீ! என்ன செய்கை இது 295

8. இயற்கை வண்ணனை —கற்பனைக் கோலங்கள் 218

9. திணை துறை விளக்கம் 193

10. இந்நூலில் பயின்றுள்ள துறைகள் 201

11. பெண்பாற் புலவர்கள் 208

12. பிழை திருத்தம் 208

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

C. G. Rangabashyam, I. A. S
COMMISSIONER AND SECRETARY
TO GOVERNMENT

EDUCATION DEPARTMENT
Fort St. George,
Madras-9,
28th Sept., 78.

FOREWORD

GATHA SAPTA SATI an ancient prakrit anthology is a rare collection of poetic pearls made available to the world by Hala, Seventeenth King of Satavahana dynasty of Andhra. The work recaptures the splendid spectacle of the rural scene the pristine pleasures, passions, romance and the variegated tapestries of emotions pulsating in the deepest chambers of human heart transcending time as may be found in the perennial literatures of other languages. It is indeed appropriate that such myriad moods and tempestuous feelings of the product mirroring the spirit of Telugu people of Andhra have been translated in major languages of the world.

Prof. Madhivanan deserves the gratitude of the Tamils for the excellent translation of the anthology in lucid literary Tamil. The laudable efforts of the author in bringing out the Tamil version are indeed Commendable. Not withstanding the hazards and difficulties involved in translations this literary product in racy Tamil is a live transplantation of the orginal Prakrit work. He is faithful not only to the orginal text but also to the language, by classifying the renderings according to ancient doctrine of love as formulated in Tamil Classics. Incidentally, the translation will enrich the Tamil literary spectrum and enlighten the readers as to the basic identity of ethos of Telugu and Tamil people.

I commend this memorable translation of Prof. Madhivanan to the Tamil public of all shades from scholars to lay public for rewarding experience and aesthetic pleasure. I wish the learned author bringforth many more literary works of similar kind for further enrichment of Tamil language and culture.

C. G. RANGABASHYAM

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் சி. ஆர். சர்மா
எம். ஏ., பி.எச். டி.
தென்மண்டலச் செயலர்,
சாகித்ய அகாதெமி, சென்னை

அணிந்துரை

பிராகிருதம் மிகவும் இனிமையான மொழி; மிகப் பழமையான மொழியும் கூட. இனிய நடையில் அகக் கருத்துகள் கூறப்பட்டுள்ள காதாசப்தசதி இம்மொழிக்கே ஓர் அணி என்றாலும் மிகையாகாது. இதில் நாட்டுப்புற வாழ்க்கை உள்ளது உள்ளபடி சித்தரிக்கப்பட்டுள்ளது.

தமிழுக்கும் பிராகிருதத்துக்கும் நெருங்கிய உறவு உள்ளதென்று திரு. மதிவாணன் தம் ஆய்வு முன்னுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

காதாசப்தசதி ஆந்திர நாட்டில் தோன்றிய ஒரு இலக்கியக் கருவூலம். இந்தக் கருவூலத்திலிருந்து 400 நன்மணிகளை நன்கு ஆராய்ந்து தேர்ந்து திரு. மதி வாணன் அவர்கள் அவைகளை இனிய தமிழில் மொழி பெயர்த்துப் பிராகிருதம் தெரியாத என்னைப் போன்றவர் களுக்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளார். அவர் செய்த இந்தத் தொண்டு பாராட்டத்தக்கது. பிற மொழியிலுள்ள இலக்கியச் செல்வத்தை நம் மொழியினர் அனைவருக்கும் பொதுச் செல்வமாக்க வேண்டும் என்னும் அவரது அவா போற்றத்தக்கது; புதிதாகத் திணை துறை வகுத்திருப் பதும் பாராட்டத்தக்கது.

மொழி பெயர்ப்பு மிகவும் எளிமையான வேலை என்று கருதுவோர் சிலர் இருக்கலாம். மொழி பெயர்ப்பினைச் செய்பவருக்குத் தான் அதன் அருமையும் கடுமையும்விளங் கும். ஆர்யா யாப்பில் மூல நூல் இயற்றப்பட்டுள்ளது காதா என்பது அதன் பழைய பெயர். காதா என்னும் சொல்லுக்கு 'பாடத்தகுந்தது' என்பது பொருள். ஆகவே காதா 'பாட்டாக அமைந்துள்ள யாப்பு என்று கூறலாம். நாளடைவில் இதில் உள்ள பாட்டு குறைந்து வெறும் யாப்பு மட்டும் நின்றது. திரு. மதிவாணன் அவர்கள் மேலும் பல பிறமொழி இலக்கியங்களைத் தமிழ்ப் படுத்தல் வேண்டும் என்று வேண்டுகிறேன். இதற்கு அவர் தகுந் தவர். அவருக்குத் தகுந்த ஊக்கமளிப்பது தமிழன்பர் களின் கடமை.

சி. ஆர். சர்மா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

PREFACE

I present this Tamil translation of 'Gatha Sapta Sati', an anthology in Prakrit language entitled by me as 'Andhiranattu Agananuru', before the Tamil public. My joy knew no bounds when I had the opportunity to study this fine collection of 700 poems compiled by Hala, the 17 th Satavahana king of Andhrapradhesh during 1st century A. D. The greatness of 'Gatha sapta sati' is well determined from its translations in to Sanskrit, Hindi' Telugu' Marathi, English, German and some other languages. The German translation has seen many editions.

A prakrit poet says that it is futile on the part of the people who talk about love without reading Gatha sapta sati. No doubt this is an admiradle collection of poems with elevated emotion of love,

Gatha sapta sati means seven hundred Gathas or poems. I have selected four hundred choicest poems and categorised them, according to Tamil literary tradition, in to 'Thinai' and ,Thurai'.

I cannot help remonstrating against certain literary misrepresentations of Prof. Vaiyapuri Pillai in his reference to GATHA SAPTA SATI in his 'History of Tamil literature' in English. In the view of his tainted critical crucible, the original Prakrit work appears as a Sanskrit product possessing the literary AGAM classification as Tamil has.

The dimensions and repercussions of such literary prevarications of truth on hearsay evidences have not only misled Tamil scholars and reading public, but also tend to fantastic concept of the perpetual literary mortgage of Tamil language to Sanskrit not warranted by historical evidences and facts. For the benefit of such men in Tamil literary

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

world, I affirm that I adapted appropriate Tamil literary thematic classifications in these love poems when rendering these translations from original Prakrit work, the same was devoid of such grammatical ramifications as may be found in Tamil language.

The reference to a North—Indian Arya King Bruhadatta, learning the delicacies of love themes embedded in Tamil verses through the great Kapilar, reminds the fact that the classifications are only of Tamil origin. The Gathas were originally written in Maharashtriprakrit. Govardanacharya translated it into Sanskrit :

Some pomes are invariably similar to Tamil poems of Sangam literature. Mostly the poems depict Dravidian way of life with grand cultural background. On the whole this work is a pen picture of rural life of the people, in the area around River Godavari during the reign of the Andhra Satavahana kings. It seems their official language was prakrit though they had old Telugu as their mother tongue.

It is surprising to note that mental agony, problems of love affair depicted in these poems are relevant even today. Man may change, but his joy and sorrow, passions and attitude, love and dismay, have a perennial existance down the ages right from the first origin of man. So, poems on love have their own attraction in whatever language they are written.

Lovers' affection, pangs of seperation, solitary anguish, feigned anger, the pleasure of temporary variance, mental disturbance caused by beauty, rejoicing in embrace, eyes consumed with grief, sad memories, the reverance attached to chastity are all picturesque in this narration. (A chaste woman of the above society was expected to smile concealing her teeth, walk without crossing the Main entrance and look without raising her head. Chastity was observed

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

as loyalty to love sincerity to affection and purity integrated to the holy union of marriage. In such a fine society immorality also existed.)

There are many poems that touch our heart and soul. A Peasant refuses to return home from the field, even after the sun-set saying'what is there in the house after the death of my dear wife?' In another poem the wife requests her husband to shower affection (soaked in sweet words) on her as much as he could, since the affection of husband is the only nectar that every housewife on earth mentally medita -tes and aspires to have in abundance.

Being driven by the anxiety to give a rendering of Gatha sapta sati in easy intelligible Tamil prose, I have accomplished this work. It is said that poetry escapes in the process of translation. I am not sure to which extent I am successful in my attempt. It is to the readers to judge whether the orginal Prakrit poetry has accrued or escaped in the process of my translation. I feel satisfied myself with the hope that I have attempted to retrieve a classical anthology from pedagogic pedantry so as to render a lucid reading for the convenience of the common readers.

I am indebted to the President, Secretary and office bearers of the Jain youth forum, Madras for their memorable and unforgettable help for the pubilcation of this book.

I express my gratitude to Thiru C.G. Ranga-bashyam, Secretary, Education Department and Dr. Sharma for having given foreword and to the Printers of S. Dhanyakumar press for the neat execution of the book.

Madras. R. MADHIVANAN

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வு முன்னுரை

செந்தமிழ்ப்பனுவலான அகநானூற்றைப் போலவே கி. மு. முதல் நூற்றுண்டில் ஆந்திர நாடாண்ட சாதவாகன மன்னன் ஆளனுல் எழுநூறு அகப்பாடல்கள் தொகுக்கப்பட்டன. இவை மிகுந்த சொற் சுவையும் பொருள் நயமும் நிரம்பியவை. பிராகிருத மொழியில் எழுதப்பட்டவை. இந்நூலுக்கு 'காதாசப்த சதி' [எழுநூறு பாடல்கள்] என்று பெயர். இந்நூலுள் நயம் மிக்க நானூறு பாடல்களைத் தெரிந்தெடுத்துத் தமிழாக்கம் செய் துள்ளேன். மேலும், இயற்கை வண்ணனையாக 12 பாடல்களைச் சேர்த்துள்ளேன். புதிதாகத் தமிழ் நெறிக்கேற்ப திணையும் துறையும் வகுத்துள்ளேன். இது வடக்கில் நிலவிய பழங்காலக் குடும்ப வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

நூலும் நூலாசிரியரும்

காதா (Gatha) எனப்படும் யாப்பினுல் அமைந்த எழுநூறு பாடல்களைக் கொண்டிருப்பதனுல் இதற்குக் காதாசப்தசதி என்று பெயரிடப்பட்டது. செருமானிய மொழியில் இந்நூல் வீபர் (weber) என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டுப் பல பதிப்புகளாக வெளிவந்த பெருமைக்குரியது. இந்நூலின் அருமையையும் பெருமையையும் உணர்ந்து கோவர்தன ஆசாரியார் என்பவர் வடமொழியில் ஆரிய சப்த சதியை இதனையொட்டி இயற்றினுர்.

காதா என்னும் யாப்பு வடமொழிக்குரியது. இது முதலடி 12 மாத்திரையும் இரண்டாம் அடி 18 மாத்திரையும் மூன்ரும் அடி 12 மாத்திரையும் நான்காம் அடி 15 மாத்திரையும் அமையப் பாடப் படுவது.

இந்நூலுக்குக் கங்காதரர் என்பவர் உரை விளக்கம் வடமொழி யில் எழுதியிருக்கிருர். இவரையொட்டிப் பிற்காலத்தில் உரை யெழுதியவர்களும் வடமொழியிலேயே எழுதியுள்ளனர்.

காதா சப்தசதிக்குப் புகழ்மாலை சூட்டிய பிராகிருதப் புலவர் ஒருவர் காதா சப்த சதியைப் படிக்காதவர்கள் காதலின் இயல்பை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும் காமத்தின் நலனையும் பற்றிப் பேசுவது (அவர்கள் எத்துணைச் சிறந்த காம நூலைக் கற்றவராயினும்) நாணத்தக்கதாகும் என்கிறார்.

பிராகிருத மொழி அம்மக்களால் பாவுவ (பாவுட) மொழி என்றழைக்கப்பட்டது. பாட்டு மொழி என்பது இதன் பொருளாக இருந்திருந்தல் கூடும். பவளம் வடமொழியில் ப்ரவளம் எனத் திரிவது போல் பாவுவ-பிராக்கிருத எனத் திரிந்திருக்கிறது எனத் தெரிகிறது. வடஇந்திய மொழிகளுக்குத் தாயான பிராகிருதம் பல வகைகளில் தமிழோடு ஒப்புமையுள்ளதாக இருக்கிறது.

இந்நூலைத் தொகுப்பித்த ஆந்திர மன்னன் ஆளன் ஐதரா பாத்துக்குத் தென்மேற்கிலிருந்த குந்தள நாட்டையாண்ட சாத வாகன மரபைச் சார்ந்த முப்பது மன்னர்களில் பதினேழாமவன். இம்மன்னர் மரபு கி.மு. 230 முதல் கி.பி. 130 வரை செழித்திருந் தது. ஆந்திரர்க்குக் கீழ்க் கடலும் மேற்கடலும் எல்லையாக இருந்தன.

இம்மன்னன் காலத்தில் ஓரிலக்கம் பாடல்கள் கிடைத்தன என்றும் அவற்றுக்குக் காதா கோடி என்று பெயரிருந்தது என்றும் அவற்றுள் மிகவும் சுவையான எழுநூறு பாடல்களை மட்டும் தொகுத்தான் என்றும் கூறப்படுகிறது. அவற்றுள் 44 பாடல்கள் இம்மன்னனால் இயற்றப்பட்டவை.

ஆளன் வடமொழியைக் கற்ற பிறகு நிரம்பிய இலக்கியப் புலமையுடையவனானான் என்றும் ஒரு கதை வழங்குகிறது அது வருமாறு:

ஆளனின் மனைவி மலையவதி வடமொழிப் புலமை நிரம்பியவள். ஒருநாள் மன்னன் இளமரக் காவில் (நந்தவனம்) விளையாடிக் களித்துப் பின் அரசியுடன் மலர்ப் பொய்கையில் நீராடும்போது அவள் மீது நீரை வாரி இறைத்தான். அப்போது அவள் வட மொழியில் மோதகஸ்தாடய' என்று கூறினாள். இதற்கு (மா + உதக + தாடய) என்னைத் தண்ணீரால் அடிக்காதீர்கள் என்று பொருள். அரசனுக்கு வடமொழி தெரியாததால் இதன் பொருளுணராமல், (மோதக + தாடய) 'கொழுக்கட்டை கொடுங் கள்' என்று அரசி கேட்பதாக நினைத்து உடனே அரண்மனையி லிருந்து சுவையான கொழுக்கட்டைகளை வரவழைத்து அவளுக்கு உண்ணக் கொடுத்தான். அரசனின் அறியாமையை நினைத்து மலையவதி விழுந்து விழுந்து சிரித்தாள். அரசன் நாணமுற்று உடனே வடமொழி கற்றுக் கொள்ள விரும்பினான்.

அரசனின் அவைக்களப் புலவர்களில் சருவவருமன் வடமொழி யில் பெரும்புலமையாளர். காலாபவியாகரணம் என்னும் நூலாசிரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யர், அவர் ஆறே மாதத்தில் அரசனுக்கு வடமொழியை நன்கு கற்பித்தார். மன்னன் அவருடைய திறமையை மெச்சி அவருக்குப் பொன்னும் பொருளும் தந்ததோடு பருகச்சம் என்னும் வளமான ஊர்ப் பகுதிகளைக் கொடையளித்தான். குணாட்டியரும் இவன் அவைக் களத்திலிருந்த பெரும் புலவர்களுள் ஒருவர்.

ஆளனின் தலைநகரம் குந்தள நாட்டுப் பிரதிட்டானபுரம். இவன் தீபகர்ணியின் மகன். ஆளமன்னன் பிராகிருத மொழியைப் போற்றி வளர்த்த பெருந்திறனைப் பல புலவர்கள் பாராட்டியுள்ளனர். புலவர்களின் அன்பன் என்னும் பொருள்படும் 'கவிவத்சலன்' என்னும் பட்டம் ஆளனுக்குரியதாயிற்று, ஆளனைப் பாராட்டும் வகையில் சரசுவதி கண்டாபரணம் என்னும் நூலில்,

'ஆட்யராசன் (சாதவாகனனான ஆளன்) நாட்டில் பிராகிருதம் தெரியாதவரும், சாகசாங்கன் (விக்கிரமாதித்தன்) நாட்டில் சமற்கிருதம் தெரியாதவரும் இல்லை' என்று கூறப்பட்டுள்ளது.

'சமற்கிருதத்தைவிட பிராகிருதம் இன்னோசைபட்ட எளிமையாக ஒலிக்கத் தகுந்த எழுத்துகளையுடைய மொழி. அழகிய எளிய இனிய பிராகிருத இலக்கியங்கள் இருக்கும்போது சமற்கிருதத்தைப் போய் எவன் படிப்பான்' என்று இராசசேகரன் என்னும் புலவர் கர்ப்பூர மஞ்சரியில் கூறுகிறார்.

பிராகிருதம் மக்களின் பேச்சு மொழியாக இருந்ததால், மக்கள் தம் தாய் மொழியை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டபோது, மன்னன் முழு ஆதரவைத் தந்திருக்கிறான் என்பதற்கு இந்நூலே சான்றாகிறது.

இந்நூல் பிற்காலத்தில் ஆந்திரர்களால் பெரிதும் மதிக்கப்பட்டது. அதன் விளைவாக, பெதகோமுடி வேமனனின் அமைச்சன், மாமிடி சிங்கண்ணனின் தம்பி பிரகடனுக்கு, 'சாலிவாகன சப்தசதி' என்று பெயரிடப்பட்டிருந்ததையும் அறிகிறோம்.

இந்நூலை அமருகன் என்பவர் அமருக சதகம் என்னும் பெயரில் வடமொழியில் எழுதினார். அதன் பிறகு கோவர்தனாச்சாரியார் 'ஆர்யாசப்தசதி' என்னும் பெயரில் எழுநூறு பாடல்களையும் வடமொழியில் எழுதினார். விகாரிலால் மிசுரா என்பவர் விரச மொழியில் (Vraj Bhasa) 'விகாரிசதசயி' என்னும் பெயரில் மொழி பெயர்த்தார்.

இந்நூலுக்கு முதன் முதல் குலபால தேவன் என்பவர் உரையெழுதினார். அவருக்குப் பின் கங்காதரப்பட்டு, மதுரநாத சாத்திரி ஆகியோர் உரையெழுதினர். உரையாசிரியர்களின் கூற்றிலிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதற்குச் 'சாலிவாகன சப்தசதி' என்று வேறு பெயரிருந்ததாகவும் தெரிகிறது. ஆளனுல் ஆதரிக்கப்பட்ட பாலிதன் என்னும் புலவரே அரசனின் ஏவலால் எழுநூறு பாடல்களைத் தொகுத்ததாகத் தெரிகிறது.

ஆளனுக்கு முன்பு வாழ்ந்த பெரும்புலவர்கள் 261 பேர். இவர்களுள் எழுவர் மகளிர். எழுநூறு பாடல்களில் 348 பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. செருமானிய மொழி பெயர்ப்பு நூலில் மேலும் பல புலவர்களின் பெயர்கள் இருக்கின்றனவாம்.

அர்சவர்தனனின் அவைக்களப் புலவனுன பாணன் தான் இயற்றிய அர்சசரிதத்தில் இம்மன்னன் அகப் பாடல்களைத் தொகுப்பித்த செயலைக் கீழ்க் கண்டவாறு பாராட்டிக் கூறுகிருன்.

> ''அரசர்கள் ஒளிமிக்க மணிகளையும் விலை மிகுந்த அணிகலன்களையும் கருவூலத்தில் விரும்பிச் சேர்த்து வைப்பது போல, சாதவாகன மன்னன் ஆளன் என்றும் அழியாத அகப் பாடல்களைத் தொகுத்து வைத்திருக்கிருன்''

சாதவாகன மன்னரின் மரபு பிராகிருதத்தில் சாலாஹன மரபு எனப்படுகிறது. சாதவாகன என்னும் சொல்லுக்கு விரைந்த ஊர்தி (வாகனம்) களையுடையவர் என்று பொருள் கூறுகின்றனர். தமிழகத்து வணிகச் சாத்து வட இந்திய மொழிகளில் 'சார்த்த வாஹ்' எனப்படும். வணிக மரபிலிருந்து வந்த மன்னர் மரபு சாத்து-சாத்தர் சாத்து வாணிகர்-சார்த்தவாஹ்-சாதவாஹன என மருவியிருக்கக் கூடும். பழங்கால வணிகச்சாத்தினர் நூற்றுவர், இருநூற்றுவர், ஐந்நூற்றுவர் எனக் குழுக்களாகவே தரைவழி வணிகம் செய்ததைப் பழங்காலப் பிராகிருத நூல்களாலும் தமிழ்க் கல்வெட்டுகளாலும் அறியலாம். வணிகக் குழுவின் தலைவன் சாத்துவன் என அழைக்கப்பட்டான். கோவலனின் தந்தை நிலவழி வணிகர் குழுவின் தலைவனுதலால் மாசாத்தன் எனப்பட்டான். ஆரியப்படையெடுப்பின்போதும் ஆந்திரர் சேரன் செங்குட்டுவனுக்கு உற்ற நண்பராய் விளங்கினர்.

ஆதலால் ஆள மன்னன் தமிழிலக்கிய மரபையொட்டி அகப் பாடல்களைத் தொகுத்ததில் வியப்பில்லை. ஆனுல் திணை துறை பிரிக்கப்படாதது இந்நூலில் ஒரு குறையாகும்.

நிலவமைப்பு

தொகுக்கப்பட்டுள்ள எழுநூறு பாடல்களில் கங்கையும் இமயமும் குறிக்கப்படவில்லை. யமுனை ஓரிடத்திலும் விந்தியமலை பல

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடங்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. கோதாவரி, நருமதை, தபதி ஆகிய ஆறுகளும் நாட்டுப்புற இயற்கையமைப்பும் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன. கடல், தலைநகரம், குதிரை, பிராமணர் பற்றிய குறிப்புகள் இல்லை.

நெல்வயல், எள் விளைந்த நிலம், சணல் விளைச்சல் ஆகிய வற்றைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. முற்றிலும் நாட்டுப்புறச் சூழலே இப்பாடல்களுக்குத் தோற்றுவாய் அளித்துள்ளது.

ஆந்திர சாதவாகனர் காலத்தில் இன்றைய மகாராட்டிர மாநிலமும் ஆந்திரரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இம்மன்ன ரின் தலைமையகமான குந்தள நாட்டின் வடபால் பிராகிருதமும், தென்திசை இருபாலும், தெலுங்கும் கன்னடமும் பேச்சு மொழியாக இருந்திருத்தல் வேண்டும்.

ஆந்திர மன்னரின் அவையிலிருந்த பிராகிருதப் புலவர்கள் பல் வேறு பகுதி மக்களோடு நாட்டுப் புறங்களில் பழகி அவர்களின் வாழ்வின் கூறுபாடுகளை அழகிய பாடல்களாக வடித்துத் தந்துள்ளனர்.

நாட்டுப்புற வாழ்க்கை

நாட்டுப்புறங்களில் வாழ்ந்தவர் பெரும்பாலும் உழவர்களே. இவர்கள் நெல் விளைத்தனர். துவரை, சணல் போன்ற புன்செய்ப் பயிர்களையும் விளைத்தனர். உழவர்கள் ஒவ்வோர் ஆண்டும் முதலேர் கட்டுதலைப் பொன்னேர் பூட்டும் விழாவாகக் கொண் டாடுவர். கற்புடைய இல்லத்தரசி கலப்பைக்குக் குங்குமப் பொட்டிடுவாள், மகளிர் உழவர்க்குச் சோறு எடுத்துச் செல்வர்.

நாட்டுப்புற மக்கள் கால்நடைகளை உயிராக மதித்தனர். தன் எருமைக்கடா ஒன்று இறந்தபோது உழவன் அதன் கழுத்து மணியை வேறொன்றுக்குக் கட்ட மனமின்றி வருந்தினான். மக்கள் நகர வாழ்க்கையை விட நாட்டுப்புற வாழ்க்கையைப் பெரிதும் விரும்பினர்.

ஊர்த்தலைவனுக்கு அடங்கிச் சிற்றூர் மக்கள் வாழ்ந்தனர். ஊரைக்காப்பது அவன் கடமையாக இருந்தது. ஊர்த்தலைவன் மகன் ஊர்த்தலைவனானான். வீடுகளைச் சுற்றி வேல்களால் வேலியிடு வதும் உண்டு. வீடுகளில் கடிநாய் வளர்க்கப்பட்டது. ஒருநாய் அரிமாவால் (சிங்கத்தால்) கொல்லப்பட்டது.

சில ஊர்களில் பண்பில்லாத இழிந்தவர்களும் வாழ்ந்தனர். வறுமையும் நிலவியது. பாலைநிலத்தில் நீரைத்தேடி அலையும் துன்பத்தை அறிந்திருந்தார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாமரம் துளிர்ப்பதும் மலயமலேயிலிருந்து தென்றல் வீசுவதும் மக்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக இருந்தன. காடுகள் தீப்பற்றி எரியும்போது மானினம் அஞ்சி ஓடின.

ஏரி நீர் நெல் வயலுக்குப் பாய்ந்தது. ஊருக்குக் குடிநீராகவும் பயன்பட்டது. தவசங்களைப் புடைக்க மகளிர் முறங்களைப் பயன் படுத்தினர். குறிஞ்சி, முல்லே, மருதம் எனப்படும் மலே, காடு, நெல்வயல் ஆகிய பகுதிகளில் சிற்றூர்கள் அமைந்திருந்தன. கடற்கரைச் சிற்றூர்கள் குறிப்பிடப்படவில்லே.

மலேக்குன்றூர்களில் விரிந்த கிளேகளில் செறிந்த பூக்களோடு கடம்பு மரங்கள் மணம் பரப்பின. கருங்கற் பாறைகளினிடையில் சிறிய அருவிகள் சலசலத்து ஓடின. மயில்கள் தோகை விரித்துக் களித்தாடின.

காட்டகத்திருந்த சிற்றூர்களில் ஆடு மாடு எருமை ஆகிய மூவகைக் கால்நடைகளும் வளர்க்கப்பட்டன. ஆயனின் குழலோசையும் ஆயமகளிரின் வளேயோசையும் அகமகிழ்ச்சியை மிகுவித்தன.

மலேயிலும் காட்டிலும் வாழ்ந்த வேட்டுவர் கொடிய விலங்குகளேக் கொன்றனர். வேட்டுவர் யானேயால் கொல்லப்படுவதும் உண்டு. வேட்டுவன் தன் அம்பருத்தூணி நிறைய அம்புகளே வைத்திருந்தான்.

நெல் வயல் நிறைந்த மருத நிலத்து மக்கள் செல்வமும் நாகரிகமும் மிகுந்தவராயிருந்தனர். பலவகை வண்ண உடைகளே உடுத்தனர். பல விழாக்களேக் கொண்டாடினர். ஆண்களிலும் பெண்களிலும் பரத்தமை யுடையோர் சிலரிருந்தனர். நாட்டுப்புற மக்கள் பாடல், கூத்து ஆகிய கலேகளில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

தச்சர், குயவர், தட்டார், கொல்லர், ஆகிய தொழிலாளர்களும் சிற்றூர்களில் வாழ்ந்தனர்.

மகளிர்

மகளிர் பலவகைப் பூக்களேச் சூடிக்கொள்வதில் மகிழ்வு மிக்கவராயிருந்தனர். வளேயலும் நெற்றிக் குங்குமமும் மங்கலமானவையாகக் கருதப்பட்டன. கருநிற மகளிர் மிக்க அழகுடையவராகக் கருதப்பட்டனர். கருநிறம், செந்நிறம், மஞ்சள் நிறம், வெண்ணிறம் கொண்ட மகளிர் வாழ்ந்திருந்தனர்.

மகளிர் தாம் விரும்பிய ஆடவரையே மணந்தனர். பெண்ணின் இசைவறிந்தே பெற்ரேர் மணம் புரிவித்தனர். புதுப் புடவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடுத்துக்கொள்ளும் போது மிகவும் மகிழ்ந்தனர். மகளிர் முன்றுனையால் தலையைப் போர்த்திருந்தனர். அது முகத்தை மறைக்கும் திரையாகவும் பயன்பட்டது. மகளிர் நீலநிறப் புடவை யையும் உடுத்தனர்.

மகளிர் விழாவின்அறிகுறியாக மஞ்சள்நிறப்புடவையுடுத்தனர். மகிழ்ச்சிக் காலங்களில் செவ்வாடை உடுப்பதும் உண்டு. மகளிர் பூப்படையும் நிகழ்ச்சி இல்லத்து நன்னிகழ்ச்சியாகக் கொண்டாடப் பட்டது. பூப்புற்ற ஆடை 'ஆனந்தபட' என அழைக்கப்பட்டது. மாத விலக்கின்போது நெற்றியில் சிவப்புச் சாந்து அணிந்தனர்.

வழக்கங்கள்

மகளிர்க்குக் கண் இடந்துடித்தல் நற்குறியாகக் கருதப் பட்டது. மகளிர் அசோக மரத்தை உதைப்பதால் அது நன்கு தளிர்த்துத் தழைக்கும் என்று கருதப்பட்டது. மகளிர் பாடலிலும் ஆடலிலும் சிறந்திருந்தனர். பொன், முத்து, பவழம், வயிரம் முதலியவற்றுலான அணிகலன்களை அணிந்திருந்தனர். பனை ஓலை களிலான காதணிகளை குறிப்பிட்ட விழா நாட்களில் அணிந்தனர். மகளிர் ஏரி போன்ற நீர் நிலைகளில் நீராடினர். மாலையில் விளக் கேற்றி மலர் தூவி வழிபடும் வழக்கம் இருந்தது. உடம்பின் இடப் பகுதியும் வலப்பகுதியும், முழுதும் ஒத்திருந்தால் அவள் மிகவும் அழகிய பெண்ணாகக் கருதப்பட்டாள்.

குடும்பப் பெண் தலைநிமிராமல் பார்க்க வேண்டும், பல் தெரி யாமல் சிரிக்க வேண்டும், வாயிலைக் கடக்காமல் நடமாட வேண்டும் என்னும் வழக்கம் நிலைபெற்றிருந்தது.

வளமான வீடுகளில் வேலைக்காரிகள் இருந்தனர். மகளிர் கிளிகளை வளர்த்தனர். நிலத்தில் விளைபொருள்களுக்காக மகளிர் காவலிருப்பர்.

திருமணம்

திருமண நாவில், மகளிர் மங்கலப் பாடல்களைப் பாடித் திருமணம் நடத்தினர். அப்பாடலில் மணமகனின் பெயரைக் குறிப்பிடும் போது மணமகள் நாணமும் மகிழ்ச்சியும் கொள்வாள். மணமக்கள் கைகோர்த்துக் கொள்வர். மணமான நான்காவது நாள் மண மக்கள் பிரிந்திருக்க வேண்டும் என்னும் வழக்கம் நிலவியது. மண மகள் பட்டாடை அணிந்திருந்தாள்.

மாமியார்

மாமியாரின் காலில் விழுந்து மருமகள் வணங்குவது வழக்கம். மருமகளின் மனத்துயர் கண்டு மாமியார் கண்ணீர் விட்டு வருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வதுண்டு. சில மாமியர் மருமகளிரைச் சினந்து பேசினர். பிரிவுக் காலத்தில் மருமகளை மாமி தேற்றி ஆறுதல் சொல்வது வழக்கமாக இருந்தது.

கற்பின் பெருமை

பிராகிருத மொழியைப் பேசிய மக்கள் தமிழரைப் போன்றே மகளிரின் கற்புக்கு முதன்மை அளித்திருந்தனர்.

ஒரு புலவர், 'முள் மலரே, உன்னிடமிருந்து கன்னிப்பெண்கள், சினமும் உறுத்துந் தன்மையும் மெல்லியல் மகளிர்க்கும் தேவை என்பதை உணர்வார்களாக. வளையொலிக்க மங்கல மடந்தையாக நடக்க வேண்டியதன் இன்றியமையாமையை அது உணர்த்து கிறது' என்கிருர்.

மற்றொரு புலவர் தன் பாடலில், 'கன்னிப்பெண் கற்பிழந்தாள் என்பதைக் காணக் கூசிய பறவைக் கூட்டம், ஓ, ஓ என எள்ளி நகையாடுவது போல இறகுகளை அடித்தவாறு (கைகொட்டிச் சிரிப்பதுபோல்) பறந்து செல்கின்றன' என்கிருர். இப்பாடல் களால் கற்பென்னும் திண்மை மகளிர்க்குத் தேவை என்பதை உணர்த்தியிருக்கிருர்கள்.

கிழவனுக்கு மாலையிட வேண்டிய கட்டாயத்தால் இல்லறம் ஏற்றவள் தன் கணவன் கிழவன் என்பதற்காகக் கற்பிழக்காமல் மிகுந்த மன உறுதியோடு வாழ்கிருள் என்று, மற்றொருத்தி, கற்பின் செல்வியாகக் காட்டப்படுகிருள்.

ஓர் உழவனின் மனைவி கற்பிழந்ததால் பொன்னேர் கட்டும் போது ஏருக்குக் குங்குமப் பொட்டிட அவள் கை நடுங்கியது என்று கூறப்படுகிறது.

வேடனுக்குப் பிறமகளிர் சிலர் காமக்கிழத்தியராய் இருந்தனர். அவர்கள் தம்மை யானை மருப்பினுலும் பிற விலைமதிப்பு மிக்க அணிகளாலும் ஒப்பனை செய்து கொண்டிருந்தார்கள். அவர் களிடையில், வெறும் மயிலிறகு மட்டும் சூடிய வேடன் மனைவி பெருமிதமாகக் கணவனேடு நடந்து சென்றபோது ஏனைய காமக் கிழத்தியர் பொலிவிழந்து காணப்பட்டனர் என்னும் மற்றொரு காட்சியும் கற்புடைய இல்லத்தரசியின் பெருமையை எடுத்துக் காட்டுவதாயிருக்கிறது.

ஊருக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அல்லது காட்டில் தீப்பற்றினுல் அது கற்பிழந்த மகளிரால் நேர்ந்தது என்று அக்கால மக்கள் நம்பினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் கணவரை உயிரினும் மேலாக மகளிர் மதித்தனர். குலமகளொருத்தி தன் கணவனை நோக்கி, 'நீங்கள் எத்தனைத் தவறுகள் வேண்டுமாயினும் செய்யுங்கள்; நான் பொறுத்துக் கொள்வேன். ஏனெனில், நற்பண்புகளால் நிரம்பிய என்னுள்ளத்தில் தங்களைப் பற்றிய தவறான எண்ணங்கள் புகவே முடியாது' என்கிறாள். இத்துணை உயர்ந்த பண்புடையவளை மனைவியாகப் பெற்றவனுக்குத் தவறு செய்ய மனம் வராது என்பது வெளிப்படை. கற்பு மகளிரைத் தெய்வமாக்குகிறது.

பொது வாழ்க்கை

சாதவாகனரின் காலத்தில் ஏழ்மையும் இருந்தது. செல்வ வாழ்வும் செழித்திருந்தது. உயர்ந்த தெய்வ நம்பிக்கையும் இருந்தது. போலித் துறவிகளும் இருந்தனர். சாதவாகன மன்னன் ஆளன் பாடிய பாடலொன்றில் ஒரு போலித் துறவியை நோக்கி, 'துறவியே' ஆற்றங்கரையிலுள்ள கரஞ்சச் செடியின் குச்சியால் பல்துலக்கினால் விண்ணுலகம் செல்லலாம் என்று சொன்னாயே. இன்னும் உன் கால் ஏன் நிலத்தில் பதிந்திருக்கிறது (கா. ச. 167) என்று கேட்கிறான். ஞானத்தால் உயர்ந்த துறவிகள் போற்றப்பட்டனர்.

ஒவ்வொரு ஊரிலும் ஊர்த்தலைவனே ஆட்சித் தலைவனாக இருந்தான். ஊர் மக்களை கொள்ளை, போர், உள்ளூர்ப்பூசல், கொடிய விலங்குகள் ஆகியவற்றிலிருந்து காத்தான். ஏரியிலிருந்து வீடுகளுக்குக் குடிநீர் வருமாறு நீர் வழங்கும் திட்டம் செய்திருந்தான்.

செல்வர்கள் பணத்தை மண்ணில் புதைத்து வைத்தனர். சிலர் புதையல் வைத்த இடத்தை மறந்துவிட்டுத் தேடினர்.

கணவனில்லாத நேரத்தில் மகளிரைக் கவர்ந்து செல்லும் கள்வரும் அக்காலத்திருந்தனர். வழிமறித்துக் கொள்ளையடிக்கும் ஆறலைக்கள்வர் மலைப்பாதைகளில் இருந்தனர்.

ஆண்கள் கெட்டுப்போய்விட்டாலும் திருந்தக்கூடும். பெண்கள் கெட்டுப்போய்விட்டால் குடிப்பெருமை அழிந்துவிடும் என்று நம்பினர். ஆற்றங்கரையில் தீப்பிடித்தபோது அங்கு யாரோ ஒரு பெண் தீயொழுக்கத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று ஊரார் பேசிக் கொண்டனர்.

தீயொழுக்கத்தில் ஈடுபட்ட பெண்களும், விலை மகளிரும் அக்காலத்தில் நகரப் பகுதிகளில் மிக்கிருந்ததாகத் தெரிகிறது. இத்தகையோர் சிற்றூர்களிலும் வாழ்ந்தனர். மகளிரும் மதுவருந்தினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமயமும் தெய்வ வழிபாடும்

சாதவர்கனரின் காலத்தில் பல்வகைத் தெய்வ வழிபாடுகள் இருந்தன. சிவபெருமான் முழுமுதற் கடவுளாகக் கருதப் பட்டான். கண்ணனை முல்லை நில மக்கள் வழிபட்டனர். பிள்ளை யார் (விநாயகர்) வழிபாடு பெருகியிருந்தது. கொற்றவைக்கு எருமைக்கடா காவு இடப்பட்டது.

இந்து சமயம் தவிர பௌத்த சமயமும் அங்குப் பரவியிருந்தது. புத்த பீடிகைகளை, செவ்வாடை அணிந்த துறவிகள் பெருங்குழு வாகக் கூடித் தரையில் வீழ்ந்து வணங்கிய காட்சி வண்ணிக்கப் படுகிறது.

துறவிக் கோலத்திலிருந்த போலித் துறவிகளை மக்கள் இகழ்ந்த னர். ஒவ்வொரு ஊரிலும் கோவில்கள் இருந்தன. அக்கோவில் களில் பெரும் விழாக்கள் நடைபெற்றன. விழா நாட்களில் வர வேற்பு வளைவுகள் மலர் மாலைகளால் ஒப்பனை செய்யப்பட்டிருந்தன.

சூரியனை வணங்கும் வழக்கம் இருந்தது. சமயப் போராட்டமும் இருந்தது எனத் தெரிகிறது. விநாயகரை வணங்கியவனை அவ்வூர் இளைஞர் இடித்துரைத்தனர். அக்கணபதியை அவன் தலைக்குத் தலையணையாக வைத்து இகழ்ந்தனர். காலையில் சிவனையும் மாலை யில் உமையையும் வணங்கி வந்தனர். சமய உறழ்வு (வாதம்) செய்தவர் மரக்கிளைகளை நட்டு சொற்போரு (வாது)க் கழைத்தனர்.

தமிழரைப் போன்றே அக்கால ஆந்திரரும் சமயப் பொறை மிக்கவராயிந்தனர். இரவு நேரத்தில் மதுக மலரைப் பறிக்க மாட்டார்கள். கடம்ப மலரின் மணம் அனைவரையும் சொக்க வைத்தது.

வணிகமும் பிற தொழில்களும்

சாதவாகனரின் காலத்தில் வடக்கில் பண்டமாற்று முறை நிலவி யது. ஓர் உழவன் தன் போர்வையைக் கொடுத்து மாடு வாங்கி னான். உப்பை மலைபோல் குவியலாகக் கொட்டிச் சந்தைகளில் விற்றனர். உப்பு முதல் பச்சை (மரகத)க்கல் வரை எல்லாப் பொருள் களையும் அக்காலத்திய வணிகர் விற்றனர்.

ஏனங்கள் (பாத்திரங்கள்) செய்பவர்களும், மட்பாண்டம் வனைபவர்களும், சங்குவினைஞரும், பட்டாடை நீல ஆடை நெய் பவர்களும், பொன்னாலான அணிகலன்களைச் செய்பவர்களும், தச்சர் களும், கொல்லர் கருமான்களும் தத்தம் தொழில்களில் மேம்பட் டிருந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேட்டுவர் மலைபடு பொருள்களைக் கொணர்ந்து பண்டமாற்றுக விற்றனர். மதுவகைகளைக் காய்ச்சும் தொழிலாளரும் இருந்தனர்.

கரும்பாலைகளும் கரும்பாலை இயந்திரத்தைப் பழுது பார்ப்பவனும் குறிப்பிடப்பட்டிருப்பதால் நெல்லும் கரும்பும் தழைத்த வளநாடாக அப்பகுதி விளங்கியிருக்கிறது என்று தெரிகிறது.

பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள்

மகளிர் தம் கணவன்மாரின் திருவடிகளைக் கழுவுவர். பிரிந்த கணவனுக்குத் தூது அனுப்புவதும் ஓலையனுப்புவதும் உண்டு. ஆய மகளிர் ஒன்றுகூடிக் கூத்தாடுவர். கண்ணனைப் புகழ்ந்து பாடியாடும் இக்கூத்து தமிழ்நாட்டுக் குரவைக்கூத்தைப் போன்றதாகலாம். காதலர் காதலிக்கு விலையுயர்ந்த பொருள்களைப் பரிசளிப்பர்.

நீரிலும் நெருப்பிலும் நடந்து சூளுரைக்கும் பழக்கம் *சியாம சபல சபதம்* எனப்பட்டது. கோடைக்காலத்தில் உடம்பில் சந்தனம் பூசிக்கொள்வர். ஆலமர நிழலில் இளைப்பாறுவர்.

கணவன் இறந்தால் மனைவி தீப்புகுவாள். இந்த உடன்கட்டையேறும் பழைய வழக்கம் தமிழருடையதே என்பது தொல்காப்பியத்தால் தெரிய வருகிறது. இவ்வழக்கம் இந்தியா முழுதும் கி.மு. முதல் நூற்றுண்டுக்கு முன்பே பரவியிருந்தது.

ஊர் தீப்பற்றிக் கொண்டால் பறையறைந்து அல்லது முரசு முழக்கிப் பிறருக்குத் தெரிவித்தனர்.

மாலை மணிவிளக்கேற்றும் போது கண்ணீர்த்துளி விளக்கின் மீது படலாகாது எனக்கருதினர். நல்லவர்கள் வாயில் என்றும் தீச்சொல் வராது என்பது உயர்குடி ஒழுக்கமாக இருந்தது.

இறந்தவரை எரித்த பிறகு சாம்பலிலிருந்து எலும்புகளைப் பொறுக்கி எடுத்து ஆற்றில் விடும் வழக்கம் இருந்தது. மாஞ்செடி, விதையின் தலைப்புறத்திலிருந்து முளைவிட்டுக் கிளம்பினுல் தீங்கு நேரும் என்று நம்பினர்.

விந்திய மலைமுகட்டில் யாரும் ஏறக்கூடாது என ஊர்த்தலைவன் கட்டளையிட்டிருந்தான்.

உயிர் வகைகளும் பயிர் வகைகளும்

மான், யானை, அரிமா (சிங்கம்), எருது, நாய், ஆகிய விலங்குகளும், நண்டு, தவளை, தேனீ, வண்டு ஆகிய உயிர்களும், மயில், புரு, அன்னம், காக்கை, கொக்கு, குயில் முதலிய பறவைகளும் குறிப்பிடப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மரங்களில் அசோகு, கடம்பு, மாமரம், பனை மரம், ஆல மரம், ஆகியவை சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன, கூல (தானிய) வகைகளில் நெல், துவரை, எள், பயறு வகைகளும் பழவகைகளில் மாம்பழம், நாவற்பழம், எலுமிச்சம் பழங்களும் கூறப்பட்டுள்ளன.

மலர்களுள், தாமரை, குவளை, வகுளம், காசம், குந்தம், குருவகம், கந்தோடம், பலாசம், குசும்பம், மதுகம், சோபாலிகை, பாடலம், மருவகம் ஆகியவை இடம் பெறுகின்றன.

பூங்காக்களும், பொழில்களும், ஆற்றங்கரையின் அழகுக்காட்சிகளும், பன்னிற மலர்கள் பூத்துக்குலுங்கும் குன்றங்களும் நெடிய மலைகளும் அக்கால மக்களுக்கு இயற்கைக் காட்சிகளாகப் பொலிந்தன.

கால்நடை வளர்ப்பில் மிகுந்த கருத்துச் செலுத்தினர். கண்ணனைப் பற்றியும் ஆயமகளிரைப்பற்றியும் குறிப்பிடும் போதெல்லாம் புலவர்கள் ஆனிரைகளையும் அவற்றின் பெருமையையும் குறிப்பிடுகின்றனர்.

விழாக்களும் பொழுது போக்கும்

உழவர்க்குப் பொன்னேர் பூட்டுவதும் அறுவடை செய்வதும் விழாவாக இருந்திருக்கிறது விழாக்கள் அனைத்தும் முழுநிலா நாளில் நடைபெற்றன.

யாரையாவது வழியனுப்பும் போது மஞ்சளாடையுடுத்து நிறைகுடம் வைத்து அனுப்பி வைப்பது வழக்கமாயிருந்தது. விழா நாட்களில் மகளிர் வீடு தோறும் சென்று இனிப்பு வழங்கி வந்தனர்.

விழா நாளில் பல்வகை இன்னிசைக்கருவிகள் முழங்கின. அனைவரும் மலர்மாலை சூடுவது வழக்கமாக இருந்தது. மகளிர் மிகுந்த ஒப்பனை செய்து கொண்டனர். நறுமணப் பொடிகளைத் தமக்கு நெருங்கியவர் மீது தூவுவர்.

குடி பெயர்ந்து போய்விட்ட ஊரில் இருந்த தெய்வம் வழிபடுவாரற்றுக் கிடந்தது.

விழாக்காலங்களில் மகளிர் முத்தும் வயிரமும் பதித்த காதணிகளை அணிந்திருந்தனர். தாமரை வடிவக் காதணிகளும் இருந்தன. நாவல் இலை போன்று பொன்னால் செய்யப்பட்ட காதணிகளைச் சிலர் அணிந்திருந்தனர். நாட்டுப்புற மகளிர் காதில் ஓலைச்சுருளை அணிந்திருந்தனர். விழா நாளில் நறுமணப் பொடிகளை ஒருவர் மீது ஒருவர் தூவினர். பொழில்களும், குன்றமும், ஆற்றங்கரையும், அழகிய பூஞ்சோலைகளும் பொழுது போக்கிடங்களாக இருந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலை அறிவியல் துறை வளர்ச்சி

கார்கால மேகந்திரளுதல், மாப்பூத்தல், மலயமலையிலிருந்து தென்றல் வீசுதல், பல்வேறு மலர்கள் பூத்தல் முதலிய அடையாளங்களால் பருவகாலங்களை அறிந்தனர்.

கல்வியும் பண்பாடும் பெருகியிருந்தது. மகளிரில் எழுதப் படிக்கத் தெரிந்தவரும் இருந்தனர். கல்லாத மகளிர் கணவர் பிரிந்து சென்ற நாட்களை விரல்களால் ஒற்றிக் கணக்கிட்டனர்.

ஓவியக்கலை சிறந்திருந்தது. ஓவியம் வரையும் திரைச்சீலை, தூரிகை ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. ஓவியத்தில் வரையப்பட்ட பலகாரத்தை உண்ண முடியுமா என்பது அக்காலத்தில் பழமொழியாக இருந்தது. பல்வகை இசையமைந்த பாடல்களைப்பாடவும் நாடகம் நடிக்கவும் கற்றிருந்தனர். ஆடவரும் மகளிரும் பெரும் புலவர்களாக விளங்கினர். சாதவாகனர் காலத்தில் ஓரிலக்கப் பாடல்கள் தொகுக்கப்பட்டன.

வான நூலறிவும் அவர்களுக்கு இருந்தது. வானத்து விண்மீனிருப்புகளையும் கோள் நிலைகளையும் வான நூலறிஞர் கரும்பலகையில் வெண்கோடிட்டுக் கணக்கிட்டனர்.

பனை ஓலையில் செய்திகளை எழுதியனுப்பும் முறை வழக்கிலிருந்தது. பல தொன்மக்கதைகள் அவர்களுக்குத் தெரிந்திருந்தன. திருமால் ஈரடியால் மண்ணையும் விண்ணையும் அளந்தது, வாமனாக வந்து மதுவென்னும் அரக்கனையும்நெடுமாலாகவந்து மாவலியையும் கொன்றது, பாற்கடலைக் கடைந்தது ஆகியவற்றைத் தெரிந்திருந்தனர். பாரதக்கதை கேட்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

பண்பாட்டுக் கூறுகள்

வட நாட்டில் வாழ்ந்தாலும் பிராகிருத மொழி பேசினாலும் அம் மக்களின் பண்பாடும் தமிழர் பண்பாடும் ஒன்றியிருந்தன என்பது இந்நூலின் பலவிடங்களிலும் காணக்கிடக்கிறது.

மனைவி கணவனின் வருவாய்க்கேற்ற வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதை, 'வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' எனும் தொடரால் வள்ளுவர் குறிப்பிட்டார். காதா சப்தசதியில் கணவனின் வறுமை நிலையை உணர்ந்த கருவுற்ற பெண் தன் வயவுறு வேட்கைகளை அடக்கிக்கொண்டு, 'நெருங்கிய நண்பன் வீசிய கடுஞ்சொல்லை யாரிடத்தும் சொல்லாமல் காப்பது போல் காக்கிறாள்' என்று விக்கிரன் என்னும் புலவர் பாடுகிறார்.

அலக்கன் என்னும் புலவர் சான்றோரின் இயல்பைக் குறிப்பாக வெளிப்படுத்தும் பாடலில், பறவைகளும் விலங்குகளும் தம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வயிற்றை மட்டும் நிரப்பிக் கொள்கின்றன. உலகில் சான்றோர் மட்டும், பிற உயிர்களின் வயிற்றைப் பற்றியும் துன்பங்களைப் பற்றியும் கவலைப்படுகிறார்கள் என்று கூறுகிறார்.

சவாசித்தன் என்னும் புலவர், 'அறிவும் திறனும் மிக்கவனின் வெறுப்பைப் பெறலாம்; பழி சுமந்து நிற்பவனின் அன்பைப் பெறக் கூடாது' என்கிறார்.

இன்சொற்களிருக்க இன்னாத சொற்களைப் பேசுகிறார்களே என்று திருவள்ளுவர் வருந்துவது போன்றே பிராகிருதப்புலவர் ஒருவரும் 'வாய்ப்பு நேரும் போது இன்சொற்களால் குளிரப்பேசிப் பகைவரையும் மகிழ்விக்கும் ஆற்றல் ஒரு சிலருக்குத்தானே தெரிந்திருக்கிறது' என்று வருந்துகிறார்.

வப்பசாமினே என்னும் புலவர், 'குலமகளிரால் விரும்பப்படும் ஆடவர் முதன்மையான பண்பாடுள்ளவராக இருக்க வேண்டும். பண்பாடின்றி வலிமையும் வீரமும் மட்டும் உள்ள ஆடவனை இரண்டாந்தரத்தவனாகவே கருதுவர் என்று கூறுகிறார்.

சாதவாகன மன்னன் ஆளன் பாடிய பாடலொன்றில் சான்றோரின் இயல்புகளுள் மந்தணம் (இரகசியம்) காத்தல் இன்றியமையாதது என்கிறார். அப்பாடலில், நல்லவர்களின் மந்தணங்களைச் சாவுக்குப்பின் நெருப்பால்தான் நெருங்க முடியும். எந்தப் பூசற் காலத்திலும் இக்கட்டான நேரத்திலும் அவர்கள் தம் மந்தணங்களை வெளியிடுவதில்லை என்கிறார்.

கண்ணகி தன் துயரத்தைப் பெரியோர்க்குக் காட்டாமல் மறைத்தாள். இதைப் போலவே மற்றொரு குலமகளை வாயவன் என்னும் புலவர் படம் பிடித்துக் காட்டுகிறார். அப்பாடலில், 'கணவனைப் பிரிந்த துயரத்தை வீட்டில் பெரியோர்க்குக் காட்டாமல் கண்ணீரை இமைக்குள்ளேயே தேக்கி வைத்திருந்து வாயிற்புறம் சென்று யாரும் காணாதபோது கண்ணை மூடினாள். கண்ணீர்த் துளிகள் தாமாகக் கீழே சொட்டின' என்கிறார்.

இத்தகைய அரிய பண்பாட்டுக் கூறுகள் இந்நூலில் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

கற்பனை நலம்

ஆந்திரப் பேரரசரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களின் கற்பனை காலங்கடந்து நிற்க வல்ல இலக்கியக் கருவூலமாக இலங்குகிறது.

பிரிவால் வருந்தும் தலைவி நிலவை நோக்கி, நிலவே இப்பொழுது என் கணவர் மீதும் குளிர்ந்த ஒளி வீசிக்கொண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டிருப்பாய். அவரை எந்த நிலாக்கதிரால் தொடுகிருயோ அதே நிலாக்கதிர்க் கையால் என்னையும் தொடமாட்டாயா' என்று கேட்கிருள்.

இராமழை பெய்தபின் விடியற்காலையில் விந்திய மலையை மூடிய வெண்மேகங்கள் (மஞ்சு) வெளியேறுவது பெரிய பாம்பு தோலுரிப்பது போன்றிருக்கிறது என்று புலவர் பாடுகிருர். மற்ருெரு புலவர் விந்திய மலையில் ஆங்காங்குச் சிதறிக்காணப்படும் வெண் மேகங்களை, கண்ணன் உடம்பில் தெளித்த வெண்ணெய்ச் சிதறலுக்கு உவமிக்கிருர்.

பிரிவால் வருந்தும் தலைவியின் மையிட்ட கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் மார்பில் கருங்கோடாகத் தெரிந்தது. இக்காட்சி மரத்தை வாளால் அறுக்கும் தச்சன் நூலாலிட்ட கோடு போலவும், பிரிவுத்துன்பம் என்னும் வாள் அவள் நெஞ்சத்தை இனி அறுக்க நெருங்குவது போலவும் காணப்படுவதாகப் புலவர் பாடுவது உயர்ந்த கற்பனை நயத்தைக் கவினுறப்படம் பிடித்துக் காட்டு கிறது.

வேட்டுவன் மான் வேட்டைக்காகப் போகிருன். ஆணும் பெண்ணுமாக இணைமான்கள் நிற்பதைக் கண்டு ஆண்மானுக்கு இலக்கு வைத்து வில்லை வளைக்கிருன். இதையறிந்த பெண்மான் ஆண்மானைக் காக்கும் பொருட்டு அம்புக்கு இலக்காக முன்னே வந்து நிற்கிறது. மறு நொடி ஆண்மான் பெண்மானைக் காக்கும் பொருட்டு அம்புக்கு இலக்காக முன்னே வந்து நிற்கிறது. இக் காட்சியை கண்ட வேடனுக்குக் கண் கலங்கியது. வில்லையும் அம்பையும் எறிந்து விட்டுச் சோர்ந்து உட்கார்ந்து விட்டான். இதனைக் கேள்விற்ற மற்ருெரு வேடன் மான்களை வேட்டையாடு வதை விட்டு விட்டான். மான்தோல் தேவைப்பட்ட போது வேருெரு வேடனிடம் வாங்கிக் கொண்டான். இத்தகைய அரிய கற்பனைகள் பண்பாட்டின் உயர்வை மிகுத்துக்காட்டுகின்றன.

புலவர் காட்டு மக்களையும் நாட்டுப்புற மக்களையும் பாடலின் கருப்பொருளாகக் கொண்டு பாடுவதும், பண்பாட்டின் உயர்வு நகரத்தைவிட நாட்டுப்புறத்தையே சார்ந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

ஒரு பெண்ணின் அழகைப் பாட வந்த புலவர் அவள் அவ்வூர் மக்களைத் தேவராக்கி விட்டாள் என்ருர். அவ்வூர் மக்கள் அனைவரும் அவளுடைய இணையில்லாப் பேரழகை விழித்தகண் இமைக்காமல், பார்க்கிருர்களாம். ஆதலால், ஊர் மக்கள் அனைவரையும் இவள் தேவர்களாக்கி விட்டாள் என்ருர். இத்தகைய அரிய கற்பனை நயங்கள் இந்நூலில் மிகுந்துள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உவமை நலம்

காதாசப்த சதியில் கையாளப்பட்டுள்ள உவமைகள் கருத்துச் செறிவும் நயமும் மிக்கவை.

கணவனைப் பிரிந்த துயர் தாளாமல் இமைவழி கண்ணீர்த் துளிப்பதற்கு ஈரத்துணியின் ஓர விளிம்பில் தண்ணீர் சொட்டுவது உவமையாகக் கூறியிருப்பது புதுமையானதாகும். நெறிகெட்டு அலைபவனுக்குக் காட்டாற்றில் மிதந்து வரும் மரம் பல இடங்களில் மோதி முறிந்து கரையில் ஒதுக்கப்பட்டு யாராலோ எரிக்கப்பட்டு விடுவது உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. கரையில் ஒதுக்கப் படுவது, அவன் விரும்பிய தீய கூட்டத்தாலும் ஒதுக்கப்படுவதைச் சுட்டுமாறு உவமித்திருப்பது கற்பார்க்கு உவப்பூட்டுகிறது.

அன்பில்லாத வாழ்க்கை எண்ணெய் தீர்ந்த விளக்கைப் போன்றது எனப்படுகிறது. நல்லவர்களின் நட்பு தந்தை பட்ட கடன் மகனுக்கும் தொடர்ந்து செல்வது போல் நீடிக்கும் என்பது நகைச் சுவை கூட்டும் உவமையாக இருக்கிறது.

சில உவமைகள் சான்றோரால் விதந்து ஓதத்தகாதனவாகவும் உள்ளன. அவளுடைய சினம் கணவனைக் கண்டதும் கள்ளக் காதலனைப் போல் ஓடி ஒளிந்து கொண்டது என்பது இத்தகைய உவமைகளுள் ஒன்று.

கருத்தாழம் கொண்ட உவமைகளும் சில உள்ளன. ‘தான் மறைவாகச் செய்த தீவினை (பாவச்செயல்) நெஞ்சை விட்டுக் கணப் பொழுதும் அகலாதவாறு போல இந்த இளையவள் என் நெஞ்சை விட்டு நொடி நேரமும் அகலாமல் காதல் நோயை விளைத்து விட்டாள்’ என்பது அத்தகையது.

முகந்திருப்பிக் கொண்டிருக்கும் சுவரோவியம் போல் துன்பக் காலத்தில் உதவாத நண்பன் காணப்படுகிறான் என்று பாலிதன் என்னும் புலவர் பாடுகிறார்.

உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளை விளக்குவனவாகச் சில உவமைகள் உள்ளன. நல்லவர்கள் மிகுந்த சினம் கொண்டாலும் தீச்சொல் கூறார். அவர்களுடைய வாயில் என்றும் தீச்சொல் வராது. நிலவை இராகு எனும் பாம்பு விழுங்கும் போதும் நிலவு அமுத வொளியைப் பொழிந்து கொண்டிருப்பதில்லையா? என்னும் உவமையை மேற்கோளாக்கிக் காட்டும் பாங்கு பாராட்டத்தக்கது.

பாலை நிலத்தில் நீரைத் தேடி அலைவது போல் இவள் கண்கள் அவனைத் தேடி அலைகின்றன என்னும் உவமை உணர்வின் ஆழத்தைக் காட்ட வல்லதாக உள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரட்டுற மொழிதலாக (சிலேடை) அமைந்த பகுதிகள் உயர்ந்த கருத்துச்செறிவு கொண்டவை. கிழவனுக்கும் நெற்கதிருக்கும் இரட்டுற மொழிதல் கூறப்படுகிறது. நெற்கதிர் முற்றி வளைந்து தொங்கியவாறே பனி நீர் (கண்ணீர்) உதிர்க்கிறது. இனி களத்தைச் சந்திக்க வேண்டி வருமே என்று ஏங்குகிறது. முதிர்ந்த கிழவனும் துயரத்தால் தலை தொங்கிய நிலையில் காலனைச் சந்திக்க வேண்டி வருமே என்று ஏங்குகிறான்.

இத்தகைய பல உவமை நலங்கள் இந்நூலை அணி செய்கின்றன.

தமிழர்க்கும் ஆந்திரர்க்கும் பொதுவாகவிருந்த அகத்துறை நெறிகள்

கடைக்கழக (சங்க) காலத் தமிழர்க்கும் ஆந்திரர்க்கும் அகத்துறை வாழ்க்கை முறைகள் ஏறத்தாழ ஒன்றாகவே இருந்தன.

மலயத்தென்றலின் குளுமையை இருசாராரின் நூல்களும் வியந்து பேசுகின்றன. மகளிரை இற்செறிக்கும் வழக்கம் இருவரிடமும் இருந்தது.

ஆய மகளிர் கண்ணனை நினைந்து ஆய்ச்சியர் குரவை ஆடினர். மாலை அந்தி நேரத்தில் மகளிர் தத்தம் மனைகளில் மங்கல விளக்கேற்றி மலரிட்டு வழிபட்டனர். இவ்விரு நிகழ்ச்சிகளும் தமிழ் இலக்கியங்களிலும் காதாசப்த சதியிலும் பெருகப் பேசப்படுகின்றது.

தலைமகன் தலைவிக்குக் கையுறையாகத் தழையுடை, மலர் ஆகியவற்றைத் தருதல் தமிழிலக்கிய மரபு, காதாசப்த சதியிலும் தலைமகன் தலைவிக்குக் கையுறையாக மலர்மாலை தருகிறான். அதை அவள் பொன்போல் போற்றுகிறாள். திருமண நிகழ்ச்சியில் மகளிர் மங்கல வாழ்த்து பாடுதல் ஆந்திரர்க்கும் தமிழர்க்கும் பொதுவானது.

வானுலக இன்பத்தைவிட கணவன் மனைவி நடத்தும் அன்பு வாழ்க்கை அதிக இனிமையுடையது என்னும் கருத்து இருசாரார்க்கும் பொதுவானதாகக் காணப்படுகிறது.

விழாக்கள் தமிழ்நாட்டைப் போலவே முழுநிலா நாட்களில் நடைபெற்றன. அனைத்து நன்னிகழ்ச்சிகளிலும் மலர்மாலைகளை சூடிக்கொள்வது பொதுவான வழக்கமாயிருந்தது.

போரில் விழுப்புண் படுவதைப் பெரும் பேறாகக் கருதினர்.

நல்லது செய்வதனாலும் தீங்கு வரும். ஆதலால், அவரவர் பண்பறிந்து நன்மை செய்ய வேண்டும்.

2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதலன் 'என் நெஞ்சைத் திறப்பவர்கள் உன்னைக் காண் பார்கள்' என்று கூறுவது 'என் நெஞ்சந் திறப்போர் நிற் காண்குவரே' என்னும் தமிழிலக்கிய வரியை நினைவுறுத்துகிறது.

உரைத்த சூளுரை பொய்க்காமல் காப்பது ஆண்மகனின் கடமையாக இருந்தது.

கார் காலம் வந்து விட்டது என்று தலைவி அஞ்சுவதும், தோழி தேற்றுவதும் தமிழிலக்கியத்துக்கே உரிய மரபாயினும் அது சாத வாகனர் காலத்தில் நாடு முழுதும் பரந்த இலக்கிய மரபாக இருந்தது.

மணமனை காணவந்த செவிலி தலைமகளின் இல்லற நடப்பைக் கண்டு மகிழ்வது கூறப்படுகிறது. காதாசப்த சதியில் திணையும் துறையும் வகுக்கப்படவில்லையே ஒழிய மற்றபடி பாடல்கள் அனைத்தும் தமிழிலக்கிய அகத்துறை நெறிகளையே தழுவியுள்ளன என்பது நன்கு தெளிவாகிறது.

தமிழுக்கும் பிராகிருதத்துக்கும் உள்ள உறவு

சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம், சிறப்பாகத் தமிழரின் நாகரிகம் என்று மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. வடஇந்தியா முழுதும் ஆரியரின் வருகைக்கு முன்பு தமிழ் மொழி ஒன்றே பேசப் பட்டது என்பதற்குச் சான்றாக இன்னும் வட இந்தியாவில் மால்தோ, குருக்கம், பிராகுவி எனுந் திராவிட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன.

வடஇந்திய பழைய தமிழ் மொழியே கி.மு. 1000 ஆண்டளவில் ஆரிய, மங்கோலிய முண்டா மொழிகளின் தாக்குதலால் பிராகிருத மாகத் திரிந்தது. ஆதலால் தமிழுக்கும் பிராகிருத மொழிக்கும் பல ஒப்புமைகள் காணப்படுகின்றன.

1. பிராகிருதத்தில் தமிழைப் போலவே எகர ஒகரக்குறில் எழுத்துகள் இருக்கின்றன. இந்தோ ஐரோப்பிய மொழி களிலும் வட மொழியிலும் இவை இல்லை.

2. வடமொழிக்கே உரிய ர்ரு, ர்ரூ, ல்ரு போன்ற உயிரொலி களும், அம், அஹ எனும் உயிரின ஈற்றெழுத்துகளும் பிரா கிருதத்தில் இல்லை' தமிழிலும் இல்லை.

3. சமற்கிருத மொழிக்கு முற்றிலும் புதிதான பல சொல் வடிவங்கள் இறந்துபடாமல் பிராகிருதத்தில் எஞ்சியுள்ளன. பூதர் எனுஞ்சொல் அத்தகைய சொற்களுள் ஒன்று. இது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமற்கிருத மொழியில் இல்லாத சொல்லென்று பிராகிருத இலக்கண நூலாசிரியரான ஏமச்சந்திரர் குறிப்பிடுகிருர்.

4. ஐந்திரம் என்னும் பழங்கால இலக்கண நூல் தமிழுக்கும் பிராகிருதத்துக்கும் பாலிக்கும் பொதுவான இலக்கண நூலாகக் கூறப்படுகிறது.

5. பிராகிருதத்தில், சொற்களில் இரண்டாம் எழுத்தாக வரும் ககரம் மெலிந்து ஒலிக்கும்

(K-G):- ēka—ēga
loka—lōga

தமிழிலும் சொல்லின் முதலய்ல் அல்லது வல்லின மெய்யைச் சாராத வல்லெழுத்து மெலிந்து ஒலிப்பது இயல்பாக இருக்கிறது. அகம், நகம் (agam, nagam) எனும் சொற்களை நோக்குக.

6. பிராகிருதத்தில் ஒரே 'ச' (sa) தான் இருக்கிறது. சமற்கிருதத்தில் உள்ளது போன்ற ஸ, ஷ எழுத்துகள் இல்லை. தமிழிலும் ஒரே சகரம் இருக்கிறது. ஸ்தூல எனும் சொல் பிராகிருதத்தில் தோரம் எனத் திரியும்; ஸ்த்ரீ எனுஞ் சொல் இத்தி எனத்திரியும்.

7. வடமொழியில் உள்ள அனுஸ்வாரம் எனப்படும் மூக்கொலி சுழியமாகக் (0) குறிக்கப்படாமல் பிராகிருதத்தில் இன மெல்லெழுத்தாக எழுதப்படும். சமற்கிருதத்தில் சிம்ஹ எனுஞ்சொல் பிராகிருதத்தில் தமிழைப்போலவே சிங்கம் என இனமெல்லெழுத்திட்டு எழுதப்படுகிறது.

8. சமற்கிருதத்தில் வினைச்சொற்களின் முதனிலைகள் வல்லின மெய்யீருக நிற்பது போல பிராகிருதத்தில் நிற்பதில்லை. அவை தமிழ்ச் சொற்களைப் போன்றே உயிரீருக நிற்கின்றன.

9. பிராகிருதத்திலிருந்து திரிந்த மாகதியில் ஸ்க, ஸ்ப, ஸ்த எனும் கூட்டொலிகள் புகுந்து விட்டன. ஆனல் இவ்வொலிப்புகள் பிராகிருதத்தில் புகவில்லை. பிராகிருத மொழி பற்றிக் கூறும் போது இம்மொழியின் சொற்கள் மிகுதியாக நாட்டு மக்களின் பேச்சு மொழியிலிருந்து வந்தவையாதலால் இவற்றை வடமொழிச்சொற்களோடு ஒப்பிட முடியாது என்று கிரியர்சன் கூறுகிருர்.

10. பல தமிழ்ச்சொற்கள் திரிந்த வடிவில் பிராகிருத மொழியில் காணப்படுகின்றன. அவற்றுட்சில.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிராகிருதம்		தமிழ்
துவரி	—	துவரை
அண்ணு	—	அண்ணன்
ஐயா	—	ஐயன்
படன்தி	—	பட்டது (கீழேவிழுந்தது)
அத்தா	—	அத்தை
மரவு	—	மறைதல், சாதல்
பாவள	—	பவளம்
ஆமர	—	மாமரம்
குவளய	—	குவளை மலர்
வ்ராயியே	—	வரைக, எழுதுக
மாலாரி	—	பூமாலை விற்பவள், பூக்காரி
குட	—	குடம்

பிராகிருத மொழி சமற்கிருதத்திலிருந்து கிளைத்த மொழி என்பதைப் பிராகிருத நூலாசிரியர்கள் ஒப்புக்கொள்வதில்லை. 'பிராகிருத சப்தானுசாசன' என்னும் இலக்கண நூலாசிரியரான திரிவிக்கிரமன் என்பவரும், பிராகிருதம் எனப்படும் உள்நாட்டு மொழி தனக்கென தனித்த இலக்கணக் கட்டுக் கோப்புடையது. இதற்குச் சமற்கிருதம் மூலமொழியும் அன்று; ஆதாரமானதும் அன்று என்று கூறுகிறார்.[1]

சாதவாகன மன்னர் காலத்தில் ஆந்திர அரசு இன்றைய மகாராட்டிரம் ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களையும் உள்ளடக்கி இருந்தது பிராகிருதச் சாய்கால் மிகுந்த ஆந்திரரின் மொழி மராத்தி மொழியாகவும் பிராகிருதச் சாய்கால் குறைந்த ஆந்திரரின் மொழி தெலுங்காகவும் பிரிந்து விட்டது.

அக்கால ஆந்திர மன்னர்க்குக் கிழக்கே வங்கக்கடலும் மேற்கே அரபிக்கடலும் எல்லைகளாகக் கூறப்பட்டிருப்பதால் இவர்களின் நிலைமுறைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முந்திய மொழி, முற்றிலும் திரவிட மொழியாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அதனாற்றான், தமிழ்ப்பண்பாட்டின் கூறுகளான மாலைமனை விளக்குறுத்தல் முதல் உடன்கட்டை ஏறுதல் (ஆஞ்சிக்காஞ்சி) வரை பல இயல்புகள் பிராகிருதமொழி பேசிய மக்களிடை காணப்படுகின்றன.

இந்நூல் உரைநடையாக மொழிபெயர்க்கப்பட்டு உரையாடல் போல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இது உரையாடல் பாவியம் (வசன கவிதை) அன்று.

---

1 Prakrit Sahitya ka ithihas (Hindi) (Page - 19) by Dr. Jagadeesh chandra Jain.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிஞ்சித்திணை

காதலோவியங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'புணர்தல் நறுங்குறிஞ்சி'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆந்திர நாட்டு அகநானூறு

★ ஞாயிறு போற்றுதும்

எழு ஞாயிறே! செஞ்ஞாயிறே!
உலகம் விரும்ப ஒளிவீசுகிறாய்
கண்களுக்கு ஒளி தந்து மகிழ்விக்கிறாய்
வானத்திற்கு அணியாக இருக்கும் உனக்கு
என் வணக்கங்கள். (கா.ச. 7:53)

கடவுள் வாழ்த்து

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரும் பலர்புகழ் ஞாயிற்றை நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் குறிப்பாக வழுத்துவது போலவும், 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' எனத் தொடங்கி இளங்கோவடிகள் சிலப் பதிகாரத்தில் கதிரவனை வழிபடுவது போலவும் இந் நூலில் ஞாயிற்று வணக்கம் சிறப்பிடம் பெறுகிறது.

இந்நூலைத் தொகுப்பித்த ஆந்திர சாதவாகன மன்னன் ஆளன் சிவபெருமான் வணக்கத்தை முதலிற் கூறித் தன் தொகுப்பைத் தொடங்கி, எழாம் நூறுன இறுதிப் பகுதியில் இந்த ஞாயிற்று வணக்கப் பாடலைச் சேர்த்திருந்தாலும், தமிழ் மரபைத் தலைமையாகக் கொண்ட திரவிடப் பனுவல் அமைப்பு நோக்கி, ஞாயிற்று வணக்கம் கடவுள் வாழ்த்தாக முதலிற் சேர்க்கப்பட் டுள்ளது. முழுமுதற் கடவுளான சிவனைப் பற்றிய பாடல், கடவுள் வாழ்த்து அமைப்பில் தேவபாடாணுகவோ, வாழ்த்தல் பரவலாகவோ இல்லாமல், குறிஞ்சித்திணையின் அகத்துறையமையப் பாடப்பட்டிருப்பதால் இந்நூலில் குறிஞ்சித்திணையின் முதற்பாடலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றை வணங்குவதே தமிழர்க்குப் பொங்கல் விழாவாகவும், ஆந்திரர்க்குச் சங்கராந்தியாகவும் உள்ளது. கண்ணுக்கும் விண்ணுக்கும் ஒளிதரும் கதிரவனை வைகறை யில் கைகூப்பி ஆடவர் வணங்கலும், அந்திமாலையில் மங்கல விளக்கேற்றி மகளிர் வழிபடலும் பண்டுதொட்டு வரும் பண்பாட்டுக் கூறுகளாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிஞ்சி

★ *சிவபெருமானுக்கே மறந்துபோய்விட்டது!* 1

சிவபெருமான்
அந்திநேர வழிபாட்டுக்காகக் கையில் ஏந்திய நீரில்
உமையவளின் ஒளிமுகம் தெரிவதைக் கண்டார்
உடனே
அவர் ஓதிக் (உச்சரித்து) கொண்டிருந்த மந்திரம்
மறந்துபோய்விட்டது
மந்திரத்தை இடையில்
நிறுத்தக்கூடாதே என்பதால்
தப்பும் தவறுமாக ஏதேதோ சொல்லிக்கொண்டிருக்கிறார்.
அத்தகைய சிவனுக்கு என் வணக்கங்கள். (கா ச. 7:100)

திணை - குறிஞ்சி

துறை - நோக்குவை எல்லாம் அவையே போறல்.

★ *காமன்கணைகளின் முரணான இயல்புகள்* 2

தோழா!
காமனின் மலரம்புகள் முரணான இயல்பின
அவை, மென்மைமிக்க மலர்களாய் இருக்கின்றன
ஆனாலும் ஆழ்ந்து பாய்கின்றன
இருப்பினும்,
அவை வந்து பாய்வதே தெரிவதில்லை!
அம்மலர்க்கணைகள் வந்து தொடுவதே இல்லை
ஆயினும்,
உடம்பை அனலாய் எரிக்கும் திறம் வாய்ந்துள்ளன
அதே கணைகள்
பெருங்களிப்பை மயிர்க்கால்தோறும் பாய்ச்சவல்லன
இவ்விரு திறனும் வாய்ந்திருக்கும்
விந்தையான மலரம்புகளைப்பற்றி என்ன சொல்வது ?
சாதவாகன மன்னன் ஆளன் (கா.ச. 4:26)

திணை - குறிஞ்சி

துறை - தலைவன் நெஞ்சொடு கிளத்தல்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ எங்ஙனம் வண்ணிப்பேன் 3

பொன்மேனியளே !
உன்னை முழுமையாகக் கண்டு வண்ணிக்க நினைக்கிறேன்
ஆனால் 'சேற்றில் விழுந்த வலியில்லாத
கிழட்டுமாடு எழமாட்டாதவாறு போல'

உன் உடலுறுப்பின் மீது அங்கங்கே படும் என்பார்வை
அங்கேயே திரும்பிவராமல் அழுந்திப்போய்விடுகிறது.
உன் உடற்பொலிவு முழுவதையும்
நான் எந்தக்காலத்தில் வண்ணிக்கப்போகிறேன்!

பவ்வ சுகுமாரன் (கா.ச. 3:71)

திணை - குறிஞ்சி

துறை - நலம்பாராட்டல்

★ வாய்ப்புக் கொடு 4

அழகு மேனியளே !
முன்றானையால் முகத்தை மறைக்காதே
அந்தக் கதிரவனின் கதிர்க்கைகள்
உன் முகத்தையும் தாமரை மலரையும் தொட்டுப்பார்த்து
எது மிகவும் மென்மையானது என்று அறிய
வாய்ப்புத் தரவேண்டாமா ? தீலன் (கா.ச. 3:69)

திணை - குறிஞ்சி

துறை - நலம்பாராட்டல்

★ கன்னக் கண்ணாடியில் தெரிந்த நிலவு 5

அவள் கன்னம் கண்ணாடி
அந்தக் கன்னக்கண்ணாடியில்
முழுநிலா முழுதும் தெரிகிறது
நிலவின் களங்கம்
அவள் கன்னத்தில் கறுப்பாகத் தெரிகிறது
உன்னைநினைந்து அவள்அழுத கண்ணீர்
அக் கறையைத் துடைத்துக்
கன்னத்தை அழகுடையதாக்குகிறது. (கா. ச. 3:80)

திணை - குறிஞ்சி

துறை - தோழி தலைமகனுக்குத் தலைவியின் ஆற்றாமை கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவள் உள்ளத்தை உறுத்துகிறது 6

அவள் நாலாப்புறமும் பார்க்கிருள்
எந்தவொரு பொருள்மீதும்
அவள் பார்வை நிலைக்கவில்லை.
நெட்டுயிர்க்கிருள், வெறுமனே முறுவலிக்கிருள்.
பொருளற்ற சொற்களை வலிந்துபேசுகிருள்
அவள் உள்ளத்தில்
ஏதோஒன்று மாட்டிக்கொண்டு உறுத்துகிறது.

வியட்டஇந்தன் (கா.ச.3:96)

திணை - குறிஞ்சி

துறை - தோழி குறிப்பறிதல்

★ இவளே பேரழகி 7

உலகில்
எத்துணையோ அழகிய மகளிர் உள்ளனர்
ஆனல்,
இவளுடம்பின் இடப்பகுதி வலப்பகுதியை
முழுதும் ஒத்திருப்பதால்
இவளே
அனைவரினும் சிறந்த பேரழகியாவாள்.

சிரிராயன் (கா.ச. 4:3)

திணை - குறிஞ்சி

துறை - நலம்பாராட்டல்

★ என்ன செய்வேன்? 8

கரைகடந்த காட்டாற்று வெள்ளம் போல்
என் உள்ளம் பெருக்கெடுத்து
காதலன்பால் ஓடிப்போய் விட்டது.
உயிர்மட்டும் ஊசலாடும் இவ்வுடலைச் சிறைப்படுத்தி
வாயிற்படி தாண்டக்கூடாது, என்று
தாய் கட்டளையிட்டிருக்கிருள்.
'நான் என்ன செய்வேன்' என்று அழுகிருள்;
ஈரத்துணியின் ஓரவிளிம்பில்
சொட்டும் நீர்த்துளிபோல்
அவள்இமை விளிம்புகளிலிருந்து
கண்ணீர் துளித்துவிழுகிறது. (கா.ச.:17)

திணை - குறிஞ்சி

துறை - இற்செறிப்பு, செறிப்பறிவுறுத்தல்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கொடிக்கொரு கொம்பு 9

வளையுங்கொடி
வளையாத நிலையான மரத்தைத் தழுவிக்கொள்கிறது.
அலையும் மனத்தவளான நான்,
மனவுறுதி பெற்ற கணவனைத் தழுவிக் கொண்டேன்.
கணவனின் குழலோசைக்கேற்ப நடனமாடுவேன்.
சசிப்பஆஏ (கா.ச. 4:4)

திணை - குறிஞ்சி

துறை - புணர்ச்சியின் மகிழ்தல்

★ மலர்க்கணைகள் சாகவிடவில்லை 10

தோழா!
போர்க்களத்தில் அம்புகள் பாய்ந்தால்
உயிர் பிரிந்துவிடுகிறது
காதற்களத்தில் காமனின் மலரம்புகள் பாய்ந்தால்
பிரிவுத் துயரால் சாகமுடிவதில்லை
மலரம்புகளால் தூண்டப்படும்,
பொருமை, ஆசை, குற்றம் பொறுத்தல்,
பிரிவுத்துயரால் சாகவிடாமை ஆகிய
நான்கியல்புகளையும் தாங்குவது அரிதாகவுள்ளது.
(கா.ச. 4:27)

திணை - குறிஞ்சி

துறை - தலைவன் பாங்கனுக்குக் கூறியது.

★ மாரிநடுநாள் 11

இந்த மழைக்கால நள்ளிரவில்
கோதாவரியில்
புதுவெள்ளம் பெருகியோடும் ஓசை நன்ருகக் கேட்கிறது
கோதவரியின் வெள்ளப் பெருக்கு
அவருடைய நற்பேற்றையும்
மாரிநடு நாளிரவு என்மனக் கட்டுப்பாட்டையும்
வெளிப் படுத்துகின்றன. (கா.ச. 3:31)

திணை – குறிஞ்சி

துறை - இட்டுப்பிரிவு இரங்குதல். களவுக் காலத்தில் தன் மனநிலையைத் தலைவி தோழிக்கு எடுத்துரைக்கிருள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ முகம் கண்டார் முகமே கண்டார் 12

அன்பே!
நான் உன் முகத்தையே வைத்தகண் வாங்காமல் பார்ப்பது.
நாணமாக இருக்கிறது என்கிருய்
உன் தோழிகூட ஒரு உண்மையைச் சொன்னுள்.
உன்னுடலின் ஒருபகுதியைக் குறிப்பாகக்கண்ட
தோழிமாரின் பார்வை
அந்த உறுப்பின்மீதே நிற்பதால்
உன்உடலே முழுமையாகப் பார்த்தவர் எவருமில்லே யாமே!
இது உண்மைதான் போலும்.
அந்தராயன் (கா. ச. 3:34)

திணை - குறிஞ்சி

துறை - நலம் பாராட்டல்

★ அவர்மீது பற்றுமிகுகிறது 13

மாமி!
அவரோடு நான்சினங் கொண்டவளாயினும்
நான் மஞ்சள்பூசி நீராடிய
அதே ஆற்று நீரை அவர் பருகியது
என் நெஞ்சத்தையே அவர் பருகுவது போன்று இருந்ததால்
அவர்மீது எனக்குப் பற்று மிகுகிறது.
போலயேவன் (கா.ச. 3:36)

திணை - குறிஞ்சி

துறை - ஏமஞ்சான்ற உவகை.

★ நல்லவர் இயல்பு 14

நல்லவர்களுக்குச் சீற்றம் (கோபம்) வந்தாலும்
சீற்றங்கொள்ள மாட்டார்கள்.
யாருக்கும் தீமைசெய்ய மாட்டார்கள்;
நினைத்தாலும் சொல்ல மாட்டார்கள்;
வாய்தவறிச் சொல்ல நேர்ந்தால்
அதற்காக நாணுவார்கள். (கா. ச. 3:50)

திணை - குறிஞ்சி

துறை – தோழி தலேமகனுக்குக் கூறியது.
'நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன்வயின் தோன்றிய கிளவி'
(தொல். களா. 23)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அமுதாகவும் நஞ்சாகவும் இருக்கிறள் 15

பிரிவின்கண்
நோய்தரும் நஞ்சாகிருள்
கூடலின் கண்
இன்பந்தரும் அமுதாகிருள்.
இறைவன் இவளை
அமுதும் நஞ்சும் சமமாகக் கலந்து
படைத்துவிட்டாஞ?

சாதவாகன மன்னன் ஆளன் (காச. 3:35)

திணை - குறிஞ்சி

துறை - நலம்பாராட்டல்

★ காணக்காண இனிக்கும் 16

தலைவனின் அருளார்ந்த செய்கையும்
காதலரின் பொருமைச்சினமும்,
வலியவனின் பொறுமையும்,
கற்றவனின் பேச்சும்,
கல்லாதவனின் அடக்கமான அமைதியும்
காணக்காண இனிக்கும் என்பார்கள்.
அதன்படி
தங்கள் செய்கையும் பொறுமையும்,
தலைவியின் சினமும் பேச்சும்,
என்போன்ருரின் அடக்கமும் உங்களிருவருக்கும்
இனிய வாழ்க்கையை அமைத்துத் தருமாக.

(கா. ச. 3:43)

திணை - குறிஞ்சி

துறை - தோழியின் கூற்று

★ கடைக்கண்ணுல் நோக்காதே 17

பெண்ணே!
கடைக்கண்ணுல் நோக்காதே, இயல்பாகப்பார்.
அப்பொழுதுதான் அவனை முழுமையாகப் பார்க்கமுடியும்.
நீயும் எளிய இயல்பினளாகவும்
அறியாத பெண்ணுகவும் கருதப்படுவாய்.

சாதவாகன மன்னன் ஆளன் (கா.ச. 3:95)

திணை - குறிஞ்சி

துறை - மறைந்தவற் காண்டல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நான் தூது வரவில்லை 18

உங்களிடம் நான் தூது வரவில்லை
நீங்களும் அவளிடம் அன்புடையவரல்லர்
இடையில் நானென்ன செய்ய முடியும் ?
அவள் இறந்தால் உங்களுக்குப் பழி சேரும்.
அதனால்தான்,
நான் தங்களுக்கு நல்லது சொல்ல நேர்ந்தது.
(கா. ச - 2 : 78)

திணை – குறிஞ்சி

துறை - வரைவு நீட்டித்த தலைமகனுக்குத் தோழி கூறியது.
(தோழி தலைவனுக்கு அறத்தொடுநின்றது)

★ உள்ளத்தின் ஓரத்தில் ஒதுக்கப்பட்டாள் 19

தோன்றலே !
உன் உள்ளத்தில் எண்ணிறந்த பெண்கள்
குடிபுகுந்து விட்டதால்
தலைவி, தானிருக்க இடம் இல்லாமல்
உன் உள்ளத்தின் ஓரத்தில்,
ஒதுக்கப்பட்டு விட்டது போன்ற உணர்வால்,
எச்செயலும் ஆற்ற இயலாமல்
மிகவும் மெலிந்து விட்டாள்.
மேலும் மெலிந்து கொண்டே போகிறாள்; அவள்
ஐயப்படுவது உண்மையன்று என்று நிறுவும் வகையில்
நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.
சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச-2 : 82)

திணை - குறிஞ்சி

துறை - காலம் நீட்டிக்காமல் மணந்து கொள்ள வேண்டும்
என்று தலைவனை வரைவு கடாயது.

★ உடல் முழுவதும் எவ்வாறு மறைத்துக்கொள்வது 20

அவர் என்னைக் காணும்போது
நான் நாணத்தால் கண்ணை மூடிக்கொள்வேன்
கடம்ப மலர்போல்
மகிழ்ச்சியால் பூரித்த என் உடல் முழுவதையும்
எவ்வாறு மறைத்துக்கொள்வது ? (கா.ச. 4:14)

திணை - குறிஞ்சி

துறை - நாணுமிகவுரைத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ குவளை எது கண் எது ? 21

நீலநிறக் குவளைமலரை
அவள் காதில் அணிந்துகொண்டிருக்கிருள்.
தன் காதலனை நேருக்குநேர் காணும் களிப்பில்
இரண்டு கைகளாலும் கண்ணை
அவளே பொத்திக்கொண்டாலொழிய
அக்குவளை மலர்களைக் காண முடியவில்லை
கண்ணும் குவளைமலரும் ஒன்று போலவே உள்ளன!
வசந்தசேனன் (கா.ச. 4:23)

திணை - குறிஞ்சி

துறை - நலம்பாராட்டல்

★ நல்லவராலும் துன்பம்; தீயவராலும் துன்பம் 22

எங்களுக்கு நல்லவர் தீயவர் ஆகிய
இருவகையாரையும் பிடிப்பதில்லை
இடைநிகர்த்த தன்மையாளரையே
விரும்பலாம் என்று தோன்றுகிறது
ஏனென்ருல்,
தீயவர்களைக் கண்ணில் கண்டால் துன்பம்மிகும்;
நல்லவர்களைக் காணவிட்டால் துன்பம்மிகும்.
சாதவாகன மன்னன் ஆளன் (கா.ச. 3:24)

திணை - குறிஞ்சி

துறை - அவர்வயின் விதும்பல்

★ உன் முகம் மலர்வதேன் 23

தோழி !
அவனை உனக்குத் தெரியாது என்கிருய்
பழக்கமுமில்லை, தொடர்புமில்லை என்று மழுப்புகிருய்
அவன் நட்பை நீ பெருதிருந்தால்
கதிரவனின் கதிர் தொட்டதும்
மகிழ்ந்து மலரும் தாமரைபோல்
அவன் பெயரைச் சொன்னவுடனே
உன் முகம் இப்படி மலருமா ? சுசீலன் (கா.ச. 4;43)

திணை - குறிஞ்சி

துறை - என்னை மறைப்பது என்னெனத்தழால் — தோழி தலைவியை வினவியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24

★ தூதுச் செய்திகள்

காதலர் இருவரும் இணையமுடியாமல்
எதிர்த்திசைகளில் பிரிக்கப்பட்ட இதயக் கரைகளினிடையே
துயரக்கடலில் அலைமோதிக் கொண்டிருக்கிறார்கள்
தூதுச் செய்திகள் தாம்
அவர்களுக்கு ஆறுதல் தருவதாக இருக்கின்றன.
(கா.ச. 4:42)

திணை - குறிஞ்சி

துறை - தோழி தனக்குப் பாங்காயினாரிடத்துக் கூறியது.

25

★ வண்டுகள் சுற்றிவருகின்றன

வண்டுகள்,
அவள் முகத்தை
நிலவைக்கண்டும் குவியாத தாமரை மலராகக் கருதி
அவள் நெட்டுயிர்ப்பின் நறுமணம் நுகர்ந்து
அவளையே சுற்றிக் கொண்டிருக்கின்றன.
வசந்தன் (கா.ச. 4:66)

திணை - குறிஞ்சி

துறை - நலம் புனைந்துரைத்தல்

26

★ ஏன் சொல்லவில்லை

இளைஞனே !
உள்ளூர் உழவனின் மகள்
உன்னைக் கடைக்கணித்து நோக்குகிறாள் என்பதையும்
உன்னை உயிரினும் மேலாகக் கருதுகிறாள் என்பதையும்
நீ ஏன் பெரியவர்களிடம் சொல்லாமலிருக்கிறாய் ?
(கா. ச. 4 : 70)

திணை - குறிஞ்சி

துறை - அறவோர் தலைமகனுக்குக் கூறியது

27

★ வருகையும் பிரிவும்

நீ வருவாய் என்ற ஆர்வத்தால்
முதல் யாமம் ஒரு நொடியில் கழிந்தது.
நீ வந்து சென்றதும்
பின் யாமம் ஆண்டுகளாக நீடித்து வருத்தியது.
அல்லன் (கா. ச. 4 : 85)

திணை - குறிஞ்சி

துறை - இரவுக் குறியிடை தலைமகனுக்குத் தலைமகள் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ குலமகளால் விரும்பப்படுபவன் 28

கடைக்கண் வீச்சாலும்
நயவுரையாடலாலும், தளரும் மட நடையாலும்,
குறும்பின் முறுவலாலும் மயக்கும் பண்புடைக்குல மகளிர்,
ஆற்றலால் மட்டுமன்றி
பண்பாட்டாலும் சிறந்த ஆடவனையே
பெரிதும் விரும்புகின்றனர்.

வப்பசாமினே (கா. ச. 2 : 74)

திணை - குறிஞ்சி

துறை - தோழி தலைமகனுக்குக் கூறியது.

★ சூரிய வணக்கம் 29

கூப்பிய கைகளோடு
சூரிய வணக்கம் செய்வதாக நடித்து
காதலியைக் கடைக்கண்ணால் பார்க்கும் இளைஞனே!
இறைவணக்கத்தின்போது
வேறு எண்ணங்கள் குறுக்கிடலாகாது
தெரிந்துகொள். விக்க கராயன் (கா.ச. 4:32)

திணை - குறிஞ்சி

துறை - பாங்கன் தலைமகனுக்குக் கூறியது.

★ ஒப்பனை வேண்டேன் 30

நான் நாணுடையவள்
அவர் காதலில் உறுதியானவர்
என் தோழிகள் நுண்ணறிவினர்
நான் காலுக்கு
எதற்காகச் செம்பஞ்சுக் குழம்பு தடவவேண்டும்.

(கா.ச. 2:27)

திணை - குறிஞ்சி

துறை - அணிநலங் கொள்க என்ற தோழிக்குத் தலைவி கூறியது.

வரைவிடை ஆற்ருளாய தலைவி, தன்னுற்ருமையை அணிநலங் கொள்ளாததன் வாயிலாகக் குறிப்பாகப் புலப்படுத்தினுள் என்றலும் ஆம்.

தோழி அறத்தோடு நிற்க வேண்டும் என்பது குறிப்பு.

3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

31

★ முழுநிலா ஒப்பாகாது

முழுநிலா உன் முகத்துக்கு ஒப்பாகாது
ஏனெனில்
உலகங்களைப் படைத்த இறைவன்
முழுநிலாவை மட்டும் நாள்தோறும் ஒவ்வொரு கலையாக
வெட்டிக் குறைத்துவிடுகிறான்
ஆனால் உன் முகம் என்றும் குன்றாமல்
முழுமையாக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. (கா.ச. 3:7)

திணை - குறிஞ்சி

துறை - நலம்பாராட்டல்.

32

★ முறுவலிக்கிறாள்

கதிரவன் இன்னும் மறையவில்லை.
அதற்குள்,
காதலனின் திருவடிகளை நீராற் கழுவுகிறாள்
மெய்ம்மறந்து முறுவலிக்கிறாள். (கா. சா. 2:30)

திணை - குறிஞ்சி

துறை : காமஞ்சிறத்தல்.

குறிப்பு : ஐந்தணை (பஞ்சணை) மென்பாயலில் துயிலச் செல்லுமுன் திருவடி அலம்பல் வழக்கம்.

33

★ தாமரையைச் சூழ்ந்த கருவண்டுகள்

அவளுடைய பொன் முகமும் கருங் கூந்தலும்
அழகிய செந்தாமரை மலரைக்
கருவண்டுக் கூட்டம் சூழ்ந்திருப்பது போன்று
காணப்படுகிறது
அதனால், அவள் முகத்தை
என்னால் மறக்க முடியவில்லை. (கா. ச. 78)

திணை - குறிஞ்சி. தலைவன் பாங்கற்குக் கூறியது.

துறை - நலம் பாராட்டல்

குறிப்பு : கதிரவன் வரவால் மட்டும் தாமரை மலரக் கூடியது. அதுபோல் என் வரவால் மட்டும் மலரும் முகத்தினள் அவள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கனவில் கண்ட நீர் 34

தோழி!
அவரைத் திடீரென்று பார்த்த
குறுகிய பார்வையால்
என் ஆசை தணியவில்லை
கனவில் கண்ட அருவிநீர்
வேட்கையைத் தணிக்குமா? வஞ்ஞசன் (கா.ச.:93)

திணை - குறிஞ்சி

துறை - தலைவி உட்கோள் கூறுதல்

★ நல்லவர்க்கு நல்லவரே வாய்த்தனர். 35

இன்ப துன்பங்களில்
ஒப்பாகப் பங்கேற்கும் தலைமகனைத்
தலைவி தலைப்பட்டாள்.
பண்புகளால் உயர்ந்த அவளுக்கு
பண்புகளாலும் ஆற்றல்களாலும்
உயர்ந்த கணவன் கிடைத்து விட்டான்.
ஊழ் வயத்தால்
நல்லவர்க்கு நல்லவரே வாய்க்கின்றனர்.
சிரிசக்தியன் (கா.ச.99)

திணை - குறிஞ்சி

துறை - தலைவியிடம் தோழி முன்னிலைப் புறமொழியாகக் கூறியது.

★ ஏனிந்த நாடகம்? 36

வழிப்போக்கன்போல் வந்த அவன்,
குடங்கையை ஏந்தி
மேலே நீர்வார்க்கும் இளம்பெண்ணைப் பார்த்தவாறு
வேண்டுமென்றே மிகவும் மெதுவாக நீர்பருகுகிறான்.
அவளும் வேண்டுமென்றே
மிகமெல்லிய தாரையாக நீரூற்றிக் கொண்டிருக்கிறாள்.
இந்த ஊமை நாடகத்தின் உரையாடல்கள்
உள்ளத்தில் உரக்கக் கேட்கின்றது.
(பாட்டயன் கா. ச. 2:61)

திணை - குறிஞ்சி

துறை - தோழி குறிப்பின் உணர்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ தோழிமார் நகைக்கின்றனர் 37

ஏதேனும் மலர்
உன்மார்பகங்களில் ஒட்டிக்கொண்டதா
என்று தோழிமார் வினவினர்.
அஃதறியாத தலைவி
காதலனின் நகக்குறியைத் துடைக்கத் தொடங்கியதறிந்து
தோழிமார் விலாப்புடைக்க நகையாடினர்.

வாலாதித்தன் (கா. ச. 2:45)

திணை - குறிஞ்சி

துறை - நாணநாட்டம்

★ தோழி! நீ வாழ்க! 38

தோழி, நீ திறமை மிக்கவள்.
இடமறிந்து காலமறிந்து
இன்சொல்லும் கடுஞ்சொல்லும் பேசும் கலையில் வல்லவள்.
தலைவனின் உள்ளம் வருந்தாத வகையில்
அறிவுரை கூறித் தெருட்டும் நின் பணி
சிறப்பதாகுக; நீ நெடிது வாழ்க.

ஆகவசத்திஞே (கா-ச-2 : 81)

திணை - குறிஞ்சி

துறை - தோழியின் மூதறிவுடமையைத் தலைவி பாராட்டல்

★ கவர்ச்சி எப்படி வந்தது? 39

புதுமணக்கோலத்திலுள்ள பெண்ணைப் பார்த்து
மாப்பிள்ளை ஏன் இப்படி அவாவுகிறான்!
அவள் அவனை ஏறிட்டும் பார்க்கவில்லை
அவளை அவன் தொட்டதும் இல்லை
தொடும் சூழலும் இருந்ததில்லை
அவனோடு அவள் பேசியதுமில்லை
அப்படியிருந்தும் அவனுக்கு அவள் மீது
கவர்ச்சி வந்திருப்பது புதுமையல்லவா?

(கா. ச. 5:45)

திணை-குறிஞ்சி

துறை - வேட்கை கைம்மிகல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ எப்படித் தெரியாமலிருக்கும்? 40

அவள்
உன்னைக் காணத் தவமிருந்தாள்
தன் எண்ணக் கனவின் உச்சிக் கோபுரத்திலிருந்து
தலைகீழாக விழுந்து விட்டாள் என்பது
உனக்கு எப்படித் தெரியாமலிருக்கும்?

திணை - குறிஞ்சி (கா. ச. 7 :97)

துறை - தோழி முன்னிலைப் புறமொழியாகத் தலைவனை இயற்பழித்தது.

★ உயிருக்கு ஏதம்வரும் 41

தோழி கூறிய
வழியிடைத் துன்பங்களைப் பொருட்படுத்தாமல்
நீங்கள் என்னைத் தேடிவந்து நல்கும் தலையளி
இன்பமேயானாலும்
இந்தக் களவின்பம் என்
உயிருக்கே ஏதந்தரும் என்பது
தாங்கள் அறியாததா? தேவன் (கா.ச. 2:58)

திணை - குறிஞ்சி

துறை - ஆற்றிடை அச்சம் கூறித் தலைவனைத் தெருட்டியதும் வரைவு கடாயதுமாம்.

★ இப்போது உதவ வருகிறார்கள் 42

எல்லோரும் அப்போது ஊமையராய் இருந்தனர்.
உடல் முழுதும் நஞ்சுபோல்
அவர்மேல் வைத்த காதலன்பு பெருகி
உடம்பே அனலாகி எரியும்போது
அது தானாக எரிந்து சாம்பலாகுமுன்
உற்றாரும் உறவினரும் பெற்றோரும் ஓடிவருகிறார்கள்
இப்போது வந்து துன்பத்தை அணைக்கவும்
தடுக்கவும் முயல்கின்றனர்.

திணை - குறிஞ்சி (கா. ச. 7: 96)

துறை - காமமிக்க கழிபடர் கிளவி – தோழி கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவரை எனக்குப் பிடித்திருக்கிறது 77

மாமி!
அவரை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது
காணக்காண கண்ணுக்கு இனிக்கிருர்
நினைக்க நினைக்க நெஞ்சு மகிழ்கிறது
அவருடைய பேச்சு
என் காதுகளுக்குப் புல்லாங்குழலின் இசையாக இனிக்கிறது
அதுமட்டுமன்று
அவரைப்பற்றி யாரேனும் பேசினுல்கூட
நான் மெய்ம்மறந்து போகிறேன்.

(கா. ச. 7 : 51)

திணை - குறிஞ்சி

துறை - அவர் வயின் விதும்பல்.

★ உவமை சொல்ல முடியவில்லை 44

உன்முகம் நிலவு போன்றது
எயிறூறிய நீர் அமுதம் போன்றது
மின்னல் வேகத்தில் தரும் முத்தம்
எதைப் போன்றது?
உவமை சொல்ல முடியவில்லை.

வாகவராயன் (கா. ச - 3 : 13)

திணை - குறிஞ்சி

துறை - தலைவியை வியத்தல் - தலைவன் கூற்று.

★ ஓவியம்போல் முகம்திருப்பிக் கொள்பவர் 45

துன்ப காலத்தில்
தக்க நேரத்தில் தக்க இடத்தில்
உதவி செய்ய ஓடிவருபவரே உண்மையான நண்பராக
ஏற்றுக்கொள்ளத் தக்கவர்.
அப்படியிருக்க
சுவரில் வரைந்த ஓவியம்போல்
உணர்ச்சியற்று முகந்திருப்பிக் கொள்பவரை நம்பி
நல்லவராக ஏற்றுக்கொள்வார்களா?

பாலிதன் (கா. ச. 3 : 17)

திணை - குறிஞ்சி

துறை - தோழி தலைவனை இயற்பழித்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

46

★ அப்போதுதான் நம்புவாய்

அன்பே !
உன் கண்ணீர்த்துளி என்மேல் பட்டு
என் உடல் மயிர்க்கூச்செறிதலால்,
அக்கண்ணீர்த்துளி சிதறுதலைக் கண்டால்தான்
நான் உன்மீது கொண்ட
அன்பின் உண்மையை நீ உணர்வாய்,
அப்போதுதான் என்னை நம்புவாய் (கா. ச. 3 : 16)

திணை - குறிஞ்சி

துறை - தீராத்தேற்றம்

47

★ கோடையின் உதவி

நீர்நிலைகளிலுள்ள நீரை
வற்றச் செய்யும் கோடை,
மரங்களில் புதுத் தளிர்களைத் துளிர்க்கச் செய்கிறது.
காதலர்க்குக் குளிர்ச்சியைத் தரத்தான்
இப்படிச் செய்கிறதோ !

(கா. ச. 7 : 26)

திணை - குறிஞ்சி

துறை - இயலிடம் புகழ்தல்

48

★ புள்ளிமானைக் கொல்லமாட்டான்

அந்த வேடனின் மகனை
அவனிடமுள்ள புள்ளிமான் தோல்
என்ன விலை என்று கேளுங்கள்
எங்கள் தலைவனை வேட்டுவக் குமரன்
புள்ளிமான்களைக் கண்டால்
வில்லை வளைக்கமாட்டான்.

(கா. ச. 7 : 29)

திணை - குறிஞ்சி

துறை - தோழி கேட்கும்படி சிறைப்புறம் நின்ற பாங்கன் கூறியது.

'என் தலைவன் அன்பும் அருளும் அறமும் சேர்ந்த நெஞ்சினன். அன்பாக இணைந்து வாழும் மான்களைக் கொல்ல மாட்டான்' என்பதன் வாயிலாகப் பாங்கன் தலைவனின் பண்பு நலனை வியந்து கூறுகிறான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நெஞ்சை விட்டகலாத நோய் 49

தான் மறைவாகச் செய்த தீவினை (பாவம்)
நெஞ்சைவிட்டுக் கணமும் அகலாதவாறு போல
இந்த இளையவள்
என் நெஞ்சைவிட்டு நொடிப்பொழுதும் அகலாத
காதல் நோயை விளைத்துவிட்டாள்.

(கா.ச. 2;83)

திணை - குறிஞ்சி

துறை - தகையணங்குறுத்தல்.

★ அவர் பேசும் சொற்கள் 50

தோழி !
நாமும் பிறரும் பேசும் சொற்களைத்தான்
அவரும் பேசுகிறார்!
ஆனால், அவற்றை அவர் பேசும்போது மட்டும்
நம் மனம் அதிகமாக மகிழ்வது ஏன்?
நம் மனம்
அப்படியே குளிர்ந்து போய்விடுகிறதே.

திணை - குறிஞ்சி (கா. ச. 7: 49)

துறை - மென்மொழி விரும்பல்

★ புண்ணியம் செய்த பொன்னரைஞாண் 51

பொன்னாலான அரைஞாண் ஒன்றுதான்
உன் இடையைத் தொடும்
பேறுபெற்றிருக்கிறது
வேறு எவர்க்கு
அந்த வாய்ப்பு கிடைக்கப்போகிறது
அது நீரிலும் நெருப்பிலும் நின்று
பலநாள் செய்த தவத்தால் பெற்ற புண்ணியத்தால்
இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றுள்ளது.

(கா. ச - 3 : 11)

திணை - குறிஞ்சி

துறை - தலைவியை வியத்தல் - தோழி கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவளைப்பார் 52

அவளைப்பார்
திருமண விழாச் சடங்குப் பாடல்களை
மகளிர் பாடுந்தோறும் விரும்பிக் கேட்கிறுள்
அதை விடக் கூர்மையாக
அவள் காதுகள்
மணமகனின் பெயரைக் கேட்க அவாவுகின்றன
(கா. ச. 7:42)

திணை - குறிஞ்சி

துறை – அன்பு மிக உடைமை

★ நீரின் சுவை மிகுந்திருக்கிறது 53

அவன்
வழியிலுள்ள ஏரியின் தெளிந்த நீரைப் பருகினுன்
நீலத்தாமரைகள் கதிர்க்காதலனை முத்தமிடுவதால்
அந்நீர்
சுவையாகவும் மணமாகவும் உள்ளது. [கா. ச. 7:22]

திணை–குறிஞ்சி

துறை - தலைவன் சிறைப்புறத்தானுகத் தோழி அன்பினது அகலத்தையும் அகற்சியது அருமையையும் பிறி தொன்றன் மேல் ஏற்றிக் கூறியது.

★ சற்றே பொறு 54

பெண்ணே! சற்றே பொறு
அவரைக் காணப்போகிருய்
நிலவு முளைக்கட்டும்.
முளைத்துக் கீழ்த்திசை வானத்தில் உயரட்டும்
அந்நிலா உன் முகத்தை காணட்டும்
நிலா உன் முகத்தைக் காணும்போது
அக்குளிர்ந்த ஒளியில் அதனினும் குளிர்ந்த உன் முகத்தை
உன் கணவர் பார்த்தால்
பாலோடு பால் கலந்தாற் போலிருக்கும். [கா. ச. 7:7]

திணை-குறிஞ்சி

துறை - தமர்தரும் தலைநாளிரவில் தலைமகனுக்குத் தோழி கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இதழை அறுக்கும் வண்டு 55

புது மலர்த் தேனுண்ண நினைத்த வண்டு
இதழ் பிரிக்கத் தெரியாமல்
மொட்டின் முகப்பை வெட்டி அறுத்துக்கொண்டு
உட்புகுகிறது
மொட்டவிழிக்கத் தெரியாத வண்டுக்குத்
தேனுண்ணத் தெரியவா போகிறது.

(கா. ச. 7 : 13)

திணை : குறிஞ்சி

துறை : களவை விரும்பாத தலைவியின் உட்கோளைத் தோழி தலைவனுக்குக் குறிப்பாகப் புலப்படுத்தியது.

★ என் மனக்கட்டுப்பாடு 56

உனக்கு விருப்பமில்லாத
மகிழ்ச்சியளிக்காத எச்செயலும்
எனக்கும் மகிழ்ச்சி தராது
அது என் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய செயல்
ஆனால் நான் விரும்பாதவை என்னை நாடிவரின்
மகிழ்ச்சியளிக்காதவை நடைபெறின்
அவை என் கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவை
அவற்றையும்கூட மனஉறுதியால் வெல்லலாம்.

(கா. ச. 7 : 15)

திணை - குறிஞ்சி

துறை - நாணுமிக உரைத்தால்

★ நாணம் காதுகளைத் தடுப்பதில்லை 57

பொல்லாத நாணம்
ஏனைய புலன்களைச் செயற்படாமல் தடுக்கிறது
ஆனால் காதுகளை மட்டும் தடுப்பதில்லை
பெரியோர் முன்னிலையில்கூட
காது இயல்பாகச் செயல்படுகிறது.

[கா. ச. 7:16]

திணை – குறிஞ்சி

துறை - நாணோடு நீங்கியதலைமகளை மென்மொழி விரும்பித் தலைமகன் நகையாடியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ என் கண்களின் நோக்கு 58

அத்தையே!
வருந்துகின்ற உலகத்தார்
மிகுதியாக மேலுலகத்தைம் பற்றியே
எண்ணுகிருர்கள்; பேசுகிருர்கள்.
அதைப் பற்றிய விளக்கங்களில் ஈடுபட்டு
மேலும் அறிய முயலுகிருர்கள்
அவர்கள் முயன்று போகட்டும்
ஆனுல் என் கண்கள்
ஊர்த்தலைவனின் மகனை என் காதலன் முகத்தையே
நாடுகின்றன. (கா. ச. 7;8)

திணை–குறிஞ்சி

துறை- அவர்வயின் விதும்பல்

★ மேக அதிரலொடு மாருெலித்தன 59

கார்கால இரவின்
மழைமேக அதிரலில் கொண்டையை நிமிர்த்துத்
தோகையை விரித்து
மயில்கள் நாட்டியமாடுகின்றன
அவற்றின் அகவற் குரல்
மழைமேக அதிரலொடு மாருெலிக்கின்றன.

திணை – குறிஞ்சி (கா. ச. 6: 59)

துறை - இரவுக்குறி வேண்டடல் தலைமகன் கூற்று.

★ கைகள் வியர்த்தன 60

திருமண நாளில்
கோத்த நிலையிலுள்ளமண மக்களின் கைகள் வியர்க்கின்றன.
இக் காட்சி
திருமணமான நான்காவது நாள் சடங்கன்று
பிரிந்திருக்க வேண்டுமே என்பதற்காக
கைகள் அழுவது போன்றிருக்கிறது. (கா. ச. 7;44)

திணை - குறிஞ்சி

துறை - கரணத்தின் அமைந்து முடிந்தகாலை தோழி
தன்னுள் கூறியது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அன்புள்ள கணவனைத் தேடு 61

அன்புள்ள கணவனைத் தேடு
என்றும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு
இதைவிடச் சிறந்த வழி எதுவும் இல்லை
அன்பான கணவனால் கிட்டாத மகிழ்ச்சிகள்
உலகில் வேறெங்கும் இல்லை.

திணை - குறிஞ்சி (கா. ச. 7: 50)

துறை - தோழி தலைவிக்குக் கூறிய ஓம்படைக் கிளவி

★ நருமதை ஆறே! நவிலக்கேள் 62

தெளிந்த நருமதை ஆறே!
யானையின் துதிக்கையால்
அலம்பப் பெறுகிறாய்
இருகரைகளையும் தொட்டணைத்துக் கரைக்கிறாய்
களிறுகள் முங்கிக் குளிக்க இடந்தருகிறாய்.

திணை - குறிஞ்சி (கா. ச. 6: 48)

துறை - குறியிடங் கூறல் தோழி கூற்று.

★ திசையெல்லாம் தெரிகின்றாய் 63

எந்தத் திசையில் பார்வையைத் திருப்பினாலும்
வண்ண ஓவியமாக
அவளுடைய உருவமே தெரிகிறது
இந்த வானவெளி முழுதும்
அவள் உருவங்களாலேயே நிரம்பியிருக்கிறது.

திணை - குறிஞ்சி (கா. ச 6: 30)

துறை - உருவெளித் தோற்றம்

★ ஏதோவொரு கரணியம் இருக்கிறது 64

மாந்தோப்பில்
கரணியமின்றித் தேனீக்கள் மொய்ப்பதில்லை
நெருப்பில்லாமல்
எவ்வாறு புகைக்கீற்றுகள் காணப்படும்?

திணை - குறிஞ்சி (கா. ச. 6: 43)

துறை - இருவரும் உள்வழி அவன் வர உணர்தல் தோழி கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அமுதைத் தேடி 65

இவளுடைய
இதழ்களின் அமுதச் சுவை
உலகறியாதது
அதனுற்ருன்
தேவர்கள் பாற்கடலில் அமுதத்தைத் தேடிக்
கடைந்தெடுக்கப்பாடுபட்டார்கள். (கா. ச. 6:93)

திணை-குறிஞ்சி

துறை - பெருநயப்பு உணர்த்தல். தலைமகன் கூற்று.

★ திருமணப் பாடல் 66

என் திருமண நாளில்
பாடப்பட்ட மங்கலப் பாடல்களைக் கேட்டு
என் தோழர்களைப் போலவே
மூங்கில் தூறுகளும்
தலையசைத்து மகிழ்ந்து முறுவலிக்கின்றன. (கா.ச,7:43)

திணை-குறிஞ்சி

துறை - களவச்சம் நீங்கி, கற்புவழி கரணத்தின்போது நெஞ்சுநிறை உவகையான் தலைமகன் தன்னுள் கூறியது.

★ தேனியால் கடியுண்ட குரங்கு 67

தேனீயால் கடியுண்ட குரங்கு
கோ கோ வென அரற்றியவாறு
மரத்தை விட்டு ஓடுகிறது!
அடுத்த மரத்திலேறிக்
கிளையை உலுக்குகிறது; பிருண்டுகிறது
அம்மரத்திலுள்ள நாவற்பழங்களைத்
தேனீக்கள் எனக் கருதி மருண்டு
உண்ணத் தயங்குகிறது.

திணை - குறிஞ்சி (கா. ச. 6: 31)

துறை - ஆற்றிடை ஊறும் அல்ல குறியும் கரணியமாக மருண்ட தலைவனைத் தோழி தெருட்டியது. உவமையால் உணர்த்திய உள்ளக்கிடக்கையுமாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ குரங்கு அஞ்சுகிறது 68

தழை செறிந்த மரத்தின் கிளைகளில்
படர்ந்திருந்த கொடிகளுனூடே
மந்தியிருந்ததைக் கண்ட கடுவன் (ஆண்குரங்கு)
அருகில் சென்றது
மந்தியின் கையைக்
கயிகச்சு (பூனைக்காசிரி) செடியின் இலையென்று கருதித்
தொட அஞ்சுகிறது.

திணை - குறிஞ்சி (கா. ச. 6: 32)

துறை - தலைவனை நகுதல் தோழி கூற்று.

★ சூளுறவை மறந்தீரா ? 69

அழுத கண்ணேடும்
கலக்கத்தோடும் வந்த அவள்
முறுவலித்தவாறு கேட்டாள்
நம் காதலின் பொருட்டு நீங்கள் உரைத்த சூளுறவு
மெய்ப்பிக்கப்பட வேண்டிய காலம்
வந்திருப்பதை மறந்தீரா?
தோழியும் கருதுவது போல்
மறந்துதானிருப்பீர்கள்; புறக்கணித்திருக்கமாட்டீர்கள்
அல்லவா?

திணை - குறிஞ்சி (கா. ச. 6: 18)

துறை - அவன் சூள் உரைத்தல்

★ வார்குழல் வடித்த கண்ணீர் 70

முழந்தாள்வரை தாழ்ந்த அவளுடைய வார்குழல்
நீராடி நின்றிருந்தபோது
கண்ணீர் வடிப்பது போல நீர்த்துளித்தது
அதற்கு ஒரே ஒரு கவலை
தன்னைக் கொண்டையாக முடிந்து
சிறைப்படுத்திவிடுவாளே என்று
அவளுடைய நீண்ட கூந்தல் அஞ்சுகிறது.

திணை - குறிஞ்சி (கா. ச. 6: 55)

துறை - நலம் பாராட்டல் தலைமகன் கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ சினமும் புறக்கணிப்பும் என்னைக் கவர்ந்தன 71

அவள்,
கமழும் நறுமணத்தாலும் மொழியும் இன்சொற்களாலும்
என்னைக் கவர்ந்தாள் என்பதைவிட,
புகையும் சினத்தாலும் பெருமிதமான புறக்கணிப்பாலும்
தன் கற்பின் கனலைக் காட்டி
முதன் முதலாக என் உள்ளத்தைக் கவர்ந்தாள்
என்று சொல்வதுதான் பொருந்தும். (கா. ச. 6:64)

திணை-குறிஞ்சி

துறை - அஞ்ச வந்த உரிமைக்கிளவி- அதாவது, இவளது கற்புச்சிறப்புப் போர் மறவன் கைக் கூர்வாள் போல் பிறர்க்கு அச்சஞ்தருதலின், இல்லறத்திற்கேற்ற உரிமைக் கிழத்தியாவாள் என்பதாம்.

★ இளமைக்கு எடுத்த கொடி 72

கள்ளமற்ற காதலியே!
உன் கார்மேகம் போன்ற அறற் கூந்தல்
காதற்புகையின் கீற்றுகளாகவும்,
கண்களை மயக்கும்
மயில் தோகையின் மாயத் தூரிகைகளாகவும்,
இளமைப் பொலிவுக்கு
எடுத்துப் பிடித்த கொடிகளாகவும் காணப்படுகின்றன.
(கா. க. 6:72)

திணை-குறிஞ்சி

துறை - நலம் பாராட்டல்.

★ திருமகள் கழுத்தில் வயிரமாலை 73

தேனீக்கள்
தாமரை மலரைச் சூழ்ந்துள்ளன.
இக் காட்சி
திருமகளின் கழுத்தில்
வயிர மாலை இட்டது போன்றிருக்கிறது. (கா. ச. 6:74)

திணை-குறிஞ்சி

துறை - தோழி தலைமகனைக் குறிப்பால் வரைவு கடாயது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ எருமையின் கொம்பா? யாழின் நரம்பா? 74

எருமையின்
கொம்பால் துரத்தப்படும் வண்டுகள்
முரல்கின்ற ஓசை
யாழின் நரம்பு எழுப்பும்
இன்னோசை போன்றிருக்கிறது (கா. ச. 6:60)

திணை-குறிஞ்சி

துறை - ஊரார் தூற்றும் அலர், விரைவில் வதுவை அயர்விக்கும் நலன் சேர்ப்பதாகும் என்பதைத் தோழி பிறிதுமொழிதலாகக் கூறியது.

★ அது ஒன்று தான் குறை 75

காதலன் மீதுள்ள கவர்ச்சியை
அவள் கண்கள் விளக்குகின்றன
வேறு எந்த ஆடவர் பக்கமும்
அவள் பார்வை திரும்பியதே இல்லை
அவனுக்காகவே
அவை ஒளி விட்டுத் திகழ்கின்றன
அவனுக்காகவே
அவை கண்பனி சிந்துகின்றன
அவற்றுக்குப் பேசத் தெரியவில்லை
அது ஒன்று தான் குறை. (கா. ச. 6:73)

திணை-குறிஞ்சி

துறை - தலைவியின் பண்பு பாராட்டல்—தோழிகூற்று

★ இவ்வூரார் அனைவரும் தேவராகி விட்டனர் 76

இவ்வூர்த் தலைவனின் மகளொருத்தி தான்
பேரழகும் உயர்பண்புகளும்
ஒரு சேரப் பெற்றிருக்கிறாள்.
அதனால்
இந்த ஊரார் அனைவரும் தேவராகி விட்டனர்.
கண் கொட்டாமல் அவளையே பார்த்து
வியந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். (கா. ச.6:92)

திணை-குறிஞ்சி

துறை - தலைவியை வியத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ *விரும்புகிருள்* 77

காற்றின் குறும்பால்
மேலாடை விலகியபோது
அவன் அவளுடைய இளமையழகை உற்றுற்றுப்
பார்க்கிருன்
அவள்
தன்னுடம்பை மறைத்துக் கொள்கிருள்
எனினும்
அவன் தன்னை நோக்குவதை விரும்புகிருள்.
(கா. ச. 1:73)

திணை-குறிஞ்சி

துறை - மறைந்தவட் காண்டல். நாணு நெஞ்சலைப்பக்
காதல் கைம்மிகலுமாம்.

★ *நீ என்ன ஆவாய்!* 78

தோழி! அவர் பெரிய போர்வீரர்.
அவருடைய பேச்சைக் கேட்டாலே அஞ்சுவர்
அவரைக் கண்டாலே பகைவர் நடுங்குவர்
அப்படிப்பட்டவரால் தழுவப்படும் பேற்றைப்
பெரிதாகக் கருதும் காதலள் நீ
எனினும் அத்தகையவரால் தழுவப்படும் நிலையில்
நீ என்ன ஆவாய் என்று நான் அஞ்சுகிறேன்.
(கா. ச. 7:59)

திணை-குறிஞ்சி

துறை - தலைமகளைத் தோழி நகையாடியது.

★ *கறை நீங்கியது* 79

பேதைப் பெண்ணே!
பவழக்கொடி போன்ற கையை
ஏன் கழுவுகிருய்?
உன் கையில் படிந்திருந்த சிவந்த கறை போய்விட்டது.
அதனை அறியாமல்
உன் சிவந்த கையின் நிறத்தைக்
கறையின் நிறமாகக் கருதி
இன்னும் ஏன் தேய்த்துக் கொண்டிருக்கிருய்.
(கா. ச 7 78

திணை-குறிஞ்சி

துறை - உறுப்பு நலன் புகழ்தல்- தோழிகூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இவளோடு அன்னப் பறவை 80

பலர் பேசும் சந்தடியிலும்
அவர் பேசுவதை மட்டும்
கூர்ந்து கேட்கும் திறனை
இவள் பெற்றிருக்கிறாள்
அன்னப்பறவை
நீரிலிருந்து பாலை மட்டும் பிரித்துப்
பருகும் ஆற்றல் பெற்றிருக்கிறது அல்லவா?
(கா. ச. 7:76)

திணை-குறிஞ்சி

துறை - ஒருதலை உள்ளுதல் — (இடையறுது நினைத்தல்)

★ அவரைப் பற்றி ஏன் கேட்கிறாய்? 81

அறியாதவளே!
அவருடைய வரலாற்றை
எதற்காகக் கேட்க வேண்டும்!
உனக்கு வெட்கமாக இல்லை?
அவரைப் பற்றி
எதுவும் கேட்டறியத் தேவையில்லை
மருவகச் செடியின்
எந்தப் பகுதிக்கு
மணம் இல்லாமல் இருக்கிறது? (கா: ச. 7:77)

திணை-குறிஞ்சி

துறை - ஊர் வினுதல்—தோழி கூற்று.

★ நிலவை ஏன் பார்க்கிறாய்? 82

தோழா!
நீ பதினாறு கலைகளும் நிரம்பி வரும் நிலவை
நாள்தோறும் சென்று காண வேண்டாம்
இவள் முகத்திரையை
மெதுவாக விலக்கிப் பார்
இவள் முகத்தில்
அந்நிலவின் பொலிவு தெரியும். (கா. ச. 7:72)

திணை-குறிஞ்சி

துறை - பாங்கன் தலைமகனுக்குக் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ மேகங்களைப் பார் 83

தோழி
காலமாரியின் மழைமேகங்கள்
மழை பொழிந்து முடிந்ததும்
வெண்மேகங்களாய் விட்டன
மலைச்சாரலில் படிந்துள்ள அவற்றைக் காண்
அவை உப்பு மலைகளைப் போலவும்
தூய்மை செய்யப்பட்ட பஞ்சுக் குவியலைப் போலவும்
காணப்படுகின்றன
அழகியவர்களால் காணத்தக்க அழகு இது.
(கா. ச. 7:79)

திணை-குறிஞ்சி

துறை - தோழி தலைவியை ஆற்றுவித்தது.

களவுக் கார்மேகங்கள் பொழிந்த அலர் என்னும் கங்குல் வெள்ளம் தீர்ந்தபின் கற்பென்னும் பொற்புடைய இல்லற வெண்மேகம் முல்லைநிறத்தில் நினக்கு வதுவை நாளாய் வந்து கைகூடும் என்னும் குறிப்பைத் தெரிவிக்கிறது என்று தோழி கூறுகிருள்.

★ அமரத்தவிக்கும் பறவைகள் 84

அடைமழை பெய்து கொண்டிருக்கிறது
வழுக்கும் மரக்கிளைகளில் உட்கார முடியாமல்
பறவைகள்
கிளை நுனிகளில் உட்கார முயலுகின்றன
பறந்தநிலையில் காலூன்ற முயலும்போது
உச்சிச் சிறுகிளைகள் சுமை தாங்காமல் தாழ்கின்றன
பறவைகள்
அமர முடியாமல் தவிக்கின்றன. (கா. ச. 7:60)

திணை-குறிஞ்சி

துறை - அலரெழுந்த பின்னும் வரையாது நீட்டித்த தலைமகனுக்குத் தலைமகளின் இடர்ப்பாட்டைத் தோழி எடுத்துக் கூறியது.

அடைமழை ஊரார் தூற்றும் அலர். பறவை அமர முடியாமல் கால்வழுக்குவது இச்செறிப்பும் நொதுமலர் வரைவும். சிறுகிளை தாழ்வது தலைமகன் வரைவு நீட்டித்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இற்செறித்தாள் அத்தை 85

மலையத்தென்றல்
மிகுந்த மணத்தோடு வீசிக்கொண்டிருக்கிறது
அத்தை என்னை வெளியில் செல்லாதவாறு தடுக்கிருள்
அங்கோல்ல மரத்தின் நறுமணத்தால்
மனமுருகி நிற்கின்ற அவருக்கு
உயிர் விடுவதன்றி வேறு வழியில்லை. (கா. ச. 5:97)

திணை - குறிஞ்சி

துறை - இற்செறிப்பு.

★ அப்படி எண்ணிவிடாதீர் 86

காதல் பிணைப்பில்
ஆதரவான அரவணைப்பில் இதழருந்தும் துடிப்பில்
மெய்ம்மறந்து ஒருநிலைப்படாமல்
நான் உங்கள் வயப்படும் கிறுக்கில்
என்னை
நாணமிலாதவள்
காதற்கலை தேர்ந்தவள் என்று
தவருக எண்ணிவிட வேண்டாம்
அவை உணர்வு வெளிப்பாடுகள்
என் எண்ண வெளிப்பாடுகள் அல்ல. (கா. ச. 7:61)

திணை-குறிஞ்சி

துறை - நாணுவரையிறத்தல்

★ முள்மலர் உணர்த்தும் பாடம் 87

முள்ளையுடைய மலரே!
உன்னிடமிருந்து, பெண்களுக்குச் சினமும்
வலியத் தொடுவார்க்கு ஊறு விளைக்கும் தன்மையும்
தேவை, என்பதைக் கன்னிப் பெண்கள் உணரவேண்டும்
வளையொலிக்க (மங்கல மகளிராகி) அவர்கள் நடக்க
வேண்டும்
என்பதையும் நீ உணர்த்துகிருய். (கா. ச. 4:92)

திணை - குறிஞ்சி

துறை - தலைவியை வியத்தல்-தலைமகன் சிறைப்புறத்தாளுக மலரை நோக்கி, தோழி, தலைமகளின் பண்புநலனை வியந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ என் நெஞ்சத்தைச் சிவப்பாக்கினுய் 88

தவள (வெண்) நிறத்தவளே!
நீ என்னுள்ளத்தைச்
சிவக்கச் செய்திருக்கிருய்
(என்னுல் பெரிதும் விரும்பப்பட்டிருக்கிருய்)
அதனுல்
நீ சிவந்து விடமாட்டாய் அஞ்சாதே. (கா. ச. 7:65)

திணை-குறிஞ்சி

துறை - தலைமகன் உட்கோள் உரைத்தது.

என்னுள்ளத்தைச் சிவக்கச் செய்திருக்கிருய் என்பது, பழுக்கச் செய்திருக்கிருய்- கனியச் செய் திருக்கிருய் - பெரிதும் விரும்புமாறு செய்திருக் கிருய் என்றவாறு. நீ சிவத்தல் - நீ சினத்தல் அல்லது வருந்துதல்.

★ பொற்குழை மேலும் பொலிவு பெற்றது 89

அவள் காதிலணிந்திருந்த
பொன்னுலான குழை
கன்னக்கதுப்பை அடிக்கடி தொட்டு
அவளுடைய இளமைப் பொலிவைப் பருகியது
அதனுற்ருன்
நாளுக்கு நாள் மேன் மேலும் பொலிவுற்று
அது மின்னுகிறது. (கா. ச. 5:39)

திணை - குறிஞ்சி

துறை - உறுப்பு நலன் புகழ்தல்.

★ பனையோலைக் காதணி 90

மெல்லிய காதுகளில்
இளம் பனையோலைச் சுருள்களைக் காதணியாக
ஆண்டில் குறிப்பிட்ட காலங்களில் அணிவது
மிகவும் அழகாக இருக்கிறது
அவை பொன்னுலான குழைகளோடு
கன்னக் கதுப்பைத் தொடுவது கவர்ச்சியாக இருக்கிறது.
(கா. ச. 4:98)

திணை - குறிஞ்சி

துறை - அணிநலம் புகழ்தல்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அலர் தூற்றுகிறார்கள் 91

தோழா!
இவ்வூர்மக்கள் மிகச்சிறியதைக் கூட
மிகவும் பெரிதாக்கிப் பேசுவார்கள்
ஊசியின் காதில்
மறத்தண்டை (கதாயுதத்தை)ப் புகுத்தி இழுத்து
விடுவார்கள்
இவ்வூரிலேயே வாழும் என் காதலியைக்
கண்ணாரக்கண்டு மகிழ
இவர்களெல்லாம் தடையாக இருக்கிறார்கள்.
(கா, ச. 6:1)

திணை - குறிஞ்சி

துறை - அலர் அறிவுறுத்தல்—தலைமகன் பாங்கனுக்குக் கூறியது.

★ காதற் பார்வையா? கூரிய அம்பா? 92

புருவவில்லை வளைத்து
கடைக்கண் நாணிலிருந்து
காதற்பார்வை எனும் அம்பை நீ வீசினால்
அதனால் தாக்குண்ணாதவர் எவரேனும் உளரோ?
அந்த அம்பு
உன் கடைக் கண்ணிலிருந்து வெளிப்படும் போது
உன் கடைக் கண்ணையே சிவப்பாக்கும் கூரம்பாகி
விசையோடு விடுபட்டுப் பாய்ந்து வருகிறது
உன் பார்வையைச் சற்று நிறுத்திக் கொள்.
(கா. ச. 6:4)

திணை - குறிஞ்சி

துறை - நலம் பாராட்டல்.

★ மெல்ல வெளிவரும் நிலவு 93

நீலநிறக் கச்சினூடே
சற்றேவெளியில் தெரியும் நகில்
நீல முகிற் கூட்டத்திலிருந்து
மெல்ல மெல்ல வெளிவரும்
நிலவு போன்று காணப்படுகிறது
மீனசாமி (கா. ச. 4:95)

திணை - குறிஞ்சி

துறை – நலம்பாராட்டல்—தலைமகன் கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

94

★ காதலனின் திறமை

கண்ணன் குறளனுக (குள்ளனுக) வந்து
மாவிலி மன்னனிடம் திறமையாகச் சொல்லாடி
அனைவரையும் மகிழ்வித்து வென்றது போல
உன் காதலன்
வாயிற் காவலரிடமும் பிறரிடமும்
திறமையாகப் பேசி மகிழ்வித்து வென்ருன். (கா. ச. 5:6)

திணை - குறிஞ்சி
துறை - தலைவனை இயற்படமொழிதல்—தோழி கூற்று.

95

★ பகைமையைக் கடந்த காதல் கவர்ச்சி

தன் உறவினரைக் கொன்றவன்
என்ற ஏக்கமும் பகைமையும் வெறுப்பும் இருந்தாலும் கூட
அந்தக் கள்ளனின்
இளமையும் வீரமும்
அவளுடைய மனத்தையும் கண்ணையும் கவர்கின்றது
காதல் கவர்ச்சியில்
பகை எங்கே தெரியப் போகிறது. (கா. ச-2:18)

திணை - குறிஞ்சி
துறை - வேட்கை கைம்மிகல்

96

★ என் நெஞ்சம் திறப்பவர் உன்னைக் காண்பர்

அன்பே!
உன் நல்லுள்ளமும் கனிமொழியும் மடநடையும்
என்னுள்ளத்தை ஈர்த்துக் கொண்டன
என்னுள்ளத்தில்
நீ நிலையான இடம் பெற்று விட்டாய்
என்னுள்ளம் உன்னையே அவாவி நிற்கிறது
என் நெஞ்சத்தைத் திறப்பவர்
யாரேனும் உளராஞல்
என்னெஞ்சினுள் நீயிருப்பதைக் காட்டுவேன். (கா. ச. 5:89)

திணை - குறிஞ்சி
துறை - ஆராக் காதலை வெளிப்படுத்தும் அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி—தலைமகன் தலைமகளுக்குக் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இளங்கொடி பூங்கொடி ஏந்திவருகிறது 97

உழவனின் மகனே!
உன்முன்னால்
கையில் பூங்கொடி ஏந்தியஒரு இளங்கொடி
உன் பார்வை எல்லைக்குள்
வளைய வளைய வருகிறாள்
அவள்மீது
உன் பார்வை நன்கு படிந்திருக்கிறது என்பது எனக்குத்
தெரியும். (கா. ச. 5:57)

திணை - குறிஞ்சி

துறை - கண்டோர் கூற்று-குறிப்பறிந்துரைத்தல்

★ யார்தான் சினந்துகொள்ள மாட்டார்கள்? 98

தன் குழந்தையை
உயிராகப் போற்றும் தாய் கூட
தான் குடும்ப வேலையில் ஈடுபட்டிருக்கும் போது
அழும் குழந்தையை வைது விடுகிறாள்
தாங்கள்
தக்க காலமும் சூழலும் ஏற்படும் வரை பொறுத்திருக்காமல்
என்னை நெருங்கி வரத்துணிந்தால்
யாருக்குத்தான் சினம் பொங்காமல் இருக்கும்?
கொஞ்சம் சொல்லுங்கள்; மகோதிகன் (4:100)

திணை - குறிஞ்சி

துறை - தலைமகள் தலைமகனைக் கழறிய செங்கடு மொழி.
செங்கடுமொழியாவது கடுமை கலந்த இன்சொல்.
கழறல்—இடித்துரைத்தல்.

★ தம்மையறியாமல் கற்றுக் கொள்கின்றனர் 99

காதற்கலையை
யார் கற்றுத்தர முடியும்?
அக்கலை எத்துணை நுட்பமானது!
களிப்பின் கருவூலமாக அது திகழ்கிறது
காதற் பெருக்கு மிகும்போது
மகளிர் இதனைத்
தம்மையறியாமல் கற்றுக் கொள்கின்றனர்.
(கா. ச. 5:77)

திணை - குறிஞ்சி

துறை - செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ உன்னைக் காணாத பெண்கள் நன்றாக இருக்கிறார்கள் 100

தலைமகளே!
உன்னைக் காணாத பெண்கள் தான்
இவ்வூரில் மகிழ்ச்சியோடிருக்கிறார்கள்
உரிய நேரத்தில் உண்ணுகிறார்கள் உறங்குகிறார்கள்
மற்றவர்கள் சொல்வது அவர்கள் காதில் படுகிறது
நாத்தடுமாறாமலிருக்கிறார்கள்
உன்னைக் கண்ட பெண்களின் நிலை இரங்கத்தக்கது
உன் அழகில் ஆயிரத்திலொருபங்கு கூட
அவர்களுக்கில்லையே
என்ற ஏக்கத்தாலும் பொறாமையாலும்
குமைந்து கொண்டிருக்கிறார்கள்.

தேவஏவன் (கா. ச. 5:18)

திணை - குறிஞ்சி

துறை - தலைவியை வியத்தல்—தலைவன் கூற்று

★ அவரைக் கண்டால் என்ன ஆவாய்? 101

அவரைப் பற்றிக்
கேள்விப்பட்ட அளவிலே வியந்துபோய் நிற்கிறாய்
நீ அவரை நேரில் பார்த்தால்
என்ன ஆவாயோ!
அவர் தூயவர்
அவரைக்கண்ட மகளிரின் உள்ளமும் உடலும்
தன்வயமிழந்து விடுகின்றன. (கா. ச. 5:78)

திணை - குறிஞ்சி

துறை - தலைமகனை இயற்பட மொழிதல்—தோழிகூற்று.
இயற்பட மொழிதலாவது குடியும் குணமும் ஏத்திப் புகழ்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முல்லைத்திணை

இல்லறம் என்னும் நல்லறம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''இல்லிருத்தல் முல்லை''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இன்றுபோல் என்றும் வாழ்க

அருமை மகளைத் தொலைவூருக்குத் திருமணம் செய்து அனுப்பிவிட்டார்கள். ஆண்டுகள் சில கழிந்தன. தாயின் மனம் துடித்தது. மகளைக் காணுமல், அவள் நலம் பற்றிய, இல்வாழ்க்கையின் திறம் பற்றிய செய்தி எதுவும் எட்டாத நிலையில் இருப்புக் கொள்ளாமல் கன்றை இழந்த, கற்ரு (தாய்ப்பசு) போல் கதறிக் கொண்டிருந்தாள். கள்ளரும் கடுவிலங்கும் நிறைந்த காட்டுவழியாக மகளைப் பார்த்துவர செவிலித் தாயை அனுப்பி வைத்தாள்.

பல நாட்களாகப் பயணம் செய்து காடுகளையும் மலைகளையும் கடந்து செவிலித்தாய் மகளின் வீட்டு வாசலில் போய் நின்ருள். அவள் கண்ட காட்சி;

குழந்தை
தன் தந்தையின் கழுத்தை ஒரு கையால்
அணைத்துக்கொண்டு சிரிக்கிறது
அவன் குழந்தைக்குச் சிரிப்பூட்டுகிருன்
அவள்
தன் கணவனையும் குழந்தையையும் சேர்த்து
அணைத்துக்கொண்டு
மெய்ம்மறந்து பூரிப்படைகிருள்
நாணமும் முறுவலும் இழையோட
நகை மொழியாடுகிருள். [கா. ச. 3 : 43]

திணை - முல்லை

துறை - மணமனை கண்டுவந்த செவிலிகூற்று.

இந்த இனிய காட்சியைக் கண்ட செவிலித் தாய்க்கு வழிநடை வருத்தமும், பசியும் தானுக மறைந்து பெரிய விருந்துண்டு களித்தது போல் அவள் உள்ளம் முழுமையான நிறைவால் நீரால் நிறைந்த குளம்போல் தணிவு (நிம்மதி) அடைந்தது இன்றுபோல் என்றும் வாழ்க என அவள் உள்ளம் அவர்களை வாழ்த்தியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அளவுக்கு மீறி அன்பைப் பொழியுங்கள் 103

உங்களைத்
தவமாய் தவமிருந்து மணந்து கொண்டேன்
எவ்வளவு அன்பைப் பொழிய முடியுமோ
அவ்வளவும் பொழிந்து விடுங்கள்
ஏனென்றால்
எவ்வளவு அன்பைப் பொழிந்தாலும்
தாங்கிக்கொள்ள முடியும்
துன்பமானவற்றை
ஒருசிறிதும் பொறுத்துக்கொள்ள முடிவதில்லையல்லவா?
என்றால்
எதைத் தாங்கிக் கொள்ள முடியுமோ அதைத்
தாங்கள் எனக்கு வழங்குவதுதான் தகுதி
அன்பு மெல்லிய உணர்வு
நானும் மென்மையானவள்
அளவுக்குமீறி அன்பு பொழியுங்கள்
அந்தப் பெருங்களிப்பில் நான் திளைக்கும்போது
உங்களையும் களிப்பு வெள்ளத்தில் ஆழ்த்திவிடுவேன்.

முத்தசீல [கா.ச : 71]

திணை - முல்லை

துறை - அகமலிவுரைத்தல் (உள்ள மகிழ்வின் பெருக்கம் கூறல்)

★ பசுமையான நினைவு 104

நாங்கள்
வயிரம் பாய்ந்து முற்றி முதிர்ந்த மரங்கள்
இப்போது கிளைகளும் நீங்கின
அடிமரம் தான் நிற்கிறது
நாங்கள் மூப்பின் எல்லையில் நிற்கிறோம்.
காதலின் வேர் கட்டுடைந்து விட்டது
எனினும்
பசுமரமாக இருந்து செழித்துத் தழைத்துப்
பயன் மரமாக வாழ்ந்த காலத்தின்
பசுமையான நினைவுகள்
இன்னும் பசுமையாகவே இருக்கின்றன.

(கா. ச. 3:32)

***திணை*-முல்லை**

***துறை*; மனைமாட்சி**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நீ பெரிதும் விரும்புவது எது? 105

அன்பு மனையாளின் முகத்தில் மலர்ச்சி பெருகியுள்ளது
காரணம் வேறொன்றும் இல்லை
அவள்
முதன்முதலாகத் தாயாகப் போகிறாள்
குடிவிளங்க குலக்கொழுந்தைக் கருவுற்றிருக்கும்
முதற்சூலானை நோக்கி
'உனக்கு எந்தப்பொருளின் மீது அதிக விருப்பம்?
ஆசைப்பட்டதைக் கூசாமல் சொல்
வாங்கித்தருகிறேன்' என்றான் கணவன்
நாணி நின்ற அவள்
மறுமொழியே தராமல் விரல்நுனியைக் கடித்தவாறு
குனிந்ததலை நிமிராமல் அசைவற்றிருந்தாள்
அவன் மேலும் மேலும் கேட்டான்
உன்னால் சொல்லமுடியவில்லை என்றால்
அப்பொருள்களையாவது குறிப்பாகக் காட்டு என்றான்
அவள்
தன் கணவன் மீது
கடைக்கண் பார்வை செலுத்தினாள். (கா.ச. 1 : 15)

திணை - முல்லை

துறை - அன்புமிக உரைத்தல் — தோழி செவிலிக்குக் கூறியது.

★ இன்னும் மனதில் மகிழ்ச்சியூட்டுகிறது 106

அன்பே!
அன்றொரு நாள் நம் ஊரிலுள்ள வீடுகள்
தீப்பற்றி எரிந்தன அல்லவா?
அன்று அத்தீயை அணைப்பதற்காக
நம் இருவர் கைகளும் மாறி மாறித்
தண்ணீர்க் குடங்களை எடுத்துத் தந்த காட்சி
இன்னும் என் மனதில்
மகிழ்ச்சியூட்டிக்கொண்டேயிருக்கிறது.
பெச்சலன் (கா.ச. 3;29)

திணை-முல்லை

துறை - அன்பினது அகல்மும் அகற்சியது அருமையும் தெரிவுறக் கூறுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வாழ்க்கை இனிக்கிறதா? 107

தோழி!
வாழ்க்கை இனிக்க வேண்டுமா?
இனிமை மிகவேண்டும் என்பதையே நீ விரும்பு
திருமணம் செய்துகொண்ட நாளைவிட
வாழ்வின் இறுதிக்காலத்திலும்
காதல் அகவுணர்வு இனிக்க வேண்டும்
அது அப்போது
உண்மைஅன்பின் ஈர்ப்பு உணர்வாக
உள்ளத்தில் ஒளிவீசிக்கொண்டிருக்கும்.
முதுமையிலும் அன்புகுறையாத அகவாழ்வும்
பரிசுதரப்படும் அல்லது பெறப்படும் விழாவும்
வேடிக்கைகளோடு கூடிய உறவினர் நட்பும் சிறந்தவை
அப்படியில்லாத வாழ்க்கை
விடியற்கால முழுநிலாவைப்போல்
பொலிவுதராமல் குன்றிப் போகும். [கா. ச. 68]

திணை - முல்லை
துறை - மனைமங்கலம்

★ விந்தையானது ஆனால் உண்மையானது 108

பொதுவாகக்
கார் காலத்தில் நடவாதது இல்லை
என்று சொல்வார்கள்
இந்தப் பெண்
குரவ மலர்களின் மணம் நுகர்ந்தும்
கற்புக் கெடாமலிருக்கிறாள் என்பது
விந்தையாக இருக்கிறது
நான் சொல்வது முற்றிலும் உண்மை.

தேவராயன் (கா. ச. 3:19)

திணை - முல்லை
துறை - மனைமாட்சி

தலைமகன் நோயுற்றோ ஊனமுற்றோ நீடித்துக் கிடந்த காலத்துத் தலைமகளின் கற்பின் திண்மையை தோழி புகழ்ந்தவாறு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ போர்வையை விற்றுவிட்டான் 109

மிகவும் ஏழையான உழவன்
ஒருநாள் சந்தைக்குப் போனான்
எருதுவாங்க வேண்டும் என்று அவனுக்கு ஆசை
ஆனால் கையில் பணமில்லை
சிறிது நேரம் சிந்தித்தான்
குளிர்காலமாக இருந்தால் என்ன ?
தன் இல்லாளின் கொங்கை வேது
தன்குளிரைப் போக்கிவிடும் எனஎண்ணித்
தன் கம்பளிப் போர்வையை விற்றுவிட்டு
எருது வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

திணை - முல்லை (கா.ச. 3:38)

துறை - குறிப்பறிவுறுத்தல் - தோழி கூற்று.

★ நெய்வழியும் முகம் 110

நெய் வழியும் முகத்தோடு ஏன் நிற்கிறாய்
என்று இளையதோழி கேட்டாள்
அவள் தன் இடையை
இரட்டையாய் மடித்த புடவைத் தலைப்பால் சுற்றிக்கொண்டு
நாணி முறுவலித்தாள்.

அலக்கன் (கா. ச. 3:89)

திணை - முல்லை

துறை - மனைமங்கலம் - செவிலி கூற்று.

தலைமகள் தாயாகப் போகிறாள் என்பது குறிப்புப் போலும்!

★ கறை எவ்வாறு வந்தது ? 111

சமையற்கட்டிலிருந்துவந்த
நிலா முகத்தாளின் கன்னத்தில்
நிலவில் உள்ளது போன்றே
கருமையான கறை எவ்வாறு வந்தது என்று
கணவன் வியப்புற்று நகைத்தான்
மனைவி தன் விரல்களைப் பார்த்தாள்.

சாதவாகன மன்னன் ஆளன் [கா. ச : 13]

திணை - முல்லை

துறை - மனைமங்கலம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ விரும்பத்தக்கவர் நீர் 112

[கரும்பை நுனியிலிருந்து அடிப்பகுதி நோக்கி தின்னத்தின்ன சுவைமிகுவது போல் நல்லவர்களின் நட்பு நாட்பட நாட்பட இனிக்கும். தலைவி என்னைப் பற்றி என்ன நினைக்கிறாள். எவ்வாறு உள்ளுக்குள்ளே என்னை மதிக்கிறாள் என்று சொல்ல முடியுமா என்று தலைவன் தோழியைக் குறிப்பாக வினவினான். ஓர் அரசன் தன்னாட்சியைப் பற்றி குடிமக்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை ஒற்றர்வாயிலாக அறிவதைப் போன்றதிது என்றுணர்ந்த தோழி உள்ளபடி சொல்லத் தொடங்கினாள்].

தங்களைப் போன்ற பண்பாளர் அரியர்
உலகில்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று
பேசுகின்றவர்களைப் பற்றியே
அதிகமாகக் கேள்விப்படுகிறோம்
இதுவே தங்களைப் பற்றியும் இந்த உலகத்தைப் பற்றியும்
தலைவி கொண்டிருக்கிற அசையாத நம்பிக்கை என்றாள்
தோழி.

திணை - முல்லை

துறை - தோழி முன்னிலைப்புற மொழியாகத் தலைமகனை இயற்பட மொழிதல் போசயன் (கா. ச-29)

★ ஆசையைக் காக்கின்றாள் 113

குடும்பத்தின் வறுமை நிலையை
நன்குணர்ந்த குலமகள் அவள்.
கருக் கொண்ட நாளிலிருந்து
'உனக்கு விருப்பமான உணவு வகைகளைக் கேள்
வாங்கித் தருகிறேன்'
என்று கணவன் வற்புறுத்துகிறான்.
மாமியும் 'நீ ஆசைப் படுவதைக் கேள்' என்கிறாள்.
ஆனால் அக்குலமகள்
நெருங்கிய நண்பன் வீசிய கடுஞ்சொல்லை
யாரிடத்தும் சொல்லாமல் காப்பது போல்
தான் விரும்பும் தின்பண்டத்தின் பெயரை
வெளியில் சொல்லாமல் தன்னைக் காத்து வருகிறாள்.
விக்கிரன் (கா. ச. 3:70)

திணை-முல்லை

துறை – மனைமாட்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இதழில் மணம் 114

அருங்கலச் செல்வியே !
அடுப்பில்தான் நெருப்பு புகைகிறது
உன் நறுமலரிதழ்களில் என்ன புகைகிறது ?
பாடல மலர்களின் மணம்
உன் இதழ்களுக்கு எவ்வாறு வந்தது
உன் மூச்சிலும் அம்மணம் கமழ்கிறதே !
பிமசாமினே (கா. ச. ; 14)

திணை - முல்லை

துறை - பெருநயப்பு உரைத்தல்

★ தாய் குழந்தையின் பின் ஓடுகிருள் 115

தெருவில் முடிதிருத்தாளன் (நாவிதன்) வந்தான்
தெருவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை
அவனைக் கண்டு அஞ்சி ஓடுவதைக் கண்ட அவள்
விரிந்த கூந்தலைக் கோதிய விரலினளாய்
குழந்தையின் பின்னே ஓடுகிருள்,
மாவுராயன் (கா. ச. 3:91)

திணை-முல்லை

துறை - மணமங்கலம்

★ ஊழ் என்ன செய்யும்? 116

ஊழ்வினை (விதி) வலிமையுடையது என்கிருர்கள்
அந்த ஊழால்
என்னிதயத்தில் உள்ள அவரைப் பிரிக்க முடியுமா ?
என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கும் அவர்
இன்னுரையைக் கவர்ந்து கொள்ள முடியுமா ?
அவர் என்னைத் தொடுதலால் ஏற்பட்ட இன்பவுணர்களைப்
பறித்துக் கொள்ள முடியுமா ?
என் கண்ணில் நிலைத்து உயிரோடு ஒன்றிப் போய் விட்ட
அவருடைய எழிலுருவத்தை எடுத்துச் செல்ல முடியுமா ?
வேறு என்ன செய்துவிட முடியும் என்று கேள்
காதல், நினைவின் வடிவம் என்பதை
அந்த ஊழுக்கு (விதிக்கு) நினைவுபடுத்து. (கா. ச-2:32)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வறுமை வரக்கூடாது 117

குப்புசமரம்
இலையுதிர்ந்து கிளை வாடினாலும் மீண்டும் தழைக்கக்கூடும்
ஆனால்
ஆணும் பெண்ணுமாய் அழகான இல்லறம் நடத்தி
வளமாக வாழ்ந்த வள்ளலுக்கு
இந்த உலகில் வறுமை வரலாமா?
நல்லவர்களுக்கு வறுமையே வரக்கூடாது.

(கா. ச. 3:30)

திணை-முல்லை

துறை - வளமனை கண்டு வந்த பாணன் கூற்று

★ செவ்வாடை உடுத்து இனிப்பு வழங்குகிறாள் 118

தோழா!
அதோ உன் மனைவி
புதுச் செவ்வாடை உடுத்திருக்கிறாள்
உன்னை மீண்டும் சந்திக்கும் ஆசையால் உந்தப்பட்டு
வீட்டை விழா நாள் போல் ஒப்பனை செய்திருக்கிறாள்
தானே செய்த இனிப்புகளைத் தட்டிலேந்தி
வீடு வீடாக இன்று வழங்கி வருகிறாள்

தனஞ்சய (கா. ச. 4:28)

திணை-முல்லை

துறை - வரவு கண்டு மகிழ்தல்

★ நல்லவர் தொடர்பு 119

தோழி!
என் இல்லற வாழ்வைப்பற்றிக் கேட்கிறாய்
என் கணவர் நல்லவர்; நல்லவரின் நட்பால்
முகத்தில் ஒளியும் உள்ளத்தில் களிப்பும்
நாளுக்கு நாள் பெருகி வளரும்; நிலைத்து நீடிக்கும்
என்பது உனக்குத் தெரியாதா என்ன ?
தந்தைபட்ட கடன்
மகனுக்கும் செல்வது போல
எங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியும் களிப்பும்
மரபு வழி நிலைத்து நீடிக்கும். இந்தசன் (கா. ச-2:13)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஒரே சீரான வாழ்வு 120

அன்னையே!
முந்தைய ஆண்டுகளைப் போலவே
இந்த ஆண்டும் தங்கள் மகள்
கணவனோடு எவ்வாறு இல்லறம் நடத்துகிறாள் என்று
கண்டு வந்தேன்
அவர்கள் வாழ்க்கை
என்றும் ஒரே சீராக மகிழ்ச்சியின் உறைவிடமாக உள்ளது.
இது எவ்வாறு இயலுகிறது என்றால்
அவள் கணவன் சான்றோன்
சான்றோர் நன்றாகும் போதும் அன்றாகும் போதும்
ஒரே நிலையில் இருப்பவர்
வாழ்விலும் தாழ்விலும் கலங்காதவர்
செல்வம் உள்ளபோது செருக்கடைவதில்லை
வறுமை வந்தபோது வாடுவதில்லை
இடுக்கணும் ஏதமும் (ஆபத்தும்) வருமுன்
ஏமாந்திருப்பதில்லை. பணாளன் (கா.ச. 4.79)

திணை - முல்லை

துறை - மணமனை கண்டுவந்த செவிலி கூற்று.

★ பிரிவுத் துன்பம் தோன்றவில்லை 121

நான் உன்னைப் பிரிந்த பிரிவுத்துயரை
எப்படித் தாங்கிக் கொண்டாய்
என்று கணவன் கேட்டான்
அதற்கு அவள் மறுமொழி தந்தாள்
தாங்கள் சினந்து கொள்ளமாட்டீர்கள் என்றால்
சொல்லுகிறேன்
தங்களைப் பிரிந்த நாட்களில்
தங்கள் நடை பேச்சு பார்வை ஆகியவற்றை அப்படியே
நான் தோழிமாரோடு நடித்துக் காட்டி
மகிழ்வதன் மூலம்
பிரிவுத் துன்பத்தை மறந்திருந்தேன்
தவறாயின் பொருத்தருள வேண்டும் என்றாள்.
கல்லணசீயன் (கா. ச. 4:78)

திணை -முல்லை

துறை - ஒரு வழி உள்ளுதல். ஒரு வழி உள்ளுதலாவது
அவரையே நினைந்திருத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இறப்பாள், கற்பிழக்கமாட்டாள்! 122

அவள் கணவன் கிழவன்
வீட்டில் பழைய கள் இருக்கிறது
அச்சிற்றூரில் இளைஞர் மிக்குள்ளனர்
கார்காலம் என்பதாலும் தனிமை தாளாமலும்
அவள் இறந்தாலும் இறந்து விடுவாளே ஒழிய
எத்தகைய சூழலிலும் கற்பு தவறமாட்டாள்
பழிச்சொல் ஏற்க மாட்டாள். (கா. ச. 2:97)

திணை-முல்லை

துறை - மனைமாட்சி

★ உன் கணவன் கொடுத்து வைத்தவன் 123

தக்கவளே!
உன்னைக் காணும் பேறு பெற்றவர்களின் உள்ளமே
இன்பக்கடலில் ஆழ்கிறது
அப்படியிருக்க
உன்னை மனைவியாக அடையும் பேறு பெற்றவன்
எவ்வளவு மகிழ்வான்
உண்மையிலேயே
உன் கணவன் கொடுத்து வைத்தவன்.

ஆயவராயன் (கா. ச. 1:85)

திணை - முல்லை

துறை - தலைமகளை இயற்பட மொழிந்தது—தோழி கூற்று.

★ இடை மெலியட்டும் 124

அவள் உப்புல்லியம் விளையாடட்டும்
அவளைத் தடுக்காதீர்
அவளுடைய உடற்பருமன்
அப்படியாவது குறையட்டும் இடை மெலியட்டும்.

வச்சலன் (கா. ச. 2:96)

திணை-முல்லை

துறை - மனைமங்கலம் தலைவன் தோழிக்குக் கூறியது

குறிப்பு - உப்புல்லியம் என்பது ஏற்ற மரம் என்னும் விளையாட்டு. தரையில் படுத்தநிலையில் முன்கால் மடக்கி பாதத்தின் மீது குழந்தையை அல்லது சிறுவரை வைத்து காலை மேலே தூக்கி ஆட்டங் காட்டும் விளையாட்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நானென்ன செய்வேன் 125

முதன் முதலாகக் குழந்தை பெற்ற இளம்பெண்
எல்லோரும் நகைக்குமாறு
என் கணவர் என்ன சொல்வாரோ!
இதற்கு நானென்ன செய்வேன்
என்று கூறுகிறுள். அனுராயன் (கா. ச-2:23)

திணை - முல்லை

துறை - மனைமங்கலம்

★ மனைவியின் மாறாத அன்பு 126

கணவன் தள்ளாத மூப்படைந்தாலும்
தலைநரைத்து உடல் திரைந்தாலும்
மனைவியின் அன்பு மாறுவதில்லை
கணவன் மூப்படைய மூப்படைய
குலமகளான மனைவியால்
அதிகமாக மதிக்கப்படுகிறுன். போட்டசன் (கா. ச. 3:93)

திணை-முல்லை

துறை - மனைமாட்சி

★ உன்னை நம்பியே...... 127

ஆவே (பசுவே)!
உனக்காகவே காளை வாழ்கிறது
இளங்கடாரிகள்
காளையின் காப்பால் நலம் பெறுகின்றன
ஆவே! நீ வாழ்ந்தாக வேண்டும்
இந்தக் கொட்டில் உன்னையே நம்பியிருக்கிறது.
(கா. ச. 7:38)

திணை - முல்லை

துறை - தலைமகளைப் பிறிது மொழிதலாக இயற்பட மொழிந்த தோழியின் கூற்று.

தலைமகள் நீங்கள் நோய் வாய்பட்ட ஞான்று, இல்லத்தரசியின்றி இல்லறம் சிறவாமையின் தோழி பிறிது மொழிதலாகத் தலைமகளின் உடல் நலம் தேறுதலை அவாவியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஊர்த்தலைவனின் மகன் 128

ஊர்த்தலைவனின் மகன்
இளமையும் வலிமையும் மிக்கவன்
இச்சிற்றூரை நன்கு காக்கின்றான்
அவன் குடிகள் அவனை மனமாரப் பாராட்டுகின்றனர்
அவன் பகைவர்
அவன் பெயரைக் கேட்டே அஞ்சுகின்றனர்.

(கா. ச. 7:28)

திணை - முல்லை

துறை - புக்ககம் செல்லும் மணமகளான தலைமகளுக்குத் தோழி கூறியது.

ஆணின் திறனும் உரனும், மனைவியின் பண்பும் அன்பும் காரணமாகப் பெருகுதலின் அவனைப் புகழ்வது, அவன் இல்லும் குடியும் காத்து வரும் மரபுவழிப்பட்ட குடியின் இயல்பை வலியுறுத்துவ தாகும். ஆதலின் அவன் நிழல் வாழும் அனைத்துக் குலமகளிரின் கற்பும் பொற்பும் சிறக்கும் எனக் குறிப்பான் கூறியதாயிற்று.

★ குழந்தை கடித்த பழம் 129

குழந்தைக்குப் பல் முளைத்தது
முதன் முதல் முளைத்த பல்லால்
கடித்த பழத்தை
ஆர்வத்தோடு தன் கணவனிடம் காட்டி
முறுவலிக்கிறாள். (கா. ச-2:100)

திணை - முல்லை

துறை - மணமனை கண்டு வந்த செவிலி நற்றாய்க்குக் கூறியது.

★ வானத்தை ஏன் பார்க்கிறீர்? 130

வானத்தை ஏன் பார்க்கிறீர்
உம் இல்லாளைப் பாரும் கொழுந்தனாரே! (கா. ச. 6 : 70)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி தலைவி தன் கொழுந்தனுக்குக் கூறியது.

குறிப்பு வேறுபட்டவனை நெறிப்படக் கழறலும் தாய் போல் கழறி தகுதிபடுத்தலும் ஆய்மனைக் கிழத்தியின் அருந்திறன் எனத்தகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ என்மகன் களிறுகளைக் கொல்வதில்லை 131

என்மகன் அம்பை ஏவினால்
எத்துணையோ பிடிகள் (பெண் யானைகள்) கைம் பெண்களாகி விடும்
இது என் மருமகளால் கவனிக்கப்பட்டதும்
என்மகன்
தன் வேட்டையின் போக்கை மாற்றிக் கொண்டான்
அவன் அம்பருத்தூணி நிரம்ப அம்புகளை எடுத்துச் செல்கிறான்
ஆனால் அவற்றை மிகுதியாகப்பயன் படுத்துவதில்லை.
(கா. ச. 7;30)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி

★ யாராவது போய் சொல்லமாட்டார்களா? 132

விரைந்து பாயும் வேட்டை நாய் இறந்து விட்டது.
மாமியாரோ பித்துற்றாள்
கணவரோ இன்னும் வரவில்லை
காட்டெருமைகள் பருத்திக் காட்டை அழிக்கின்றன
இச்செய்தியைக்
கணவருக்கு யாராவது போய் சொல்லமாட்டார்களா?
(கா. ச. 6 : 49)

திணை - முல்லை

துறை - இடும்பை கூர் எவ்வந்தாங்கி இருந்தோம்பி இல் வாழ்தல் எனின் அமையும்.

★ அந்த வேளையில் எங்கே போவது? 133

அன்னாய்!
இந்தக் கிளி
வேண்மாட (அந்தப்புர) நிகழ்ச்சிகளைப் பெரியோர்
முன்னிலையிலும் சொல்லி விடுகிறது
அந்த வேளையில்
எங்கே போவது என்று தெரியாமல்
விழிக்க வேண்டியிருக்கிறது. (கா. ச. 6 : 89)

திணை - முல்லை

துறை - செவிலியிடம் தலைமகள் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நல்லதும் தவிர்ப்பான் 134

தோழி!
என் கணவனின் கடமையுணர்வின் திறத்தை வினவுகிறாய்
நற்குடிப்பிறந்த ஆடவர்
நன்மை தரும் செயலாயினும்
அதனால் ஒரு சிறு தீமை அல்லது பழி நேருமாயின்
அச்செயலைச் செய்யாமல் அறவே ஒதுக்கி விடுவர்
என் கணவரும் அப்படித்தான்
நன்றும் தீதும் ஆராய்ந்து
தீதின் திறம் நோக்கி
நன்மையைக் கூடத் துறக்கத் துணிந்து விடுவார்.
மாண இந்தன் (கா. ச-2:14)

திணை - முல்லை

துறை - தலைமகள் தோழியிடம் தலைவனை இயற்பட மொழிந்தது.

★ கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது 135

செல்வமும் பண்பும் மிகுந்த
எங்கள் இளமைக்கால எழில்மிகு வாழ்வை
எங்கள் சிற்றூரார்
இன்னும் பெருங்காப்பியக் கதைகளைப் போல்
வண்ணித்துப் பேசுகிறார்கள்
இந்தத் தள்ளாத பருவத்திலும்
அதைக் கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.
(கா. ச. 6 : 17)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி

★ குரவம் சிரிக்கின்றது 136

அத்தையே
தான் மேற்கொண்ட பணி முடியு முன்பே திரும்பி வந்து
வீடு சேர்ந்து விட்டார்.
கார் காலத்தில் மலர வேண்டிய குரவ மலர்
இப்போதே தன் சிறிய முகைப் பற்களைக் காட்டிச்
சிரிக்க ஆரம்பித்து விட்டது. (கா ச. 6 : 37)

திணை - முல்லை

துறை - வரவு கண்டு மகிழ்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இல்லத்தலைவியின் நல்லொழுக்கங்கள் 137

நேற்று வரை
விளையாடிக்கொண்டிருக்கும் சிறுமியருள் ஒருத்தியாக
இவளை இவளுடைய பெற்றோர் கருதிக்கொண்டிருந்தனர்
இன்று
திருமணமாகி இல்லறத் தலைமையேற்றகுலமகளான
பின்பு
இவளிடம் பெருந்தன்மைகள் நிறைந்து காணப்படுகின்றன
அதன்படி
முகம் நிமிராமல் பார்க்கிறாள்
பற்கள் தெரியாமல் சிரிக்கிறாள்
வாயிலைக் கடக்காமல் நடமாடுகிறாள்.
இவள் வாழ்க (கா. க. 6 : 25)

திணை - முல்லை

துறை - மணமனை கண்டு வந்த செவிலியின் கூற்று

★ மனைவி மாண்புடையவளானால் 138

திறமையில்லாதவனாயினும்
அறவே நற்பேறு இல்லாதவனாயினும்
அவனுக்கு வாய்த்த மனைவி
உயர்ந்த குலமகளாகவும் கணவனுக்கு அடங்கியவளாகவும்
உயர் பண்புகளால்
நிரம்பியவளாகவும் இருந்தால்
அவனுக்கு இல்லாததென்ன? அவன் கொடுத்து
வைத்தவன்
அடங்காத மனைவியை உடையவன்
அல்லது குலமகள் அல்லாதவளை மணந்தவன்
நிலவுலகம் முழுவதையும் தனக்கே உரிமையாகவுடைய
செல்வனாக இருந்தாலும்
உண்மையில் மிகவும் வறியவனே. (கா. ச. 6 : 15)

திணை - முல்லை

துறை - பாங்கன் தலைமகனை இயற்பட மொழிதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ பொறுப்பு மிகுந்த இல்லத்தரசி 139

இப்பொழுது
இவள் பொறுப்பு மிகுந்த இல்லத்தரசியாகி விட்டாள்
குடும்பச் சுமைகளை
மிகுதியாக ஏற்றிருப்பதன் விளைவாக
இளமைக்குரிய புன்முறுவல் கடைக்கண்ணோக்கு
ஆகியவற்றுக்கு
நீர் வார்த்து விட்டாள். (கா. ச. 7 : 6)

திணை - முல்லை

துறை - மணமனை கண்டு வந்த செவிலி நற்றாய்க்குக் கூறியது.

★ குலமகளுணர்த்தும் குறிப்பு 140

குலமகளிர்
தம் வெறுப்புகளைப் புன்முறுவலாலும்,
தம் கணவரை அதிகமாகப் பேணுதலாலும்
வெளிப்படுத்துவர்
தம் துன்பங்களையும், நலங்களால் பெற்ற மகிழ்ச்சியையும்
கண்ணீரால் வெளிப்படுத்தும் ஆற்றலுடையவர்.
இதனைக்
குறிப்பால் உணரும் ஆற்றலுவடைய கணவன்மார் சிலரே.
(கா.ச. 6 13)

திணை - முல்லை

துறை - குறிப்பறிவுறுத்தல்
தோழி தலைமகனிடம் முன்னிலைப் புறமொழியாகக் கூறியது.

★ நாணிக் கோணுகிறாள் 141

கணவன்
அவளை 'இங்கே வா' என அழைக்கிறான்
புடைவைத் தலைப்பை இடுப்பில் செருகிக் கொண்டு
புன் முறுவலோடு நலை கவிழ்ந்தவாறு
நாணிக் கோணிச் செல்கின்ற அவளைப் பார்த்தாயா?
(கா. ச. 6 : 3)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி - மணமனை புக்க தலைமகளின் தலை நாள் இல்லறத்தைச் செவிலி தோழிக்குக் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ உழவனின் பாட்டு 142

நல்ல விளைவினைக் கண்ட உழவன்
மெய்ம்மறந்து பாடுகிறான்
வெண்ணெல் வெண்சோற்றுருண்டை போல்
விளங்கும் முழுவெண்ணிலவில்
அவன் பாட்டு
அனைத்துத் திசையிலும் எதிரொலிக்கிறது, (கா. ச. 7:89)

திணை - முல்லை

துறை - அகமலி உவகை.

நல்ல விளையுளுக்கும், அன்பான உளப்பாங்குக்கும், நன்கமைந்த மாண்புடைய இல்லாள் காரண மாதலின் உழவனின் உள்ளத்து உவகை மிகுவ தாயிற்று.

★ அடிப் பேதைப் பெண்ணே! 143

அவரால்
என் வளையல் உடைந்ததென்று
மற்றவர்களிடம் ஏன் சொல்லுகிறாள்
இதையெல்லாம் பிறரிடம் சொல்லலாமா?
ஒன்று
இவள் அறியாத பேதைப் பெண்ணாக இருக்க வேண்டும்
அல்லது இவளுடைய கணவன்
அத்தகையவனாய் இருக்க வேண்டும். (கா. ச. 5 :38)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி - செவிலி தோழிக்குக் கூறியது,

★ கண்ணிருந்து என்ன பயன் 144

ஊரில்
பிற குல மகளிருக்குக் கூட
அழகிய கரிய நீண்ட விழிகள் உள்ளன
இருந்து என்ன பயன்?
தன் கணவனை
ஆர்வம் ததும்ப கடைக் கண்ணால் எப்படிப் பார்க்க
வேண்டும் என்று
இவள் ஒருத்திக்குத்தான் நன்கு தெரிந்திருக்கிறது.
(கா. ச. 5 : 70)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி - தோழி தன்னுள் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வாடுவோர் ஐவர் 145

வேடனின் மனைவி
மகிழ்ச்சி நிறைந்த அன்பு வாழ்வினள்
அதனால் அவள் பூரித்துப் போய் விட்டாள்
அவள் நகில்கள் பருத்ததால் வாடுபவர் ஐவர்
அவளுடைய காதலனாகிய வேடன்
அவளுடைய உற்றார் உறவினர்
அவளுடைய மெலிந்த இடை
உள்ளூர் இளைஞர்
வேடனின் பரத்தையர் ஆகிய ஐவரையும்
வாட்டும் ஆரணங்கு அவள். (கா. ச. 6 : 97)

திணை - முல்லை

துறை - அகமலிபு உரைத்தல்

★ இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை 146

மகனே!
குடும்பத்திலுள்ள அனைவர்க்கும்
எது நன்று எது தீது?
எது நலமும் இன்பமும் தரும்? எது துன்பம் தரும்? என்று
எவள் அறிந்து கடைப்பிடிக்கிறாளோ
அவள்தான் உண்மையான இல்லத்தரசி;
வாழ்வாங்கு வாழத்தக்க வாழ்க்கைத் துணை.
அப்படி வாய்த்தவள் உன் மனைவி.
மற்றவர்களெல்லாம் வடிவத்தால்தான் மகளிர்
(கா. ச. 6 : 12)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி

★ தண்ணீர் மேல்தான் ஆசை 147

கருவுற்ற இல்லத்தரசியை நோக்கி
'உனக்கு எந்தப் பொருள் மீது ஆசையாக இருக்கிறது
சொல்'
என்று பல முறை கேட்கிறார்கள்
கணவனின் வறுமை நிலையை எண்ணிப் பார்த்துத்
தனக்குத் தண்ணீர் மேல்தான் ஆசை என்கிறாள்.
(கா. ச. 5 : 72)

திணை - முல்லை

துறை - மனைமாட்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஏனைய மரங்கள் தாழ்ந்து விட்டன 148

காட்டில் சிறிதாக முளைத்த ஆலமரம்
பெரிதாக வளர்ந்ததால்
அக்காட்டிலிருந்த ஏனைய மரங்களெல்லாம்
தாழ்ந்து சிறியனவாகக் காணப்படுகின்றன

(கா. ச. 7 : 70)

திணை - முல்லை

துறை - தலைமகளின் இல்லறச் சிறப்பைத் தோழி வியந்தது.

தலைமகளின் இல்லறம், பண்பு மேம்பாட்டாலும் இல்லற ஒழுகலாறுகளாலும் அவ்வூரிலுள்ள அனைத்து இல்லறத்தாரினும் மேம்பட்டுக் காணப் படுவதால் இவள் குடும்பம் ஊராரால் போற்றப் படுகிறது என்பதைத் தோழி பிறிது மொழிதலாகக் கூறினாள்.

★ உயிர் தளிர்ப்பத் தீண்டும் இவள் 149

ஒப்பனை மிக்கதும் நறுமணம் கமழ்வதும்
இடமின்றி நெருங்கியதும் பருத்ததுமான
இவள் நகில்கள்
அகன்ற மார்பைத் தீண்டுங்கால் தோன்றும் இன்பம்
குற்றமற்றதும், சொற் பொருள் நயம் மிக்கதும்
அணியழகு நிறைந்ததுமான அழகிய கவிதைகளைக்
கற்று உரையாடுவது போன்ற
நீடித்து நிலைத்த உள்ளக் கிளர்ச்சி தரும் இன்பமாக
இலங்குகிறது.

(கா. ச. 3 : 28)

திணை - முல்லை
துறை - பெருநயப்பு உரைத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நீர்ச்சால் போன்றவர் அல்லர் 150

நாட்டுப்புறங்களில் வயலுக்கு நீரிறைக்கும் நீர்ச்சால்
நீர் முகந்து மேலே வரும் போது பருத்துப் புடைத்தும்
நீரைக் கொட்டியபின் சுருங்கித் தலைகவிழ்ந்து
முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு
கீழ் நோக்கிப் போவதும் போல
கொடியவர்கள்
செல்வம் பெற்ற காலத்தில் முகம் புடைத்து
ஆரவாரத்தோடு காணப்படுகின்றனர்
செல்வம் இழந்தபிறகு
முகம் வாடி வதங்கி மெல்ல இயங்குகின்றனர்.
ஆனால் நம் தலைவியின் வாழ்க்கை அவ்வாறன்று
வறுமையிலும் வளத்திலும்
நிலை குன்றாமல் மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள்.

(கா. ச. 5 ? 90)

திணை - முல்லை
துறை - மனைமாட்சி — செவிலி தலைமகளைப் புகழ்ந்தது.

★ இவ்வூரில் வேறு யாரும் இருக்கக்கூடாது 151

அவன்
அவள் ஒருத்தியின் முகத்தையே காண விரும்புகிறான்
வேறு எந்தப் பெண் எதிரில் வந்தாலும்
தலை கவிழ்ந்தவாறு பேசுகிறான்
அவளோ
அவன் ஒருவனைத் தவிர
வேறு யாரையும் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன்
என்கிறாள்.
இவர்கள் இருவரின் கண்களும் எல்லாவற்றையும்
காணுமாறு நிமிர வேண்டுமானால்
இவர்கள் இருவரைத் தவிர வேறு ஆடவர் பெண்டிர்
எவரும்
இவ்வூரில் ஏன், இவ்வுலகில் இருத்தலாகாது.

(கா. ச. 5 : 98)

திணை - முல்லை
துறை - அன்பினது அகலம் விரித்துக் கூறி மகிழ்தல்.]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வில்லையும் அம்பையும் வீசியெறிந்தான் வேடன் 152

கலைமானும் பிணைமானும் காதலுற்று விளையாடிய களைப்பு
தீர, அருவிக் கரையில் நீரருந்தி இளைப்பாற வந்தன
நெடுநேரம் ஒன்றும் கிடைக்கவில்லை என்று காத்திருந்த
வேடனின் கண்கள் ஒளி பெற்றன
ஒரு கண்ணை மூடிக் கொண்டு
மறு கண்ணால் நாண் தொட்டு
நின்ற அம்பின் முனை வழியே
கலைமானின் நெஞ்சைக் குறி பார்த்தான்.
கலைமானின் இதயத்தில் குடியிருக்கும் பிணை மானுக்கு
இது தெரியாமலா இருக்கும்!
தன் கணவன் உயிருக்கு ஊறு நேர இருப்பதை உணர்ந்து
கணவனுக்கு முன்பு தன்னுயிர் போவதை விரும்பி
கலைமானின் முன்பாகப் பிணைமான் வந்து மறைத்து
நின்றது
வேடன் இப்பொழுது பிணைமானின் இதயத்தை நோக்கி
அம்பின் முனையைத் திரும்பிக் குறிபார்த்தான்
மறு கணம் கலைமான் சுற்றி வந்து
பிணைமானுக்கு முன்னால் நின்றது
இப்படியே இரண்டும்
மாறி மாறி ஒன்றையொன்று காத்தவாறு
அம்புக்கு இலக்காக நிற்பதைக் கண்ட
வேடனின் மனம் உருகியது.
தன் வில்லையும் அம்பையும் வீசி எறிந்து விட்டான்
கண்ணீர் அவன் கன்னத்தை நனைத்தது; (கா. ச. 7 : 1)

திணை - முல்லை

துறை - அன்பினது அகலம்

[அவற்றின் நடுக்கம் தீர்ந்த பிறகு அவன் முறுவலித்தான். இந் நிகழ்ச்சியைத் தன் மனைவியிடம் விரித்துக்கூறி மகிழ்ந்தான்]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாலைத்திணை

பிரிவெனும் எரிமலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"போக்கெல்லாம் பாலை'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாலை

★ உன்னைப் பிரிய முடியவில்லை 153

ஒரு கரும்புள்ளிமான்
வலமாகச் சென்றால்
பயணம் தடைபட்டு விடும்
உன் இரண்டு கருவிழிகளும்
இரண்டு புள்ளி மான்களைப் போல்
நீர் ததும்பக் கலங்கி என்னைத் தடுக்கும் போது
நான் எங்ஙனம் உன்னைப் பிரிவேன்
உன் விழிகள்
என் பயணத்தைத் தடுத்து விட்டன

காலசாரசன் (கா. ச. 1 : 25)

திணை - பாலை

துறை - செலவழுங்குதல்

செலவழுங்குதலாவது மேற்கொள்ளவிருந்த பயணத்தை நிறுத்தி விடுதல்.

★ புகழும் செல்வமும் தானாக வருமா? 154

தோழி! வேற்றூர் சென்ற கணவருக்கு
என்ன துன்பம் நேருமோ என்று கலங்குகிறாய்
அடர்ந்த காட்டு வழியாக அவர்
சென்றிருப்பது உண்மைதான்
என்றாலும்
ஆண்கள் செயற்கரிய கடமைகளைச்
செய்தால்தான் புகழும் செல்வமும் கிட்டும்.
செயற்கரிய செயல்களைச் செய்யும் போது
புகழும் செல்வமும் வரும்
அல்லது சாவும் துன்பமும் வரும்.
மாந்தராய்ப் பிறந்த அனைவர்க்கும்
சாவு தானாகவும் வரும்
புகழும் செல்வமும் அப்படித் தானாக வருமா?

வல்லயன் (கா. ச. 1 : 42)

திணை - பாலை

துறை - தோழி தலைமகளை ஆற்றுவித்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அதே ஒளிக் கையால் என்னையும் தொடு 155

தண்ணிலவே
அமுதமூறும் வெண்ணிலவே
நீ வான மகளின் நெற்றிப் பொட்டாக விளங்குகிறாய்
மங்கல மகளிரின் வாழ்வுக்கு நீ உறுதுணையாக
இருக்க வேண்டாமா?
பிரிந்து சென்ற கணவரை நினைந்து
என் உள்ளம் ஏங்குகிறது
தூங்க முடியவில்லை
அவர் இப்பொழுது
எந்த ஊரில் எந்த இடத்தில் தனிமையில்
இருந்து தவிக்கிறார் என்று உன் கண்ணுக்கு
நன்றாகத் தெரியுமல்லவா?
என்னை உன் ஒளிக்கற்றையால் தொடுகிறாய்
இதைப் போன்றே உன் நிலாக்கதிர் கைகள்
அவரையும் தொட்டுக் கொண்டிருக்கும்
எனக்கு ஒரே ஒரு உதவி செய்
வேற்றூரிலிருக்கும் என் கணவரை
எந்த நிலாக்கதிர்க் கையால் தொடுகிறாயோ
அதே கையால் என்னையும் தொடமாட்டாயா?

சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச. 1 : 16)

திணை - பாலை

துறை - பிரிவாற்றாமை

★ இரவுக்கு ஒரு வேண்டுகோள் 156

இரவுப் பெண்ணே!
நீ இரக்கமுள்ளவள் என்று நினைக்கிறேன்
என் வேண்டுகோளைத் தட்டாமல் ஏற்றுக் கொள்.
இன்று இரவுப் பொழுது விடியவே வேண்டாம்
நெடுநேரம் நீள்வதாகுக
ஏனெனின், பொழுது விடிந்தால் என் கணவர்
பொருள்வயிற் பிரிந்து செல்ல இருக்கிறார்
அவர் பிரிந்து சென்றபின்
இனி வரும் இரவுகள்
மிக மிகச் சிறிதாக இருக்கட்டும். (கா. ச. 1 : 46)

திணை - பாலை

துறை - பிரிவச்சம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ **கடைசிப் பூக்கள்** 157

அப்பெண்
கண்ணீர் துளிர்க்க வந்து
மதுக மரத்தில் பூத்துதிர்ந்த கடைசிப் பூக்களை
சுடுகாட்டுச் சாம்பலில்
நண்பனின் எலும்புகளைப் பொறுக்குவது போன்று
ஆற்ருத் துயரத்தோடு பொறுக்குகிருள்
அவர் திரும்பி வருவதாகச் சொன்ன காலம்
கடந்து நெடு நாட்களாகி விட்டன
வருபவராக இருந்தால்
மதுகமரம் பூக்கத் தொடங்கு முன்
வந்திருக்க வேண்டுமே,

(கா. ச. 2:4)

திணை - பாலை

துறை - இகந்தமை இயம்பல்

★ **வெளியூர்ப் பயணம்** 158

அன்று வீட்டுக்கு வந்த விருந்தினர்
வெளியூர்ப் பயணங்களைப் பற்றியும் வழியில் நேரும்
துன்பங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர்
இதைக் கேட்ட அவ்வீட்டின் மருமகள்
நஞ்சுண்டாற் போல்
மரத்து மயங்கிப் போய் விட்டாள். (கா. ச. 2:11)

திணை - பாலை

துறை - பிரிவேன் என்ற தலைவன் சிறைப்புறத் தானுகத் தோழி உலகியல்புரைத்தது.

★ **முகத்தில் பொலிவில்லை** 159

பிரிவு ஒரு நெருப்பு
அது தானுகப் பற்றி எரிந்து கொண்டு போகும்
கதிரவனும் தானுக எரிந்து கொண்டு போகிருன்
அவன் தேருக்கு நிழலில்லை
உன்னைப் பிரிந்த தலைவியின் முகத்தில்
சாயலும் பொலிவும் அறவே இல்லை.

அனங்கன் (கா. ச: 30)

திணை - பாலை

துறை - கவின் அழிவு உரைத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கார்காலம் தொடங்கவில்லை 160

தோழி!
மேற்றிசை வானத்தைப் பார்த்து
ஏன் பெருமூச்சு விடுகிறாய்
விந்தியமலை முகட்டின் பசுங்காடு கார் மேகம்
போல் தோற்றமளிக்கிறது
அதைப் பார்த்து கார்காலம் தொடங்கிவிட்டது
கணவர் இன்னும் வீடு வந்து சேரவில்லையே
என்று வருந்துகிறாய் போலும்
இன்னும் கார் காலம் தொடங்கவில்லை
கலங்காதிரு.

திணை - பாலை

துறை - இதுவே வம்பு எனல்-பருவங்காட்டி வன்புறை மொழிதலுமாம்.

இதுவே-தோழி. அவர் வருவதாக உரைத்தகார் காலம் வரவில்லை. இது கார் காலத்தைப் போன்ற பொய்த் தோற்றம் எனக் கூறித் தலைமகளை ஆற்றுவித்தது.

★ வீடு வீடாகப் போய் என்ன கேட்கிறாள்! 161

இதோ!
இந்தப் பெண் புதிதாகத் திருமணமானவள்
பார்த்தாலே பளிச்சென்று தெரிகிறது
இவள் எதற்காக ஒவ்வொரு வீடாகப் போகிறாள்
அங்கு ஒவ்வொரு இல்லத்தரசியையும்
பார்த்து என்ன கேட்கிறாள்?
வேறொன்றுமில்லை
நாளை அவள் கணவன் வெளியூர் செல்கிறானாம்
ஓரிரு நாட்களில் திரும்பி வந்து விடுவான்
எனினும், பிரிவைப் பொறுத்துக் கொள்வது
எப்படி என்று தெரிந்து கொள்வதற்காக
இவள் ஒவ்வொரு வீடாகச் சென்று
அம்மகளிரை யடுத்து
'உன் கணவர் உன்னைப் பிரிந்ததுண்டா?
நீ எப்படி ஆற்றியிருந்தாய்' என்று கேட்டு வருகிறாள்.

சீயன் (கா. ச : 47)

திணை - பாலை

துறை – பிரிவச்சம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ **திகைக்கிருள்** 162

இந்த அறியாத பெண்
கணவன் பிரிந்த நாட்களை
கை விரல்களால் எண்ணினுள்
பிறகு கால் விரல்களால் எண்ணினுள்
மொத்தம் இருபது நாட்கள் கடந்தன
இருபத்தொன்ருவது நாளை எதனுல்
எண்ணுவது என்று திகைக்கிருள். பூாலிதன் (கா. ச 4 : 7)

திணை - பாலை

துறை - பிரிவாற்ருமை

★ **மழை மேகங்கள்** 163

கணவனைப் பிரிந்த துயரம் தாளாது
கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்
இடியோசை கேட்டு அதிர்ந்து மேலே நோக்கினுள்
காற்றும் மழையும் அவள் வீட்டின் முகட்டைப்
பிய்த்துக் கொண்டு போய் விட்டது
முகட்டின் வழியாக வானத்தில் மின்னலும்
மழை மேகங்களும் அவளை அச்சுறுத்தின
அவள் கண்ணீரைக் கண்டு
வானமும் கண்ணீர் சிந்துகிறதா? (கா. ச. 4 : 15)

திணை - பாலை

துறை - பிரிவிடைக் கலங்கல்

★ **கையை விடுவித்துக் கொண்டான்** 164

என்னை விட்டுவிட்டு வெளியூர் போகிருராம் அவர்
ஆதலால்
அரிதின் முயன்று என்னை அணைத்த
கையை விடுவித்துக் கொண்டார்
நான் அரிதின் முயன்று
அவர் மார்பிலிருந்து என்னை
விடுவித்துக் கொண்டேன். அனுலச்சீஏ (கா. ச. 3 : 76)

திணை - பாலை

துறை - பிரிவாற்ருமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ *கிளை தாழ்ந்த பழமரம்* 165

தோழி!
யாரோடும் பழகாமல் யாரோடும் பேசாமல்
கடமையில் கருத்தூன்றி விலகி வாழ்கிறார்
இந்நிலையில் வேற்றூர் சென்றிருக்கிறார் என்று
உன் கணவரைக் குறித்து வருந்துகிறாய்.
மரத்தின் உச்சிக் கிளையைப் போல எட்டாமல்
எங்கோ போகிறார் என்பது
உண்மைதான். எனினும்,
பழக்குலைகள் எனும்
பயன் தாங்கிய நிலையில்
அக்கிளை தரை தொடத் தாழ்வது உண்டு
அதுதான் சான்றோரியல்பு
பழக்குலைகள் என்னும் பயனைத்
தம் பால் உண்டாக்கிக்
கொள்ளும் காலத்தில்
உயர்ந்தவரோடு சேர்ந்து உயர்ந்து
நமக்கு எட்டாத தொலைவில்
காணப்படுகிறார்கள்.

குவலய (கா. ச. 3 : 82)

திணை - பாலை

துறை - தோழி வன்புறை மொழிந்து ஆற்றுவித்தல். ஓதற் பிரிவின் போது வருந்தும் தலைவிக்குத் தோழி கூறிய ஆறுதல் மொழி. கல்வி கற்கும் காலத்தில் தனித்திருக்குந் தன்மையும் கற்று வல்லரான பின்பு எளிமையாய்ப் பழகும் இயல்பும் உவமையால் பெறப்படும்.

★ *ஊழ்வினை* 166

போகூழின் போது
நல்ல செயல்களெல்லாம் கூட
தீய பயன் விளைக்கும்
எடுத்த செயல்கள் நடைபெறாமல் போகும்
மணலால் சுவரெழுப்பி
வீடுகட்ட முயன்றது போல
செய்யும் முயற்சிகள் வீணாகும். (கா, ச. 3 : 45)

திணை - பாலை

துறை - செலவழுங்கிய தலைமகனுக்குப் பாங்கன் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வரவேற்பு மலர்மாலை 167

அவள்
உன்பொருட்டு வாயிலில் அமர்ந்து
உன் வரவை எதிர்பார்த்து எதிர்பார்த்து
ஒரே நாளில் வாடிவிட்ட வரவேற்பு மாலை போல்
பொலிவு குன்றிக் காணப்படுகிருள்.

திவ்வியட்டன் (கா. ச. 3 : 62)

திணை - பாலை

துறை - பிரிவிடை மெலிதல்

★ உயிரோடிருக்கிருள் 168

பிரிவால் வருந்தும் தலைவி
மஞ்சத்தில் தூக்கம் வராமல் புரளும் போது
ஏற்படும் வளையோசை கேட்டுத்
தலைவி இன்னும் உயிர் வைத்துக்
கொண்டிருக்கிருள் என்றறிவதன் மூலம்
தோழிமாருக்கு உயிர் வருகிறது
நம்பிக்கையும் உண்டாகிறது.

அலங்காரன் (கா. ச. 3 : 83)

திணை - பாலை

துறை - தலைமகள் பிரிவான் எய்திய பருவரலைத் தலைமகனுக்கு ஆற்றிடைச் செல்வோர் கூறியது.

★ மான்களின் இணைந்த வாழ்வு 169

மான்பிணுவும் கலைமானும்
காட்டில் கிடைக்கும் புல்லும் நீரும்
உண்டு திரிந்தாலும்
இறப்புக் காலம் வரை
ஒன்றையொன்று பிரியாமல்
அன்பாகக் கூடி வாழ்கின்றன.

அவணுயரன் (கா. ச. 3 : 87)

திணை - பாலை

துறை - செலவழுங்குவிக்கும் தோழியின் கூற்று. தலைமகளைத் தனித்து இருக்க விட்டுப் பயணம் மேற்கொள்வது தகாது என்பதைத் தோழி பிறிது மொழிதலாகக் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நீயில்லா நீண்ட இரவு 170

வெண்ணிலா முகத்தாளே!
நீள் கெண்டை விழியாளே!
நீயில்லாத் தனி இரவின் நான்கு யாமங்களும்
நூறு யாமங்களாகத் தோன்றின. (க. ச. 3 : 52)

திணை - பாலை

துறை - கண்படை பெருது கங்குல் நோதல்

★ கையில் உள்ளதுதான் செல்வம் 171

கையில் இருப்பதுதான் செல்வம்
துன்பத்தில் துணைபுரிய வருபவனே
உண்மையான நண்பன்
பண்போடு கூடியதுதான்
இயற்கையான அழகு
இறையுணர்வோடும் அறத்தோடும்
கூடியதுதான்
நெறிப்பட்ட அறிவு.

சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச. 3 : 51)

திணை - பாலை

துறை - உலகியல் உரைத்தல் - செலவழுங்குவிக்கும் தோழியின் கூற்று.

'துன்பத்தில் துணை புரிபவனே நண்பன்' என்னும் கூற்றின் வாயிலாகத் தலைமகளுக்குப் பிரிவுத் துன்பம் ஏற்படாமல் காப்பது நின் கடமை என்று வற்புறுத்தியிருப்பது காண்க.

★ பக்கத்து வீட்டார்க்கு ஒரு வேண்டுகோள் 172

செறிந்த இருள்
தனித்திருக்கிறேன்
என் கணவர் வெளியூர் போயிருக்கிருர்
கள்வர் அச்சம் மிகுதியாக இருக்கிறது
பக்கத்து வீட்டுக்காரர்களே!
அருள் கூர்ந்து விழித்திருங்கள்
தூங்கி விடாதீர்கள். அகவன் (கா. ச. 4 : 35)

திணை - பாலை

துறை - பிரிவிடை அச்சம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ காதல் வறண்டுவிடும் 173

இளைஞனே!
நீ உன் காதலியைக்
காணமலிருந்து விட்டால்
நெருங்கிய உயிர்க் காதலும்
மறக்கப்பட்டு விடும்
கையிலேந்திய நீர்
விரல் சந்துகளின் வழியே
ஒழுகிப் போவது போல்
காதல் வறண்டு விடும்
கால இடைவெளி காதலை
விழுங்கி விடுகிறது. பகுரன் (கா. ச. 3 : 36)

திணை - பாலை
துறை - வினை முற்றி மீளுந் தலை மகனை விரைந்து செல்க என ஆற்றிடைக் கண்டோர் கூறியது.

★ புலம்பு கொள் மாலைப்பொழுது 174

மாலைப் பொழுதில் மணி விளக்கேற்றும் குலமகள்
பிரிந்த கணவனை நினையாதிருக்க முடியாதவளாகிக்
கண் கலங்குகிருள்
கண்ணீர்த் துளி மங்கல விளக்கின் மீது
படக் கூடாது என்பதால்
கடிவாளம் இழுப்பதால் பின்னுக்கிழுக்கப்பட்ட
குதிரையின் முகம் போல்
தலை வளைத்துக் குனிந்தவாறு விளக்கேற்றுகிருள்.
(கா. ச. 3 : 22)

திணை - பாலை
துறை - பிரிவாற்ருமை

★ நெஞ்சை ஈர்த்த பாடல் 175

இன்று காலையில் ஒருவன்
தன் காதலியைப் பிரிந்த துயரத்தால்
காமணம்பால் துளைக்கப்பட்ட
இதயத்தின் வெடிப்போசை போன்று
தன் காதலியை (கா. ச. 4 : 81)
நினைத்துப் பாடிக்கொண்டிருந்தான்
அப்பாடல் என் நெஞ்சை ஈர்த்தது

திணை - பாலை
துறை - ஆற்றிடைக் கண்ட காட்சியைத் தலைமகன் தனக்குப் பாங்காயினரிடத்துக் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ முதுகை நனைத்த கண்ணீர் 176

உன் பிரிவால்
அவள் மெலிந்து கூனிக்
குறுகிப் போய் விட்டாள்
அவள் சிந்திய கண்ணீர்
அவள் முதுகையும் கூட நனைத்து விட்டது
நீ பிரிந்து சென்றதால்
எதிர் பாராதவை நடக்கின்றன. (கா. ச. 3 : 23)

திணை - பாலை

துறை - பிரிந்த தலைமகனுக்கு ஆற்றிடைச் செல்வோர் கூறியது.

அவள் உண்ணுமலும் உறங்காமலும் மெலிந்த நிலையில் விலா எலும்புகளின் இடையிலுள்ள பள்ளங்களின் வழியாகக் கண்ணீர் முதுகை நனைத்தது என்பதால் அவள் எலும்புக் கூடாகி விட்டாள், விரைவில் இறந்து விடுவாள் என்னும் குறிப்பை உணர்த்துகிறது.

★ பாம்பின் படம் மட்டும் தனியாத வந்து கொத்துகிறது 177

குருடன் கையிலேந்தியிருக்கும் பானையின்
உள்ளிருப்பதைப் பிறர் கவர்வது போல்
என் கணவரை ஏமாற்றிக் கொள்ளையடிக்கிருர்கள்,
இந்தப் பொருமைக்காரர்கள்.
நேரடியாக என் கணவரைப்
பகைத்து நின்று
கவர்ந்து கொள்ள முயன்றிருந்தால்
இவர்களின் நிலை என்னவாகியிருக்கும்!
கண்ணுக்குத் தெரியாமல்
பாம்பின் படம் மட்டும் திடீரென
வந்து தீண்டிக் கொல்வது போல்
என் கணவரை வஞ்சிகிருர்கள். (கா. ச. 3 : 40)

திணை - பாலை

துறை - ஆற்றிடை வருத்தம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நெருப்பால்தான் நெருங்க முடியும் 178

தோழி! அவர் அரசன் ஏவலால் ஒற்று
அறிந்துவரச் சென்றிருக்கிருர்
பிரிவுத் துயரோடு
அவருக்கு என்ன நேருமோ என்ற அச்சமும்
உன்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.
அவர் உறுதியானவர் நல்லவர் நம்பத்தக்கவர்
நல்லவர்களின் உள்ளத்திலுள்ள
மந்தணங்களை (இரகசியங்களை)
அவர்களின் சாவுக்குப் பின்
நெருப்பால்தான் நெருங்க முடியும்
எந்தப் பூசற் காலத்திலும்
எத்தகைய சூழலிலும்
அவர்கள் அதை வெளியிட மாட்டார்கள்.

சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச. 4 : 21)

திணை - பாலை

துறை - ஆற்றிடை அச்சம் கருதி கலங்கிய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

★ உன் பிரிவு 179

அன்பே!
உன் பிரிவு, மருத்துவனுல் தீர்க்க முடியாத
நோய் போன்றது
வளமாக வாழும் சொந்தக்காரர்களின் நடுவே
செல்வமிழந்து வறுமையோடு
வாழ்வது போன்றது
பகைவனின் பெருஞ்செல்வத்தைப்
பார்த்துக் கொண்டிருப்பது போன்றது!

வாமஏவன் (கா. ச. 4 : 63)

திணை - பாலை

துறை - செலவிடையழுங்கல்.

செலவிடை அழுங்கலாவது தலைமகளை ஆற்றுவித்துப் பிரியும் பொருட்டு, அவளுக்கு ஆதரவான மொழிகளையும் தன் அன்பின் பெருக்கத்தையும் தெளியக் கூறிச் சில காலம் பயணத்தைத் தாழ்த்துதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வழியை மறைக்கிறது 180

முற்றத்தில் செழித்து வளர்ந்துள்ள
மாதவிக் கொடி வாயிலை மறைக்கிறது
பிரிவால் வருந்தும் இல்லத்தரசி
வழியில் செல்பவர்களைப்
பார்க்க முடியாமல் தடுக்கிறது
குலமகள் வாயிலில் நிற்பதும் வாயிலைக் கடந்து
வந்து நிற்பதும் முறையன்று
அவர் வருவதை எப்படித் தெரிந்து
கொள்வது என்று வருந்துகிறாள்.

வச்சன் (கா. ச. 4 : 22)

திணை - பாலை

துறை - பிரிவாற்றாமை

★ மருமகளைக் காக்கும் மாமியார் 181

மாமியார்
மருமகளின் உயிர் காக்கும்
மருந்தாக அருகிலேயே இருக்கிறாள்
தனக்குள்ள எல்லா வேலைகளையும்
விட்டுவிட்டு வந்து
'பிரிந்து சென்றவன் விரைவில்
வந்து விடுவான், அழாதே, என்று
ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறாள்
அது மட்டுமன்று
கார் கால மேகம் அவள் கண்ணில்
படாதபடி காத்து வருகிறாள்.

விகலன் (கா, ச. 4 : 36)

திணை - பாலை

துறை - பிரிவால் வருந்திய தலைமகளை ஆற்றுவித்தல்

★ மீண்டும் மீண்டும் வினவுகிறாள் 182

நானே என் கையால்
தூதுச் செய்தி ஓலையை
அவருக்கு அனுப்பி விட்டேன் என்று கூறிய பின்னும்
மீண்டும் மீண்டும் அதைப்பற்றியே வினவுகிறாய்
நான் சொல்வது உன் காதில் ஏறவில்லையா ?

சுரயிவம்சன் (கா.ச. 2 : 98)

திணை - பாலை

துறை - அவர்வயின் தூது. தோழி தலைவிக்குக் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ **பருத்தி சிரித்தது** 183

பிரிவால் வருந்தி
இறந்து விட்டிருப்பாளோ
என்று உழவன் வருந்தினன்
அப்போது பருத்திச் செடியில்
சுமை தாங்க முடியாமல் அடிப்புறம்
நோக்கி வளைந்த பருத்திக்காய் வெடித்தது
உள்ளேயிருந்த பருத்தி
அவனை நோக்கிச் சிரித்தது.

சென்னந்தசாரன் (கா, ச. 6 : 60)

திணை - பாலை

துறை - பிரிவாற்ருமை

சுமை தாங்காமல் கீழ் நோக்கித் தாழ்ந்த பருத்திக் காய் காலம் வந்ததும் வெடித்துச் சிரித்தாற்போல், பிரிவுத் துயரால் வருந்தும் தலைமகளும் தலை மகனின் வரவு கண்டு சிரிப்பாள் என்பது குறிப்பு.

★ **மாப்பூத்தது; தென்றலும் வீசுகிறது** 184

மாமி!
மாப்பூத்திருக்கிறது
தென்றலும் வீசத் தொடங்கி விட்டது
அவர் மேற்கொண்ட வேலை
இன்னும் முடிவடைந்திருக்காதா?

கொன்தக்குரசன் (கா. ச. 1 : 97)

திணை - பாலை

துறை - பிரிவாற்ருமை தலைவியின் கூற்று

குறிப்பு : கொன்தக்குரச என்னும் புலவரின் பெயர் குன்றக் குறவன் என்பதன் திரிபாகவுமிருக்கலாம்.

★ **நீ தந்த மலர் மாலை** 185

நீ கொடுத்த மலர் மாலையை
அது வாடிய பின்னும் கூட,
பாழடைந்த ஊரிலுள்ள கோயில் தெய்வத்தின் மேல்
கிடக்கும் உலர்ந்த மாலை போல்
இன்னும் வைத்துக் கொண்டிருக்கிருள்

(கா. ச-2:94)

திணை - பாலை

துறை - கையுறை போற்றலும் கையறவு உரைத்தலும்

7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ மெலிந்தது ஏன்? 186

காதலில் ஏமாற்றமடைந்த என்னைப் பார்த்து
நீ ஏன் மெலிந்து விட்டாய் என்று தோழி கேட்கிறுள்
'உறுதியான உள்ளமில்லாத ஒருவனைக் காதலித்திருந்தால்
இது உனக்குத் தெரிந்திருக்கும்' என்று நான்
விடையிறுத்தேன் (கா. ச. 2:57)

திணை - பாலை

துறை - குறித்த காலங்கடந்த பின்னும் வராத தலைமகன் தன்னை மறந்து நீத்து விட்டான் என்று ஏங்கிய தலைமகள், அவனை இயற்பழித்தது.

★ பெருங்குலப் பெண்டு 187

புயற்காற்று கூரையைப் பிய்த்து விட்டது
கொட்டும் மழையில் தரையில் வெள்ளம் நிறைகிறது
கணவன் வரவை எதிர் நோக்கியிருக்கும் அக்குலமகள்
தன் கணவன் உறுதியாக திரும்பி வருவதாகச்
சொன்ன நாளைத்
தரையில் குறித்து வைத்திருந்தாள்
வெள்ளம் அழித்து விடாமல் அக்கோடுகளைக் காப்பதற்காக
இருகைகளாலும் நீரைத் தடுத்துக் கொண்டிருக்கிறுள்.
சயசேனன் (கா. ச.2:70)

திணை - பாலை

துறை - வரவுள்ளி அழிதல்

★ இமைக்குள்ளே கண்ணீரைத் தேக்கினுள் 188

நீ பிரிந்த துயரத்தை
வீட்டில் பெரியோர்க்குக் காட்டாமல்
கண்ணீரை இமைக்குள்ளேயே
தேக்கி வைத்துக் கொண்டாள்.
பிறகு யாரும் காணுதபோது
வெளிப்புறத்தில் சென்று கண்ணை மூடிய போது
அக்கண்ணீர்த் துளிகள் கீழே உதிர்ந்தன.
வாயவன் (கா. ச. 4 : 67)

திணை - பாலை

துறை - தலைமகள் ஆற்றியிருந்த தகைமையைத் தோழி தலைமகனுக்குக் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இதயப் பெரு வெளி 189

அவர் இன்று தான் வெளியூர் சென்ருர்
இதற்குள் என் இதயம்
நெடுஞ்சாலேயின் நுழை வாயிலேப் போலவும்,
பெருவாயில் முற்றத்தைப் போலவும்
இயக்கமற்று வெறிச் சோடிக் கிடக்கிறது.

அமியன் (கா. ச.2:90)

திணே - பாலே

துறை - பிரிவாற்ருமை

★ வெப்பமும் குளிர்ச்சியும் 190

உன் பிரிவால்
அவள் கீழுதடு நெட்டுயிர்ப்புப்பட்டு வெப்புறுகிறது
கண்ணீர் பட்டு நனேகிறது
இது சியாம சாபல சூளுரையைப் போல் காணப்படுகிறது.

(கா. ச.2:85)

திணே - பாலே

துறை - நினேந்தவட் புலம்பல்

குறிப்பு : சியாம சாபல சபதம் என்பது முதலில் நெருப் பிலும் பின் நீரிலும் மூழ்கி மேற் கொள்ளும் சூளுரை

★ தாளாத பிரிவு 191

பிரிந்து செல்வதற்காகக்
கணவன் ஒரு அடியெடுத்து வைத்தான்
பிரிவு தாளாமல் மீண்டும்
மனேவியை அணேய வந்தான்
இதற்குள்
கணவன் வேற்றூர் போய் விட்டது போலவும்
நெடுங்காலத்திற்குப் பிறகு அவ்வூருக்குச் சென்று
அவனே மீண்டும் கண்டது போலவும்
அவளுக்குத் தோன்றியது.

மயரன்தசன் (கா. ச. 1: 98)

திணே - பாலே

துறை - அகற்சியது அருமை

அகற்சியது அருமையாவது பிரிவைக் கணப் பொழுதேனும் தாங்கமாட்டாத இயல்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வெறிச் சோடிய இல்லம் 19

அந்த நல்லவன் வேற்றூர் சென்றதால்
அவன் வாழ்ந்த இல்லமும் சிற்றூரும்
அடியற்று வீழ்ந்த ஆலமரமிருந்த இடம் போல்
வெறிச் சோடிக் கிடக்கின்றன (கா. ச. 1 : 9

திணை - பாலை

துறை - ஆற்றிடைக் கண்டோர் தலைமகன் முன்னிலை யானுகவும், அஃதறியாது, தலைமகள் கவினழிய இல்லம் பொலிவிழந்ததைச் சொல்லி வருந்தியது.

★ நினைவிலிருந்து நழுவுபவன் 19

தோழி! நான் அவரையே நினைந்த வண்ணமிருப்பதைச்
சுட்டிக் காட்டுகிருய்
அவர்என்னை நினைந்தவண்ணமிருக்கிருரா என்றெல்லாம்
கேட்க வேண்டாம்
நினைவிலிருந்து நழுவுபவரின் பேரைத்தான் நினைவு
படுத்திக் கொள்ள வேண்டும்
அவர் அப்படிப்பட்டவரல்லர்
காதல் நினைவின் வடிவம் என்பதை உணர்ந்தால்
அதன் ஆதரவற்ற நிலைமை புரிகிறது
அந்த நினைவின் இழை ஒரு நொடியும் அறுபடலாகாது
வப்பராயன் (கா. ச.1 : 9

திணை - பாலை

துறை - தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் அவனை இயற்பட மொழிந்தது.

★ குருதிக் கறை 1

தாய் வீட்டிலிருந்து திரும்பிவந்த வேட்டுவச்சி
தன் இல்லம் சேரும் வழியில்
கரஞ்ச மரத்தில் யானை தன் தலையைத் தேய்த்ததால்
ஏற்பட்ட குருதிக் கறையைப் பார்த்தாள்
தன் கணவன்
யானையால் கொல்லப்பட்டான் என்பதை உய்த்துணர்ந்து
நிலைகுலைந்து போய் விட்டாள்
கந்தராயன் (கா. ச. 2:21

திணை - பாலை

துறை - தாபதநிலை — தலைமகனை இழந்த தலைமகளின் மாற்ருத்துயரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ **மாமி உங்களுக்குத் தெரியுமா ?** 195

மாமி உலகில் எங்காவது வஞ்சிக்கப் படாத காதல்
இருந்திருக்கிறதா?
அப்படியிருந்திருந்தால்
அவர்கள் எப்போதாவது பிரிந்ததுண்டா
பிரிந்தபின் அவர்கள் உயிரோடிருந்திருக்கிறுர்களா?
இராமன் (கா. ச. 2:24)

திணை - பாலை

துறை - ஆற்றுமை கைம்மிகத் தலைமகள் கலங்கிக் கூறியது.

★ **காட்டியல்பும் கணவரியல்பும்** 196

ஆயமகள் தன் கணவனை நினைந்து பாடுகிறுள்
அவள் பாட்டில் பிரிவுத் துயரம் ததும்புகிறது
வழிப்போக்கரின் உள்ளம் கூட உருகுமாறு பாடிக்
கொண்டிருக்கிறுள்
அவள் பாட்டும் நிற்கவில்லை
அவள் கண்ணீரும் நிற்கவில்லை
அது
தேனுண்டு பறந்தோடும் தேனீக்கள் மலிந்த காடல்லவா?
(கா. ச.2:28)

திணை - பாலை

துறை - கண்டோர் தலைமகனை இயற்பழித்தது.

★ **சேமமில்லாச் சேமிப்பு** 197

பணம் போட்டு வைப்பவர்கள்
மீண்டும் எடுக்கக்கூடிய இடத்தில்தான்
இட்டு வைப்பார்கள்
நீ உன் நெஞ்சத்தை அவர் நெஞ்சத்தில்
அடகு வைத்து விட்டாய்
அவரிடமிருந்து அதைத் திரும்ப எடுக்க முடியாது
என்பதறியாமல் அப்படிச் செய்து விட்டாய்,
இனி, இப்படி ஆராயாமல் ஒரு பொருளை
ஓரிடத்தில் இட்டு விடாதே
பின் புலம்பாதே
அவராக உன்னைத் தேடி வந்தால்தான்
உன் துயரத்திற்கு முடிவு வரும். (கா. ச. 2: 54)

திணை - பாலை

துறை - தனிப்படர் மிகுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அழாதே அவர் போக மாட்டார் 198

தலைவி, அழாதே
அவர் போகமாட்டார்
நிறை குடங்களின் மீது கட்டப்பட்ட புதுமாவிலைகளும்
மலர்களும்
அவர் பயணத்தைத் தடுத்து விடும்
அவர் உன்னை எப்போதும் பிரிய மாட்டார்
(கா. ச.2:43)

திணை - பாலை

துறை - தோழி வன்புறை மொழிந்தது.

★ உள்ளமே இருக்கக் கூடாது 199

காதல் வேதனைகளைத் தாங்கிக் கொண்டு
உயிரை மட்டும் வைத்துக்கொண்டு ஊசலாடுகிற போது
நெஞ்சே!
நீயும் என்னைத் துன்புறுத்துகிறாய்
உள்ளம் என்ற ஒன்று உலகில் யாருக்கும் இருக்கக்
கூடாது
உடம்பில் அப்படி ஒரு பகுதி
இணைக்கப்படவே கூடாது
அவன்றயன் (கா. ச.2:49)

திணை - பாலை

துறை - நெஞ்சொடு கிளத்தல்

★ இடக் கண்ணால் மட்டும் காண்பேன் 200

எனக்கு வாட்கண் இடனாடுகிறது
பெண்களுக்கு இடக்கண் துடித்தால் நினைத்தது நடக்கும்
என்பர்
இன்று என் கணவர் வந்து விடுவார்
நல்ல செய்தியை அறிவித்த இடக் கண்ணே!
நீ வாழ்க
இனிமேல் என் வலது கண்ணை மூடிக் கொண்டு
உன் வழியாக மட்டும் என் கணவரைப் பார்க்கப்
போகிறேன் சத்தியத்தினன் (கா. ச. 2:37)

திணை - பாலை

துறை - வரவுணர்ந்து மகிழ்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இறுதி நம்பிக்கைக்கு ஓர் இறுதி 201

அவள் தன்னால் எவ்வளவு அழ முடியுமோ அவ்வளவும்
அழுது தீர்த்து விட்டாள்
உடல் எவ்வளவு மெலிய முடியுமோ அவ்வளவு மெலிந்து
விட்டது
தன் மூச்சுக் குழலில்
இறுதித் துளி மூச்சு இருக்கும் வரை
பெருமூச்சு விட்டு முடித்து விட்டாள்
சாவின் வாயிற்படியிலிருக்கின்ற இவள் இரங்கத்தக்கவள்
வேரசத்தி (கா. ச.2:41)

திணை – பாலை

துறை - அவள் மெலிவுரைத்தல்

★ பிரிவென்னும் வாளால் அறுக்கும் தச்சன் 202

அவள் மார்பில் விழும்
மை கலந்த கண்ணீர்த் துளிக் கீற்றுகள்
மரத்தை வாளால் அறுக்கத்
தச்சன் நூலாலிட்ட கோடு போல் காணப்படுகிறது.
இனி, பிரிவு என்னும் வாள்
அந்த நூல் கோட்டு வழியாக
அவள் இதயத்தை அறுத்தல் கூடும். (கா. ச. 2 : 53)

திணை - பாலை

துறை - பிரிவாற்றாமை

குறிப்பு : அன்பால் ஈர்த்த தலைவன் இப்போது பிரிவு என்னும் வாளால் அறுக்கும் தச்சனாகி விட்டான் என்பது உட்பொருள்.

★ கற்பனையுலகம் 203

சென்றவர் வரவில்லை
படுக்கையில் உட்கார்ந்த வண்ணம் கற்பனையில்
மிதந்த அவள்
படுக்கையில் வீழ்ந்து கண்ணை மூடிக் கொண்டு
காதலன் எதிரில் இருப்பதாக நினைத்து
இருகைகளாலும் தன்னைத் தானே அணைத்துக் கொண்டாள்
வளைகள் நெகிழ்ந்தன (கா. ச-2:33)

திணை - பாலை

துறை - கனவில் கண்ட மாயஞ்செப்பல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ காக்கை அஞ்சுகிறது 204

பிரிந்த தலைவனின் மனைவி
அளித்த சோற்றுருண்டையைக்
காக்கை விரும்ப வில்லை
அவள் பிரிவுத் துயரத்தால் மெலிந்து விட்டாள்
அங்கையில் இருந்த சோற்றுருண்டையின் மீது
தானாக நெகிழ்ந்த வளையல்
சூழ்ந்திருப்பதைக் கண்ட காக்கை
தன்னைப் பிடிப்பதற்காக இடப்பட்ட கண்ணி
வலையாக இருக்குமோ
என்று அந்த வளையலைக் கண்டு அஞ்சுகிறது.
(கா. ச. 3 : 5)

திணை - பாலை
துறை - பிரிவிடை வேறுபட்ட தலைமகளின் கவினழிந்த நிலையைக் கண்டோர் கூறியது.

★ தோழிகள் அழித்த புள்ளிகள் 205

கணவன் பிரிந்து சென்று எத்தனை
நாட்களாயின என்பதை அறிய
அவன் விரலால் சுவரில் நாள்தோறும்
ஒவ்வொரு புள்ளியிட்டு வந்தாள்
அதில் சில புள்ளிகளைத்
தோழிகள் யாருக்கும் தெரியாமல்
பூசி அழித்து விட்டார்கள்
ஏனெனில் அவர் வருவதாகச் சொன்ன
இறுதி நாளும் வந்து
அவர் வராவிட்டால்
அவளுடைய வருத்தத்தைக் கண்டு
தோழிகளால் பொறுத்துக் கொள்ள முடியாதல்லவா?
புண்ண போசன் (கா. ச. 3 : 6)

திணை - பாலை
துறை - அவர் வயின் விதும்பல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ பலமுறை எழுதிவிட்டாள் 206

நான் விரைவில் வந்து விடுவேன்
வேண்டுமானல்
நான் புறப்பட்ட நாளிலிருந்து நீ நாட்களைச்
சுவரில் குறித்துக் கொள் என்று
அவர் முன்பே அவளுக்குச் சொல்லியிருந்தார்
அவர் சென்ற முதல் நாளே
'இன்று அவர் புறப்பட்டு விட்டார்
இன்று அவர் புறப்பட்டு விட்டார்
இன்று அவர் புறப்பட்டு விட்டார்' என்று
சுவரெல்லாம் எழுதிச் சித்தரித்து விட்டாள்
பிரிவுத் துயரம் தாளாமல் பிச்சியாகி விட்டாளோ!

பவர சேனன் (கா. ச. 3 : 8)

திணை - பாலை

துறை - பிரிவாற்ருமை

★ கூண்டில் ஒரு பறவை 207

தலைவ, நீ புறப்பட்டுப் (வலசை) போன பிறகு
தலைவி கூண்டுப் பறவையாகி விட்டாள்
கூண்டில் அடைக்கப்பட்ட பறவை
வாயிற் பக்கமும் கம்பி இடை வழிகளிலும்
தொத்திக் கொண்டு
வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும்
கூண்டிலுள்ள எப்பொருள் மீதும்
அதன் நினைப்பு செல்லாது
அதைப் போலவே
இவள் வேலிப்புறத்தும் மதிற்புறத்தும்
பல கணிகளின் ஊடேயும்
ஆர்வம் பொங்கும் விழிகளால்
உன் வரவைத் துருவித்
துழாவிக் கொண்டிருக்கிருள். (கா. ச, 3 : 20)

திணை - பாலை

துறை - அவர்வயின் விதும்பல்

குறிப்பு : பறவைகள் ஆணும் பெண்ணுமாய் வெளியில் சென்று ஒன்ருகக் கூண்டுக்குத் திரும்புகின்றன. ஆண் பறவை பெண் பறவையைக் கூண்டிலடைத்து விட்டா செல்கிறது என்பது தலைவியின் எக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ முரசொலி கேட்டுக் கூத்தாடுகிருளே! 108

மறவனின் பெண்டே!
உன் கணவன் போர்க்களத்தில்
போர்முரசு முழக்குகிருன்
அவன் உன்னைப் பிரிந்து சென்றதற்காக வருந்தாமல்
போர்முரசின் அஞ்சத்தக்க ஓசையைக் கேட்டு
மகிழ்ச்சிக் கூத்தாடுகிருயே
நற்பேறு பெருதவள் நீ (கா. ச. 7 : 83)

திணை - பாலை

துறை - தலைமகள் ஆற்றியிருத்தல்

[தமிழ் மகளிரும் தம் கணவர் போரின் பொருட்டுப் பிரியும் போது மகிழ்ந்தே அனுப்பியிருக்கின்றனர். பொருள் தேடும் பொருட்டுப் பிரியும் போதுதான் வருந்தியிருக்கின்றனர்.]

★ வழிப்போக்கன் மகிழ்கிருன் 209

பிரிவால் வருந்திய வழிப் போக்கன்
மதுக மலர்களைக் கண்டான்
அவை தன் மனைவியின் கன்னம்
போன்றிருத்தலால்
அவற்றை மார்போடணைத்தான்
முகர்ந்தான் முத்தினுன்
அவனுடல் சிலிர்த்து நிற்க
உள்ளூர மகிழ்ந்தான்
அவன் செய்கையைக் கண்ணுற்ருயா? (கா. ச. 7 : 39)

திணை - பாலை

துறை - வேற்று நாட்டகல்வயின் விழுமம்

★ உள்ளம் சிவப்பு, உடல் வெளுப்பு 210

உன்பால் அன்பு நிறைந்தவளாயினும்
அவள் இரங்கத் தக்கவள்
உன் பிரிவால் பெரிதும் வருந்துகிருள்
காதலன்பால் அவள் உள்ளம்
பழுத்துச் சிவந்திருக்கிறது
ஆனல் அவள் உடல் மட்டும்
வெளுத்துப் போய் விட்டது. (கா. ச. 6 : 33)

திணை - பாலை

துறை - பசப்புறுபருவரல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ உண்ணுநீர் காணுத யானை 211

கோடையின் கொடுமையால்
எங்குமே உண்ணுநீர் காணுமல்
உயங்கிய காட்டு யானை
பாம்பு உரித்த தோலைக் கற்களிடையில் கண்டு
நீரூற்றென நினைத்துத்
தலையைத் தாழ்த்தி நனைத்துப்
பார்க்க முயல்கிறது. (கா. ச. 7 : 40)

திணை - பாலை

துறை - ஆற்றிடை வருத்தம், உடன் வருவேன் என்ற தலைமகளுக்குத் தலைமகன் நீரில்லா நீளிடையில் நேருந் துன்பங்களை எடுத்துக் கூறியது.

★ இது நெறியன்று; முறையன்று 212

தோழிமீர்! என்ன சொல்லுகிறீர்கள்
'உன் கணவர் உயிரோடிருந்தால் வந்து விடுவார்;
இறந்து விடாதே' என்பது
ஒரு ஆறுதல் மொழியாகுமா?
இது உண்மைக் காதலர்க்குச்
சொல்லத் தக்க நெறியன்று
நான் வாழ்வது முறையுமன்று. (கா. ச. 7 : 17)

திணை - பாலை

துறை - பிரிவாற்ருமை

★ மைந்தன் நனைந்தான் 213

பிரிவால் வருந்திய அவள்
ஒழுகும் கூரையின் கீழ், மழை வெள்ளத்தால்
மகன் நனையாதவாறு மடியிலிருத்திக் கொள்கிருள்
ஆனல், அவள் மைந்தன்
அவள் கண்ணீரால் முழுமையாக
நனைந்து விட்டான் என்பதை
அவள் கவனிக்கவே இல்லை
அவளுக்கு அது தெரியவே இல்லை. (கா. ச. 7 : 21)

திணை - பாலை

துறை - தனிப்படர் மிகுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ சேவலின் அறிவுரை 214

வைகறையில் கூவும் சேவலின் குரல்
பிரிந்தவர்களுக்கு அறிவுரை
கூறுவது போன்றிருக்கிறது
காதல் மனைவியைப் பிரிந்து
கடமை நுகம் சுமந்து வந்த வழிப்போக்கர்களே!
இரவு கழிந்து விட்டது பொழுது புலர்கிறது
நீங்கள் திரட்டிய பொருட்களை எடுத்துக் கொண்டு
உரிமை மனைவியரைச் சென்று சேருங்கள்
விரைவில் உங்கள் தேர்களை ஓட்டுங்கள்
புரவிகளில் அமர்ந்து பறந்து செல்லுங்கள்.

(கா. ச. 7 : 98)

திணை - பாலை

துறை - வினைமுற்றி மீளுந் தலைமகனுக்கு நொதுமலர் கூறியது.

★ ஆடவர் உணரட்டும் 215

பிரிவுத் துன்பத்திற்குள்ளான மகளிர்
ஓரிருவர் இவ்வூரில் இறக்கட்டும்
அப்படி இறந்தால் தான்
பிரிவுத் துன்பத்தின் கொடுமையை ஆடவர் உணர்வர்
காதலன்பின் உயர்வையும் மகளிர் இயல்பையும்
அவர்கள் முழுமையாகத் தெரிந்து கொள்வர்.

(கா. ச. 6:86)

திணை - பாலை

துறை - அகற்சியது அருமையை உணராத தலைமகனை இயற்பழித்து முன்னிலைப் புறமொழியாகத் தோழி கூறியது.

★ உயிர் ஊசலாடுகிறது 216

இளைஞனே! மிகவும் விரைந்துபோ!
உன் வருகையை எதிர்நோக்கி
உன் இல்லத்தரசியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது
வழியிடைச் சுணக்கம் (தாமதம்) வேண்டாம்
விரைந்து செல் (கா. ச. 6:87)

திணை - பாலை

துறை - பிரிவாற்றாமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நனைந்தே போனாள் 217

பிரிவுக் கண்ணீரால் நனைந்தே போனாள்
அவள் மட்டுமா நனைந்தாள்?
வீட்டின் ஒரு பகுதியே நனைந்தது
மறுபகுதி, கூரையிலிருந்து ஒழுகும்
மழை நீரால் நனைந்தது
வீடும் நனைந்து விட்டது
அவளும் நனைந்து விட்டாள். (கா. ச. 6 : 40)

திணை - பாலை

துறை - கண் விதுப்பழிதல்

★ மனம் ஒரு முந்திரிக்கொட்டை 218

மாமி! மாமரங்கள் துளிர்க்கத் தொடங்கவில்லை
தென்றலும் மலைய மலையிலிருந்து
வீசத் தொடங்கவில்லை
என் மனம் மட்டும்
இளவேனில் வந்து விட்டது
இளவேனில் வந்து விட்டது என்று
என்னைத் துன்புறுத்துகிறது, (கா. ச. 6 : 42)

திணை - பாலை

துறை - பருவங் கண்டழிதல்

★ நீ செல்லும் திசை 219

தலைவ! நீ செல்லும் திசையை ஏன் நோக்குகிறாய்?
உனக்கு முன்பே அவள் அத்திசையை
நோக்கி வருந்தினாள்;
கண் கலங்கினாள்; மயங்கினாள்; கீழே வீழ்ந்தாள்;
நாங்கள் மயக்கம் தெளிவித்த பின்னும்
நெட்டுயிர்த்துக் கொண்டும்
அரற்றிக் கொண்டுமிருக்கிறாள்
நீ பயணம் மேற்கொள்வதால் யாது பயன்?
(கா. ச. 6 : 46)

திணை - பாலை

துறை - பிரிவாற்றாமையைத் தோழி எடுத்துக் கூறித் தலைமகனைச் செலவழுங்குவித்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ *விழா ஆரவாரமா? அவலப் பேரொலியா?* *220*

அந்தோ! அவரில்லாத நேரத்தில் இவ்வூரில்
பெரிய விழா நடைபெறுகிறது
கூட்டத்தில் நெரிசலிட்டுக் கொண்டு
மக்கள் குழுமியுள்ளனர்
முழவும் பிற இன்னியங்களும் ஒலிக்கின்றன
மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் வானைப் பிளக்கிறது.
ஆனால், அவளுக்கு மட்டும்
அந்த விழா ஆரவாரம்
ஊர் முழுதும் தீப்பற்றி எரியும்
அவலப் பேரொலியாகத் தெரிகிறது
விழாவின் கலகலப்பு துயரத்தின்
வெடிப்பாக வருத்துகிறது, (கா. ச. 6 : 35)

திணை - பாலை

துறை - தனிப்படர் மிகுதி

★ *சொல்லால் விளக்க முடியாது* *221*

சொல்லால் அல்லது எழுத்தால்
எவ்வளவு உணர்வுகளை அல்லது வருத்தங்களை
உள்ளபடியே வெளிப்படுத்திக் காட்ட முடியும்?
உங்கள் பிரிவால்
நான் எவ்வளவு வருந்துவேன் என்று
உங்களுக்கே தெரியாதா? (கா. ச. 6 : 71)

திணை - பாலை

துறை - தலைமகள் தன் பிரிவாற்ற இயலாத தன்மையை வன்புறை எதிரழிந்து மொழிதலாகக் கூறியது.

★ *மலர் முகம் காண்பேனா?* *222*

வழிப்போக்கனே!
கடம்ப மலர்களை முகர்ந்ததும்
ஏன் கண் கலங்குகிறாய்?
மீண்டும் அன்புக்குரிய மனைவியின் மலர் முகத்தைக்
காணமாட்டோம் என்ற எண்ணமா?
வருந்தாதே அப்படி நேராது. மகிழ்ந்திரு.
(கா. ச. 6 : 65)

திணை - பாலை

துறை - ஆற்றிடைக் கண்டோர் தலைமகனைத் தேற்றியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கோடையின் கொடுமை 223

கோடை வெப்பத்தைத் தாங்க முடியாத எருமை
நீர் வேட்கையைத் தணிக்க எங்கும்
தண்ணீர் தேடிக் கிடைக்காததால்
கற்பாறைகளுக்கிடையில் கிடந்த பாம்பை
நீரூற்று எனக் கருதி நாவால் நக்குகிறது
எருமையின் நாவிலிருந்து ஒழுகிய உமிழ் நீரைக்
கரும் பாறையிலிருந்து ஊறி வரும் சுனை நீர்
என நினைத்துப் பாம்பு பருகுகிறது! (கா. ச. 6 : 51)

திணை - பாலை

துறை - ஆற்றிடை வருத்தம்

★ கல் நெஞ்சக் கார் மேகமே! 224

கல்நெஞ்சம் படைத்த கார் மேகமே
உன் வலிவுள்ள மட்டும் உரறு
வன்னெஞ்சத்தோடு ஆரவாரத்து அதிர்
ஆயின் மழைக் கூந்தல் மலர் மேனி
மெல்லியாளை மட்டும்
அதிர்ச்சியூட்டிக் கொன்று விடாதே. (கா. ச. 6 : 66)

திணை - பாலை

துறை - பிரிவால் வருந்திய தலைமகன் கார்மேகத்தை நோக்கிக் கூறியது.

★ குழந்தையைக் கண்டதும் 225

பிரிந்து சென்றவர் இன்னும் வரவில்லை
கார் மேகங்களைக் கண்டதும்
அழத் தொடங்கி விட்டாள்
உயிர் வாழ அவளுக்கு விருப்பமில்லை
இறந்துவிட நினைத்தாள்
தன் குழந்தை எதிரே ஓடி வருவதைக் கண்டதும்
உயிர் வாழ்ந்தே ஆக வேண்டும்
என்ற எண்ணம் வலுவடைந்தது. (கா. ச. 6 : 38)

திணை - பாலை

துறை - குறிப்பான் நிகழ்ந்த ஓம்படைக் கிளவி-தலைமகளின் நெஞ்சத் துதித்த உட்கோள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அகலாத கலைமான் 226

கலைமானையே உற்றுற்று நோக்கி மகிழ்ந்தவாறு
அருவிக்கரை மரநிழலில் பிணைமான் நின்றிருந்தது
புதரில் மறைந்திருந்த வேடன்
தன்காதுவரை நாணை வலித்திழுத்து
அந்தப் பிணைமானை ஒரே அம்பால் வீழ்த்தினான்
பிணைமான் தலைசாய்த்து வீழ்ந்து
குற்றுயிரும் குலையுயிருமாகத் துடித்தது
அருகிலிருந்த கலைமான் (ஆண் மான்)
அஞ்சி ஓடிவிடும் என்று வேடன் நினைத்தான்
அது அகலவே இல்லை
அருகிலிருந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது
(கா. ச. 6:94)

திணை - பாலை

துறை - ஒரு தலையுள்ளல்

பிரிவுக்காலத்தில் தான் படும் துயரத்தை அவர் உணருவாரா என்று தலைவி வருந்திய போது தோழி கூறியது.

[முன்பொரு முறை அவர் பொருள் வயிற்பிரிந்து மீண்டும் வந்த போது தான் வழியிடைக்கண்ட காட்சியான பிணைமானுக்காகக் கலைமான் கண்ணீருகுத்து அகலாது நின்ற நிகழ்ச்சியை அவர் முன்பு தலைவிக்குக் கூறியவாறே தோழி மீண்டும் கூறி நினைவுறுத்தினாள்.

தனக்கு எத்தகைய துன்பம் வரினும் தாங்கிக் கொண்டு தன் அன்புக்குரிய மனைவியின் துன்பத்திற்காகப் பரிந்து அதை நீக்கத்துடிக்கும் இயல்பினர் அவர் என்பதைக் குறிப்பாக வெளிப்படுத்தினாள்]

★ செல்லும் பாதையின் அருமை 227

நினைவாலும் கடத்தற்கரிய பாதை அது
சமமானது எது கரடு முரடானது எது
என்று பகுத்தறிய முடியாதது
மிக மிக மெதுவாகத் தான் செல்ல முடியும்
(கா. ச. 7:73)

திணை - பாலை

துறை - ஆற்றினது அருமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ மாமியரர் வடித்த கண்ணீர் 228

பிரிவுத் துயரால் வாடியிருந்த மருமகள்
மாமியாரை மதிப்புறவுக் (மரியாதை)காகக்
காலில் விழுந்து வணங்கிய போது
வளையல்கள் தாமாகக் கழன்று வீழ்ந்தன
இதைக் கண்ட மாமியார்
இயல்பாகவே கொடுமையும் சினமும் மிக்கவளாயினும்
தன்னையறியாமல் மனமிளகிக் கண்ணீர் வடித்தாள்
(கா. ச. 5:93)

திணை - பாலை

துறை - பிரிவிடை மெலிதல்

★ வயிறுதான் வாழ்வா? 229

உயர்ந்த செல்வநிலையில் நிமிர்ந்து வாழ்ந்து
பின் வறிய நிலைக்கு வீழ்த்தப்பட்டவர்கள்
முதுமகளிரின் நகில்களைப் போல்
வயிற்றையே பெரிதாகக் கருதி அதனையே சார்ந்து
அதன் பொருட்டாகவே வாழ வேண்டியிருக்கிறது
அன்புக்குரிய மனைவியையும் பிரிந்து
பொருள் தேடப் பலவிடங்களுக்குச் செல்ல
வேண்டியிருக்கிறது. (கா. ச. 7:52)

திணை - பாலை

துறை - உலகியலுரைத்துப் பிரிவுடம் படுத்தல்.

★ என் மனம் அவருடன் போய் விட்டது 230

தோழி! அவர் வெளியூருக்குப் புறப்பட்ட போது
அவரைப் பார்க்காதபடி கண்களைத் தடுத்து
முகம் திருப்பிக்கொண்டேன்
முகமும் கண்களும் என் சொற்படிக் கேட்டன
ஆனால், என் மனம் என் சொற்படிக் கேட்கவில்லை
என்னையறியாமலும் என் இசைவைப் பெருமலும்
என் மனம் என்னைத் தனியே விட்டு
அவருடன் போய் விட்டது
என் மனத்தைத் தடுத்துக் கொள்ள என்னால் இயலவில்லை
(கா. ச. 7:58)

திணை - பாலை

துறை - தனிப்படர் மிகுதி

8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வானவெளி ஏரியில் நிலவொளி வெள்ளம் 231

வானவெளி எனும் ஏரியில்
நிலவொளி வெள்ளம் நிரம்பியிருக்கிறது
அந்த வெள்ளம் பிரிந்தவரின் துயர வெள்ளத்தை
அதிகப்படுத்துகிறது
அவ்வெள்ளம் நிலவுக் கதிர் மழைகளாக மண்ணில்
பொழிந்தாலும் வடிவதில்லை
இனி, எத்தனைக் கோடி ஆண்டுகள்
அது மண்ணில் பொழிந்து கொண்டேயிருந்தாலும் கூட
வடிந்து முடியப் போவதில்லை

(கா. ச. 5:91)

திணை - பாலை

துறை - தனிப்படர் மிகுதி

★ உன்னைப்பிரிந்த அவளுடைய தோற்றம் 232

உன் பிரிவால் வருந்தும் அவளுடைய தோற்றம்
செல்வமில்லாத வீடு போலவும்
நீர் வறண்ட ஊற்றுப்போலவும்
மாடுகளில்லாத கொட்டில் போலவும்
பொலிவின்றிக் காணப்படுகிறது. (கா. ச. 7:9)

திணை - பாலை
துறை - உறுப்பு நலனழிதல்—பிரிவிடை மெலிதலுமாம்.

★ கதிரவன் எங்கே? வானம் எங்கே? 233

கதிரவன் எங்கே மறைந்தான்
நிலவும் விண் மீன்களும் எங்கே போய்
ஒளிந்து கொண்டன
இந்த மாரிக் காலத்தில்
நீல வானமே தெரியவில்லை
வான நூலறிஞன் இழுத்த
வெள்ளைக் கோடு போல்
வான வெளியில் வெண்நாரைகள்
வரிசை வரிசையாகப் பறந்து செல்லும்
வெண் கோடுகள் மட்டும் காணப்படுகின்றன.

(கா. ச. 5 ; 35)

திணை - பாலை

துறை - பருவங் கண்டழிதல்

கதிரவன் எங்கே மறைந்தான் என்பது, தலைமகன் கார் காலமாகியும் ஊர் திரும்பாமல் எங்கே சென்றான், அவனுக்குத் துணையாகச் சென்றவரும் திரும்பக் காணோம் என்னும் குறிப்பை வெளிப் படுத்தியவாறும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ **மரங்களின் ஓலம்** 234

கடுங்கோடையில்
கதிரவன் சுடும் வெப்பக்கதிர்களைத் தாங்காமல்
காட்டு மரங்களெல்லாம் கடுஞ்சூறைக் காற்றால்
அலைக்கப்பட்டு ஓலமிடுவது
தொடர்ந்து சிள்வண்டுகள் இரைவது போன்றிருக்கும்
அத்தகைய காட்டின் வழியாக
உன்னை எப்படி நான் உடனழைத்துப் போக முடியும்!
(கா. ச. 5:94)

திணை - பாலை
துறை - ஆற்றினது அருமை

★ **நீ எதிரில் வந்தாலும் தெரியவில்லை** 235

தோழி! பிரிவுத் துயரால் தூக்கம் வராததால்
கனவிலும் அவரைக் காண இயலவில்லை
கண்ணில் பொழியும் நீர்
கண் பார்வையை மறைப்பதால்
நீ எதிரில் வந்தாலும் தெரியவில்லை (கா. ச. 5:87)

திணை - பாலை
துறை - கண்படை பெருது கங்குல் நோதல்.

★ **பயணம் நின்றது** 236

வெளியூர்ப் பயணத்திற்காக அவன் ஆயத்தம் செய்து கொண்டிருந்தான்
மனைவியிடம் பிரியா விடை பெறுவதற்காக வந்தான்
அவள் தலை கவிழ்ந்து கதவோரம் சாய்ந்து நின்றிருந்தாள்
அவள் முகத்தில் பொலிவில்லை
முகம் வெளிறிப் போயிருந்தது
அவளையறியாமல் கண்களில் நீர் துளித்தது
மணந்து கொண்ட நாள் முதல்
தன் மனைவி கண் கலங்குவதைப் பார்த்தறியாதவன் அவன்
அவன் கண்களும் கலங்கின
தன் பயணத்தை உடனே நிறுத்தி விட்டான்.
(கா. ச. 5;100)

திணை - பாலை
துறை - செலவிடையழுங்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஏனக்கு நலஞ் சேருமா? 237

தோழி, என்னை நலமா என்று வினவுகிருய்
எனக்குப்போய் எப்படி நலஞ்சேரும்?
நம்வீட்டு முற்றத்தில் மாஞ்செடி முளைத்த பாங்கு
எனக்கு நலஞ்சாராத் தீவினையின் வருகையை
அறிவிப்பதாக இருக்கிறது
அது தலைப்பகுதியிலிருந்து முளை விட்டிருக்கிறது
பிரிந்து சென்ற கணவர்
நலமாக வீடுவந்து சேர வேண்டுமே என்ற கவலை
எனக்கு அதிகரிக்கிறது (கா. ச. 5:99)

திணை - பாலை

துறை - கையறு தோழி கண்ணீர் துடைத்தல்

★ இன்று மட்டும் என்னை அழவிடு 238

தோழி!
இன்று மட்டும் என்னை அழவிடு
தடுக்காதே
அவர் என்னைப்பிரிந்து வெளியூர் சென்ற பிறகு
நாளையும் அவர் பிரிவால் நான் சாகாமல்
உயிரோடிருந்தால்
அழாமலிருக்கிறேன் (கா. ச. 6:2)

திணை - பாலை

துறை - பிரிவாற்ருமை

★ பிடி (பெண் யானை) வருந்தி அலமருகிறது 239

சேற்றில் சிக்கித் தவிக்கும் களிற்றைக் கண்ட பிடி
தன் துதிக்கையை நீட்டி களிற்றை வெளியில் இழுக்க
முயல்கிறது
முடியவில்லை, சுற்றிச் சுற்றி வருகிறது
மலைகளெல்லாம் நடுங்க ஓலமிடுகிறது
அருகில் செல்ல முயல்கிறது
அருகில் நெருங்க முடியாத நெடுந்துயரில்
துதிக்கையை உயரே தூக்கிப் பிளிறுகிறது
(கா. ச. 5:54)

திணை - பாலை

துறை - ஆற்றிடை நிகழ்ச்சியான் ஆற்ருமை மிகுதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இருவரால் தான் முடியும் 240

தாழ்ந்து விட்ட மக்களின் குடிப்பெருமையையும்
பார்வதியின் உள்ளத்தையும்
மகிழ்வித்து மேம்படுத்த இருவரால் தான் முடியும்
ஒருவர் சாலிவாகன மன்னன்
மற்றொருவர் சிவபெருமான் (கா. ச. 5:67)

திணை - பாலை

துறை - பிரிவுடம் படுத்தல்

வேந்தன் ஆணைப்படி தூது செல்லும் பொருட்டுத் தலைவியைப் பிரிய நினைக்கும் தலைவன், மன்னன் பெருமையையும் தான் மேற்கொண்ட பணியின் உயர்வையும் வெளிப்படுத்தும் கூற்று.

★ கனவு காண முடியவில்லை 241

கனவிற் காதலனைக் காணும் பெண்கள்
கொடுத்து வைத்தவர்கள்
எனக்குத் தூக்கமே வருவதில்லை
நான் எப்படிக் கனவு காண முடியும்?
மலயசேகரன் (கா. ச. 4 : 97)

திணை - பாலை

துறை - கண்படை பெறாது கங்குல் நோதல்

★ அவளைத் தேற்றுங்கள் 242

அங்குமிங்கும்
பேய்ப்பிடித்தாற் போல் அலைந்து கொண்டிருந்த இவள்
அலைவதை நிறுத்திவிட்டாள்
ஓரிடத்தில் சோர்ந்து உட்கார்ந்தவள்
அப்படியே மயங்கி வீழ்ந்து விட்டாள்
காரணியம் என்ன தெரியுமா?
கார் காலம் வந்து விட்டது என்பதை
மேகங்களைப் பார்த்ததும் தெரிந்து கொண்டாள்
இனித் தயங்காதீர்கள்
அவளைப்பற்றி எடுத்துத் தேற்றுங்கள்
துத்தரன் (கா. ச. 4:86)

திணை - பாலை

துறை - பருவங்கண்டழிதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ யானையைக் கண்டதும் 243

மனைவியைப் பிரிந்து
காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான்
நீர் நிலையருகில் நின்றிருந்த யானை
செழித்து மலர்ந்திருந்த குவளை மலர்களைக்
கொத்தோடு பறித்தது
அதன் துதிக்கையில்
ஆதரவற்றுக் கிடந்த குவளை மலர்கள்
தலைகீழாகத் தொங்கிய நிலையில்
தண்ணீர்த்துளி தரையில் சொட்டியது
இக் காட்சியைக் கண்டதும்
தன் மனைவியின் குவளைக் கண்களிலிருந்தும்
இவ்வாறு தான் கண்ணீர் சொட்டும் என்று நினைந்து
ஏங்கினன் (கா. ச. 4:84)

திணை - பாலை

துறை - ஆற்றிடை நிகழ்ச்சியான் ஆற்ருமை மிகுதல்

★ என்னை ஏன் தூங்கச் சொல்லுகிறீர்கள் 244

நண்பர்களே
மூன்ரும் யாமம் கடந்த பின்னும்
என்னை ஏன் தூங்கச் சொல்கிறீர்கள்
சோபாலிகை மலர்களின் நறுமணம்
என்னைத் தூங்க வொட்டாமல் செய்கிறது
நீங்கள் நன்ருக உறங்குங்கள், சிரிசத்தி (கா. ச. 5 : 12)

திணை - பாலை

துறை - பிரிவிடைக் கலக்கம்

★ கண்ணனின் துணைபெற்ற வீமன் 245

கண்ணனின் துணை பெற்ற வீமனுல்
உதையுண்ட துரியோதனனைப் போல்
இளவேனில் காலத்தின் துணையோடு வந்த
தென்றலின் தாக்குதலால்
ஏற்கெனவே பிரிவால் வருந்தியிருந்த
அவன் பெரிதும் தாக்குண்டான். (கா. ச. 5 : 43)

திணை - பாலை

துறை - பிரிவிடைக் கலக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நெஞ்சே ஏன் இப்படி வஞ்சிக்கிறாய்! 246

ஆர்வம் ஒருபாலும் ஆற்றாமை ஒருபாலும்
கொண்ட நெஞ்சே!
திடீரென்று ஏன் இப்படிப் பதறுகிறாய்?
ஏன் இப்படி மாறிவிட்டாய்?
நீயுமா என்னை வஞ்சிக்கிறாய்?
இத்துணைக் காலம் கடந்து
திரும்பி வருவேன் என்று
அவர் சொன்ன போது ஒப்புக் கொண்டாய்
அவர் பிரிந்த மறுகணமே பதறுகிறாயே!

திணை - பால் (கா. ச. 5 : 37)

துறை - நெஞ்சொடு கிளத்தல்

★ போர் முடிந்தது 247

தோழி! உன் கணவர் வந்து விடுவார்
பகைவரின் படைகள்
அடை மழையைச் சாக்கிட்டு
அஞ்சி ஓடுகின்றன
போரிலிருந்து தப்பித்துக் கொள்ள
அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்து விட்டது
மழைக்கு அஞ்சிய ஓதிம (அன்ன)ப் பறவைகள்
சிறகடித்தவாறு வெள்ளத்தில்
பின் வாங்குகின்றன
இவை தாமரையிருக்கும் இடத்தை
ஏங்கே கண்டு பிடிக்கப் போகின்றன! (கா. ச. 5 : 71)

திணை - பாலை

துறை - அவன் வரவு உணர்த்தல்

★ என்னுள்ளத்தைக் கலக்கியது 248

மந்தர மலை பாற்கடலைக் கலக்கியது என்று
பெரியவர்கள் சொல்லுகிறார்கள்
அதைப்பற்றி எனக்குத் தெரியாது
ஆனால், உன் பிரிவு
என்னுள்ளத்தைக் கலக்கியதை விடவா
அது பெரிதாக இருக்கும்? (கா. ச. 5 : 75)

திணை - பாலை

துறை - தலைமகன் தன் ஆற்றாமையைச் சொல்லியது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ பாலை வனத்தில் நீரைத் தேடுவது போல 249

நற்பேறு இல்லாத அவளுடைய கண்கள்
உன்னைத் தேடிப்
பாலை வனத்தில் தண்ணீருக்காக அலைபவர்களைப் போல
அலைகின்றன
தோற்றப்பொலிவு மிக்க இளைஞரிடை
நீயிருக்கிறாயா என்று மறைவாக நின்று தேடுகிறாள்
நீ அவள் கண்ணில் படாதது ஏன்? (கா. ச. 5;92)

திணை - பாலை

துறை - பிரிவாற்றாமை

தோழியின் கூற்று. அகற்சியது அருமையைத் தோழி ஏதுவின் உரைத்தது. நீ தலைவியைப் பிரியாமல் உடனிருந்து வாழுங் காலத்திலும் அன்றாடக் கடமையிலீடுபடும் பகற் போதைய பிரிவைத் தாளாமல் அவள் கண்கள் உன்னைத் தேடுகின்றன என்னும் குறிப்பு நீ வேற்றூர் சென்றால் இவள் நிலைமை என்னாகும்? என்பதாம்.

★ கோடை வெயில் நிலாவொளியாயிற்று 250

கடுங்கோடை
நண்பகல் வெய்யிலின் கொடுமை
யாராலும் தாங்க முடியாதது
மனைவியைப் பிரிந்து வேற்றூர்
செல்லும் அவனுக்குக்
காட்டு வழியில் வெப்பந் தாள முடியவில்லை.
தன் நெஞ்சில் உறையும்
காதற் செல்வியாகிய மனைவியின்
நிலவு போல் குளிர்ந்த முகத்தை நினைத்தவுடன்
நீர்ப் பெருக்கினருகே நிழலிலிருப்பது
போன்ற உணர்வு ஏற்பட்டது.

மங்கலகலன் (கா. ச. 4 : 99)

திணை - பாலை

துறை - ஒரு தலையுள்ளல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மருதத்திணை

ஊடலை வளர்த்த உரையாடல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

" ஆக்கஞ்சேர் ஊடல் அணிமருதம் "

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மருதம்

★ காதல் கரைகிறது 251

செடி நட்டால் தானாக மரமாகிறது
காதலும் தானாக வளரும் என்று
நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்
செடி இருக்கும் இடம் தேடி மழை வர வேண்டும்
காதலியின் கண்பார்வை எல்லைக்குள்
கணவன் இருக்க வேண்டும்.
கணவனில்லாத காலத்தில் அவள் வாடுகிறாள்;
காதல் கண்ணீரால் கரைகிறது
காதல் அடியோடு வெந்து கருகி விடுவது உண்டு;
அது எப்போது தெரியுமா?
இழிந்தவன் ஒருவனைக் காணும் போது
காதல் பூண்டற்றுப் போவதுண்டு;
அது எப்போது தெரியுமா?
கொடியவன் ஒருவனைக் காணும் போது
காதலூற்று வறண்டு போவதுண்டு;
அது எப்போது தெரியுமா?
பிறரை வசைபாடித் கொண்டிருக்கும்
பேதையைக் காணும் போது
ஆண் மகன் என்பதால்
மட்டும் காதல் அரும்பாது. (கா. ச.1:81)

திணை - மருதம்

துறை - ஏதுவின் உரைத்தல்-தோழியின் கூற்று.

★ நெஞ்சே! விண்ணேறித் தாவாதே 252

நெஞ்சே!
இப்போது அவர் நமக்குக் கிடைத்தற்கரியவர்
அது தெரிந்தும் நீ ஏன்
விண்ணேறித் தாவுகிறாய்?
கீழே விழுந்து சுக்கு நூறாக உடைந்து விடுவாய்.
பவர சேனன் (கா. ச. 3 : 2)

திணை - மருதம்

துறை - நெஞ்சொடு கிளத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவள் இறக்கட்டும் 253

நேர்மையிலிருந்து நூலிழையளவும்
பிறழாதவர்களால் தான்
தூய காதலின் மேன்மையை உணர முடியும்
தக்கவரைக் காதலிக்கும் போது தான்
காதல் தகுதியுடையதாகிறது.
அவரை
நேர்மையானவர் என்றே
என் தோழி நினைத்திருந்தாள்
அவள் நினைத்தது பொய்த்து விட்டது
எரிமலையாய்க் குமுறும்
அவள் உள்ளத்தில்
அமைதியை யுண்டாக்கும்
ஒரே மருந்து சாவுதான்
அதுவே அவள் தன் தூய காதலுக்காகப்
பெறத்தக்க பரிசு!
அவள் இறக்கட்டும். (கா. ச. 1 : 12)

திணை - மருதம்

துறை - அவள் நிலையுரைத்தல்

★ ஊடல் தவிர் 254

தோழி! இளமைக் காலம் ஆற்றுநீர் போல்
விரைந்து கழியக் கூடியது
நாட்கள் விரைந்தோடி விடும்
கழிந்து போன இரவுகள்
திரும்பி வரப்போவதில்லை
அந்த இரவுப் பொழுதுகளைக்
கண்ணீர்க் கடலாக்கிக் கொள்ள வேண்டாம்
அதில் நீந்திக் கரையேறவும் முடியாது
மூழ்கிச் சாகவும் முடியாது
ஆதலால் அவரோடு கொண்ட ஊடலைத் தவிர்.

பவணராய (கா. ச. 1 : 45)

திணை - மருதம்

துறை - அடங்கா ஒழுக்கத்து அவன் வயின் அழிந்தோளை, நாளது சின்மையும் இளமையது அருமையுங் கூறி அடங்கக் காட்டுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அன்னாய்! இதனைப் பொறேன் 255

அன்னாய்!
அவர் வணிகத்திற்காக அல்லது பணந்தேடுவதற்காக
என்னைப் பிரிந்து சென்றதை
நான் பொறுத்துக் கொண்டேன்
அது ஓரளவு பொறுத்துக்
கொள்ளக் கூடியது
ஆனால் ஒரே ஊரில்
வேறொருத்தியை நாடி அவர் பிரிந்து
செல்வதை நான் பொறுக்கமாட்டேன்
இதைவிடச் சாவு விரும்பத்தக்கதாயிருக்கும்.

அமியன் (கா. ச : 43)

திணை - மருதம்

துறை - உணர்ப்பு வயின் வாரா ஊடல். பேணு ஒழுக்கம் நாணிய கிளவியுமாம்.

★ என்னை அவர் ஏன் விரும்பவில்லை 256

என்னிடம் நல்லியல்புகள் குறைவா?
அவர் என் நல்லியல்புகளைப்
புரிந்து கொள்ள முடியாதவரா?
என்னிடம் அவர் விரும்பும் நல்லியல்புகள்
எவையும் இல்லையா?
அல்லது அவரால் விரும்பப்பட்ட வேறொருத்தி
எல்லா நல்லியல்புகளும் ஒருங்கே பெற்றவளா?
இதை உடனே அறிந்து கொள்ள
என் நெஞ்சம் துடிக்கிறது. சந்தசுத்தி (கா. ச. 3 : 3)

திணை - மருதம்

துறை - இகந்தமை இயம்பல்

★ இவளொருத்திக்குத்தான் தெரியும் 257

கணவனின் பணிவால் தணியும் சினத்தையும்,
இளகும் மனத்தையும் கட்டியாண்டு
பொய்யாகப் புலந்து கடுத்துப் பேசி
ஊடல் புரியும் அரிய கலை
இவளொருத்திக்குதான் தெரியும். (க. ச. 1:88)

திணை - மருதம்

துறை - ஊடலுவகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கண்ணாடி உள்ளம் 258

மாமி! அவருக்கு எப்படி
என் உள்ளத்தை எடுத்துச் சொல்வேன்
நைந்துருகும் நெஞ்சில் அமைதியைத்தான்
எப்படிக் காண்பேன்
என் துயரம் அவர் உள்ளத்தில் புகவில்லை
எந்த உருவமாவது கண்ணாடிக்குள் புகுகிறதா?
கண்ணாடிக்குள் தெரியும் நிழலை
உருவமாக நினைக்கிறோம்
அவர் வாய்மொழியை
உண்மையென்று நம்புகிறோம்.

இராயவக்கன் (கா. ச. 3 : 4

திணை - மருதம்

துறை – தன் மனத்தழுங்கல்

★ உங்கள் மனமே உங்களுக்கு நடுவர் (நீதிபதி) 259

பிறர் சொல்வது எதற்கு?
பிறர் வந்து கண்டறிய வேண்டியதில்லை
உங்கள் மனமே உங்களுக்கு அதிகாரி
தகவு கடந்த நெஞ்சினராய் விட்டீர் என்பதை
என் மீது உங்களுக்கு அன்பு குறைந்து வருவதே
தெளிவாகக் காட்டுகிறது. (க. ச. 3 : 1)

திணை - மருதம்

துறை - அன்பு தலைப் பிரிந்த கிளவி

★ எதை மன்னிப்பது? 260

'பொருட்படுத்தாமல் மன்னித்து விடு'
என்று தாங்கள் சொல்வது
எனக்கு நகைப் பூட்டுகிறது; நாணமும் தருகிறது
உங்களிடம் உள்ள குற்றங்களில்
எதை மன்னிப்பது?
கடந்ததா? நடப்பதா? அல்லது இனி வருவதா.

ரேவாயே (கா. ச. 1 : 90)

திணை - மருதம்

துறை - சீறேலென்று சீறடி பணிதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஏன் கொடியவர்களாய் இருக்கிறார்கள் 261

வாழ்வு நிலையானதன்று
கழிந்த இளமை மீளப்போவதில்லை
நாட்களும் ஒன்றுபோலில்லை
இருந்தும்
காதல் வாழ்வில் பலர் கொடியவர்களாய் இருப்பது ஏன்?
சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச. 3:47)

திணை - மருதம்

துறை - நாளது சின்மையும் இளமையது அருமையும் விளங்க உலகியல் மேல் வைத்துரைத்தல், மூதறிவுடைமை மொழிதலுமாம். தோழி தலைமகனிடத்து முன்னிலைப் புறமொழியாகக் கூறியது.

★ மத்தளம் போல் இருமுகத்தவன் 262

தோழி! இந்த இழிசினன்
மத்தளம் போல்
இருமுகங்களும் இரண்டு வாய்களும் கொண்டவன்
வாயால் சுவையாக உண்ணும் போது
மிக இனிமையாகப் பேசுவான்
அது வயிற்றில் செரித்த பிறகு
கடுமையாக இன்னாதவற்றைப் பேசுவான்
மத்தளத்தின் மண் மெழுகு (மார்ச்சனை) உதிர்ந்தால்
அதன் ஒலி கடுமையாகிறதல்லவா?
(கா. ச. 3:53)

திணை - மருதம்

துறை - வாயில் மறுத்தல்

★ தீயவனின் நட்பு 263

தீயவனின் நட்பு
நீர்மேல் எழுத்து
நல்லவரின் நட்பு
கல்மேல் எழுத்து (கா. ச. 3 :72)

திணை - மருதம்

துறை - வாயில் மறுக்கும்போது, தலைமகள் ஏதுவின் காட்டி உலகியல் உரைத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ திரியை மேலும் தூண்டுகிருன் 264

மாமி!
அக்காட்சி இன்னும் கூட எனக்குச் சிரிப்பூட்டுகிறது
அவன் அவளுடைய ஊடலை நீக்கப்
பணிந்து பணிந்து மன்ருடுந்தொறும்
அவள் விளக்கின் திரியைத் தூண்டிக் கொண்டேயிருந்தாள்
சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச. 3:64)

திணை - மருதம்

துறை - உணர்ப்பு வயின் வாரா ஊடல்—சேக்கையிற் புலத்தலுமாம்

★ பகைவனுக்கும் அருள் பொழிவதுண்டு 265

தோழி!
உயர் குடியில் பிறந்தவர்கள் தம் நல்லியல்பால்
பகைவனின் குற்றத்தைப் பெரிதாகக் கருதாமல்
அவனுக்கும் முகப் பொலிவோடு
சில நன்மைகள் செய்வதுண்டு
நீ அவர் குற்றத்தைப் பொறுத்துக் கொள்வது
உன் பெருந்தன்மையை மிகுதிப் படுத்திக் காட்டும்
சாதவாகன மன்னன் ஆளன்
(கா. ச. 3:65)

திணை - மருதம்

துறை - பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளத்தல்

★ இனியும் திருந்தக்கூடும் 266

மது காய்ச்சுவதற்கு மூட்டப்படும் அதே நெருப்பு
தெய்வத்தின் திருமுன்பும் எரிக்கப்படுகிறது
ஆண் மகனுகிய தாங்கள்
கீழோர் கூட்டத்தில் இருந்தவராயினும்
வருந்த வேண்டியதில்லை
இனியுங்கூட
மேன் மக்களோடு சேர்ந்து மேன் மக்களாக முடியும்
(கா. ச. 3:27)

திணை - மருதம்

துறை - தாய் போல் கழறித் தழீஇக் கோடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ பிறர் துன்பம் காண்பவர் 267

அன்னைமீர்! பறவைகள் தம் வயிற்றை மட்டும் நிரப்பிக் கொள்கின்றன
பிற உயிர்களின் வயிற்றைப் பற்றி
அவற்றுக்குக் கவலையில்லை
உலகில் சான்றோர் மட்டும் தான்
பிற உயிர்களின் வயிற்றைப் பற்றியும் துன்பங்களைப் பற்றியும்
எண்ணித் துன்பப் படுகிறார்கள்
காப்பாற்றவும் உதவி புரியவும் முனைகிறார்கள்
அலக்கன் (கா. ச. 5:85)

திணை – மருதம்

துறை - ஓம்படைக் கிளவி. ஊடற் காலத்தும் பெரியோர் நன்மொழி போற்றத் தக்கன என்று தொல்லவை உரைத்தலாகத் தோழியர் பொதுப்படக் கூறியது மாம்.

★ நெஞ்சு சுடுகிறது 268

பொய்யாக அவர்மீது தவறு காட்டிப் புலந்தேன்
அவரைத்
தீயொழுக்க நினைவின் பக்கம் இழுத்தது
எவ்வளவு பெரிய தவறு.
நினைப்பால் கூட
தீயவற்றை நினைக்க என் நெஞ்சு சுடுகிறது
சீயன் (கா. ச. 4: 6)

திணை - மருதம்

துறை - புலவிநுணுக்கம்-தலைமகள் தலைமகனைப் பொய்க் காய்வு காய்ந்தது.

★ யார் துணையாகக் கூடும் 269

அன்புக் குரியவரின்
அன்பைப் பெறாத போது
நம் துன்பத்துக்கு
யார் துணையாகக் கூடும். (கா. ச. 4: 5)

திணை - மருதம்

துறை - நெஞ்சொடு கிளத்தல். ஏமுறு கிளவியுமாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கிழட்டுப் பூனைக்குக் கசப்புக் கஞ்சி 270

தோழி!
இந்தத் தூதுவனுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்
நல்லவர்களை
நல்ல எண்ணத்தோடு அணுகித்தான் வெல்ல முடியும்
கிழட்டுப் பூனைக்குக்
கசப்புக் கஞ்சியைக் கொடுத்து
வயப்படுத்த முடியுமா?
கஞ்சி எப்படிப்பட்டது என்று
பூனை தொலைவிலிருந்தே தெரிந்து கொள்ளும்
அவ்வளவு பட்டறிவுள்ளது அது
போசன் (கா. ச. 3:86)

திணை - மருதம்

துறை - வாயில் மறுத்தல்-தலைமகள் கூற்று.

★ பழி சுமந்தவனின் அன்பு வேண்டாம் 271

அறிவும் திறமையும் மிக்கவரின்
வெறுப்பைக் கூட பெற்றுக் கொள்வேன்
ஆனால்,
பலரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டு
பழிசுமந்து நிற்பவரின் அன்பைப் பெற நாணுகிறேன்
சவரசித்தன் (கா. ச. 3:67)

திணை - மருதம்

துறை - பேணு ஒழுக்கம் நாணிய கிளவி

★ ஊடல் தீர்ந்தது 272

கள்ளப்பார்வையோடு
விளக்கை ஊதியணைத்ததும்
மந்தணப் (இரகசிய) பேச்சுகள் தொடர்ந்தன.
உதடுகள் நூற்றுக்கணக்கான
உறுதி மொழிகளை உதிர்த்தன
அம்மொழிகள் மகிழ்ச்சி தந்தன
ஊடல் தீர்ந்தது. வச்சஏவன் (கா. ச. 4 : 33)

திணை - மருதம்

துறை - ஊடலுவகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ எண்ணிக்கையில் அடங்காத தவறுகள் 273

தலைவ! உன் வேண்டுகோளின்படி
நான் தலைவியிடம் தூது சென்றேன்
உன் அன்பின் பெருக்கை விவரித்துச் சொன்ன பிறகு
அவள் நெடுநேரம் கண்ணீர் சிந்தித்
தன் சினத்தீயை மெல்ல மெல்ல அணைத்துக் கொண்டாள்
தன் இரு கை விரல்களையும் பயன் படுத்தி
உன்குற்றங்களை ஒவ்வொன்றாக எண்ணினாள்
உன் குற்றங்கள் எண்ணிக்கையில் அடங்காமல் போகவே
எண்ணுவதை நிறுத்திக் கொண்டு பெருமூச்சு விட்டாள்
(கா. ச. 3:77)

திணை - மருதம்

துறை - கொடியோர் கொடுமை சுடும் என ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ பகுதியின் நீங்கிய தகுதிக் கூற்று.

★ உப்பின் சுவை தெரியவா போகிறது! 274

'உன் உழைப்பால் கிடைத்ததை
உண்டு மகிழ், மனநிறைவு கொள்' என்று
பெரியோர் சொல்லியிருக்கின்றனர்
இந்தச் சிற்றூரில் உப்பு எங்கே கிடைக்கப் போகிறது
அன்பில்லாத நிலையில்
உணவில் உப்பிட்டிருந்தாலும் அது இனிக்கவா போகிறது?
அது கூட வேண்டாம்
உப்பிருக்கிறது என்று சொன்னாலும் தெரியவா போகிறது,
திலோயணன் (கா. ச. 4:16)

திணை - மருதம்

துறை - அன்பு தலைப்பிரிந்த கிளவி

★ சிலருக்குத்தான் வாய்க்கிறது 275

வாய்ப்பு நேரும்போது
இன்சொற்களால் குளிரப் பேசி
பகைவரையும் மகிழ்விக்கும் ஆற்றல்
ஒரு சிலருக்குத்தான் வாய்க்கிறது
அவர்களில் நீங்களும் ஒருவர்
(கா. ச. 3:42)

திணை - மருதம்

துறை - ஊடல் உவகை—தலைவியின் கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நல்லவன் வருந்த மாட்டான் 276

பழிக்கப்பட்டாலும் செல்வம் யாவும் இழந்தாலும் நல்லவன்
வருந்த மாட்டான்
இதைத் தலைவிக்குச் சொல் என்று
தூதுவன் வழியாகச் செய்தியனுப்பியிருக்கிறார்.
பொய்யாக வஞ்சகர்களால் பழிக்கப்பட்டாலும்
நேர்மையாக இருந்து செல்வத்தை இழக்க நேர்ந்தாலும்,
என்று நாம் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது
ஆதலால், அவர் நன்னெறியிலிருந்து விலகாதவர்
தலைவி! உன் சினந்தணிவதாகுக:

(கா. ச. 4: 20)

திணை - மருதம்

துறை - தொல்லவை உரைத்தல் - தோழி கூற்று

★ கணவன் அருகிருக்க மெலிவது ஏன்? 277

நீங்கள்
அருகிலிருந்தும் கூட
என்னுடல் மெலிவது ஏன் என்று வினவுகிறார்கள்
என்ன சொல்வதென்று
எனக்குத் தெரியவில்லை;

மாணிக்கராயன் (கா. ச. 4 : 47)

திணை - மருதம்

துறை - பரத்தையிற் பிரிவச்சம் - தலைமகள் குறிப்பால்
உணர்த்திய குறிப்பு.

★ இனி நினைக்கவே வேண்டாம் 278

அவள் மெலிவுக்கு நீயே கரணியம்
அவள் துயரத்துக்கு மூலமும் நீயே
இனி, அவளை நினைக்கவே வேண்டாம்
நினைத்துப் பயனில்லை
பிரிவுத் துயருக்கு மருந்தே இல்லை
சாவு ஒன்றுதான் வழி.

(கா. ச. 4 : 48)

திணை - மருதம்

துறை - அன்பு தலைப்பிரிந்த கிளவி - தோழி தலைமகனைச்
கழறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

279

★ நகையாட்டை நம்புவேனு

தலைவ!
திறமைசாலிகளின் நகையாட்டு விளையாட்டுகளை விட
நல்லவர்களின்
உண்மையான அன்புள்ளவர்களின் நகையாட்டு
உள்ளத்தை மிகுதியாகக் கவரும் என்பது
நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?
நல்ல உள்ளத்தோடு எவ்விடத்திலாயினும்
எவ்வகையிலாயினும்
பேசும் பேச்சுகள்
நகை மொழிகள் ஆகியவை
மிகுந்த நன்மை விளக்கும் (கா. ச. 3:74)

திணை - மருதம்

துறை - தானவட் பிழைத்த நிலையைத் தோழி தலைமகனுக்குத் தகுதிக் கூற்றுன் கூறியது.

280

★ நான் சொல்வதை நம்புங்கள்

உங்களுடைய குற்றங்களை விட
நல்லெண்ணம் சிறிதுமில்லாத உங்கள் சொற்கள்
என்னைப் பெரிதும் சுடுகின்றன
நான் சொல்வதை நம்புங்கள். சயராயன் (கா. ச. 4 : 53)

திணை - மருதம்

துறை - தாய்போல் கழறித் தழீஇக்கோடல்

281

★ நானும் கண்ணீர் சொரிந்தேன்

தலைவா! உன் காதலியிடம்
உன் அன்பைப் பற்றி வினவியபோது
ஒன்றும் பேசாமல்
மாலை மாலையாகக் கண்ணீர் விட்டு அழுதாள்
நானும் அவள் துயரம் கண்டு தாளாமல்
கண்ணீர் விட வேண்டி வந்தது.
சயன் (கா. ச. 4:57)

திணை - மருதம்

துறை - தானவட் பிழைத்தலால், பிரிவிடை மெலிந்த தலைமகளைக் கண்டு வந்த பாங்கன் கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ காதல் நாடக முதற்காட்சி 282

காதலுறவின் முதற்படியான அரவணைப்பு
காதல் நாடகத்தின் திறப்புக் காட்சி (முதற்காட்சி)
போல் அமைந்திருக்கிறது
காதலரின் அன்புத் தழுவல் வாழ்க
அது
காதலியின் சினம் என்னும்
நச்சு மரத்தை வீழ்த்துகிறது
உடல் முழுதும் களிப்பை (ஆனந்தத்தை)
அள்ளிப் பாய்ச்சுகிறது. (கா. ச. 4 : 44)

திணை - மருதம்

துறை - ஊடலுவகை, வாயில் நேர்தலுமாம். தலைமகள் தன்னுள் சொல்லியது.

★ என்னையே மறந்து விடுகிறேன் 283

நடுங்கவும் வியர்க்கவும்
மயிர்ச் கூச்செறியவும் நெட்டுயிர்க்கவும்
நாட்டிய மாடவும் தெரிந்த பெண்கள் கொடுத்து
வைத்தவர்கள்
ஆனால் என்னைப் போன்றவர்களுக்கு அவை தெரிவதில்லை
நான் கணவரைக் கண்டதும்
என்னையே மறந்து விடுகிறேன்.
ரோலஏவன் (கா. ச. 5:60)

திணை - மருதம்

துறை - அவர்வயின் விதும்பல்

★ எப்படிக் கடிந்து கொள்வது ! 284

தோழி! யாரைப் பிரிந்தால் தூக்கம் போய்விடுகிறதோ
நெட்டுயிர்ப்பும் உடல் வெளுத்துக் காணப்படும் பசலையும்
தோன்றுகிறதோ
அவரோடு
நான் எப்படிப் பிணங்கிக் கொள்ள முடியும்?
எவ்வகையில் கடிந்து பேச முடியும்? (கா. ச. 4:72)

திணை - மருதம்

துறை - இன்றியமையாமை கூறல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நீ கற்றுத் தந்தவை 285

இவள் கள்ளங்கரவற்றவள்
இவள் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருந்தவள்
மகிழ்ச்சி தவிர வேறு மெய்ப்பாட்டுணர்வுகளை
இவள் இதுவரை அறியாதிருந்தாள்.
உன்னைக் கணவனாக ஏற்று
இல்லறக் கடமைகளில் ஈடுபட்ட பிறகு
ஒரே நாளில்
அழுதல், தேம்புதல், ஏங்குதல்
தூக்கமின்றி கொட்டாய் விடுதல்
வெளியில் சொல்ல முடியாமலும்
துன்பங்களைச் செரிக்க முடியாமலும் திணறுதல்
ஆகிய பல உணர்வுகளை உன்னால்
கற்றுக் கொண்டாள். (கா. சா. 4 : 52)

திணை - மருதம்

துறை - தோழி தலைமகனை
இடித்துரைத்த செங்கடுமொழி.

★ பகைவர்க்குக் களிப்பூட்டி விடாதே 286

தோழி! உன் செயல்
பகைவர்க்குக் களிப்பூட்டுவதாக இருக்கிறது
அவர்கள் நகையாடுவர்
உன் காதலனோடு கொண்ட சினம் தணிவாயாக
தவரத்தின் எடைக்கு
மிகுதியாகப் போடப்பட்ட எடைகற்களால்
தவசத்தின் எடை குறைந்து விடுவது போல்
உன் சினத்தின் மிகுதியால்
உன் குடும்பப் பெருமை குறைந்து விடும்
குடும்பத்தின் பெருமையைக்
குறைக்கும் பணியில் மட்டும்
எப்பொழுதும் ஈடுபட்டு விடாதே.
மாயங்கன் (கா. ச. 2:52)

திணை - மருதம்

துறை - அந்தரத்தெழுதிய எழுத்தின் மான வந்த குற்றம்
வழிகெட ஒழுகும் பொருட்டு தோழியுரைத்த ஏமுறு
கிளவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கவர்ச்சி 287

தோழி! அவர் எத்தகைய பண்புள்ளவர் என்று
முதலில் தெரிந்து கொள்ளாமல்
அவரை ஏன் காதலித்தாய் என்று கேட்கிருய்.
மாந்தர்கள்
குணங்களால் கவரப்படாமல்
எடுத்த எடுப்பிலேயே காதல் கவர்ச்சிக்கு
இரையாகி விடுகிருர்கள்
காட்டில் வேடர்களைப் பார்த்திருக்கிருயல்லவா?
அவர்கள் முத்தை விரும்பி யணியாமல்
குஞ்ச விதைகளை மாலையாகக் கட்டி
அணிந்து கொள்கிருர்கள். (கா, ச. 4: 10)
திணை - மருதம்

துறை - தலைமகனின் கொடுமை சாற்றல் - தலைமகளின் கூற்று.

★ இது நகத்தக்க துடைத்து 288

அவள் என்னேடு ஊடல் கொண்டாள்
அவள் பிடிவாதம் மிக்கவள்
அவளுடைய ஊடலை என்னுல் தணிக்க முடியவில்லை
என்னை விட்டுச் சற்று விலகி
முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு படுத்திருந்தாள்
தூக்கத்தில் தன்னையறியாமல் புரண்டு
என்னருகில் நெருங்கி வந்து விட்டாள்
(கா. ச. 4:68)

திணை - மருதம்

துறை - ஊடல் உவகை

★ காதலின் பல கோணம் 289

அவள் உன்னவள்
நீ என்னவன்
நீ அவளால் வெறுக்கப்பட்டவன்
நான் உன்னுல் வெறுக்கப்பட்டவள்
காதல் பல கோணங்களைக் கொண்டது.
(கா. ச. 2: 26)
திணை - மருதம்

துறை - தலைமகனின் பரத்தமை காட்டித் தலைமகள் ஊடியது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இறந்தாலும் பயனில்லை 290

துயரம் தாளாமல் இறந்து விட நினைக்கிறேன்
என்னுள்ளத்தைத்
தங்கள் உள்ளத்திலேயே விட்டு விட்டு
நானிறந்து விட்டால்
மறு பிறப்பில் தங்களைச் சேர்வது எங்ஙனம்
என்று ஏங்குகிறேன்
தனித்து வாழ முடியவில்லை
துணிந்து சாவை வரவழைத்துக் கொண்டாலும் பயனில்லை
என்னிலையை யார் புரிந்து கொள்கிறார்கள்?
(கா. ச. 4:75)

திணை - மருதம்

துறை - கைவிடின் அச்சமும் கையறு நிலையும்

★ எத்தனைத் தவறுகளாயினும் செய்யுங்கள் 291

சிறிதும் தயங்காமல்
எத்தனைத் தவறுகளாயினும் செய்யுங்கள்
உங்களைப் பொறுத்த வரையில்
நான் பொறுத்துக் கொள்வேன்.
நற்பண்புகளால் நிறைந்த என் உள்ளத்தில்
உங்கள் தவறுகள் அல்லது குற்றங்கள்
எவையும் புகமுடியாது
என் சொல்லை
நீங்கள் முழுமையாக நம்பலாம்
மாவுராயன் (கா. ச. 4:76)

திணை - மருதம்

துறை - அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவியான் தாய் போல் கழறித் தழீஇக் கோடல்

★ மாற்றாளின் கண்ணில் செந்நிறம் 292

அவளிதழின் செந்நிறம்
நேற்றிரவு
காதலனிதழால் அழிக்கப்பட்டுவிட்டது
அச்செந்நிறம் இன்று காலையில்
மாற்றாளின்கண்களில் குடியேறி விட்டது
தாமோயரன் (கா. ச. 2:6)

திணை - மருதம்

துறை - நாணு நெஞ்சலைப்பத் தலைமகளின் பரத்தமையைத் தோழி தன்னுள் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நிலவும் சான்ரேரும் 293

தோழி!
நல்லவர்கள் மிகுந்த சினம் கொண்டாலும்
அவர்கள் வாயில் மறந்தும் தீச்சொல் அல்லது இழிச்சொல் வராது
நிலவை இராகு விழுங்கும் போதுகூட
அமுத வொளியைத்தானே நிலவு பொழிந்து
கொண்டிருக்கிறது. அவன்திவம்ம (கா. ச 4: 19)

திணை – மருதம்
துறை - பகுதியின் நீங்கிய தகுதிக் கூற்று.

ஏனையோரைப் போலாது நற்குடிப் பிறந்தார்க்குரிய இயல்பின்படி, எஞ்ஞான்றும் இனியவை பேசும் தலைமகளின் பேச்சு தகுதிக் கூற்ருயிற்று. இவள் நாவில் எஞ்ஞான்றும் தீச்சொல் அல்லது இழிச் சொல் பயிலாது என்க, ஊடினும் இனிய கூறும் சாயலள் இவள் என்பதை வெளிப்படுத்தும் கூற்று இது.

★ பெருமித நடை 294

களிற்று மருப்பின் முத்துமாலைகளால்
ஒப்பனை செய்யப்பட்ட வேட்டுவனின் காமக்
கிழத்தியர் பலர்
ஒய்யாரமாக அழகுபொலிய நின்றிருக்கிருர்கள்
அவர்களின் நடுவே
வேட்டுவனின் மனைவி
வெறும் மயிலிறகு மட்டும் சூடியவளாய்
பெருமிதத்தோடு நடந்து செல்கிருள்
அவ்வளவு பெருமிதத்தோடு
வேட்டுவனுடன் ஏனைய காமக்கிழத்தியரால்
நடந்து செல்ல இயலவில்லை.
போட்டிசன் (கா. ச. 2:73)

திணை - மருதம்
துறை - தலைமகள் பெருமிதம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ காட்டாற்றில் மிதந்த மரம் 295

ஒருசெழிப்பான பசுமரம்
காட்டாற்று வெள்ளக் கவர்ச்சிக்கு இரையாகிப்
பல இடங்களைக் கண்டு வரும் ஆசையில்
மெய்ம்மறந்து மிதந்தது
இறுதியில் காட்டாற்றால் வெறுத்து ஒதுக்கப்பட்டு
கரையில் சேர்ந்தது
கண்டவர் கையில் கிடைத்து
விறகாக எரிக்கப்பட்டு விட்டது
கரையில் ஒதுக்கப்பட்ட போது
வேரிருந்தும் வேரூன்ற முடியாமல்
உலர்ந்து போய்விட்டது
அன்புக்குரிய தோழனே!
உன் நெஞ்சமும் இவ்வாறு
பிறமகளிரின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டால்
உன்னிலைமையும் இவ்வாருகுமோ என அஞ்சுகிறேன்

மகாஏவன் (கா. ச. 2:5)

திணை - மருதம்

துறை - அடங்கா ஒழுக்கத்துத் தலைமகனுக்குப் பாங்கன் கூறிய நன்னெறிப் படரும் தொன்னலக்கிளவி

★ நெற்றிப் பொட்டின் குறும்பு 296

இந்தக் குங்குமப்பொட்டு
எத்துணை குறும்பு செய்து விட்டது தெரியுமா?
அவள் நெற்றியிலிருந்து
உங்கள் நெற்றிக்கு ஒட்டிக் கொண்டது
பிறகு உங்கள் நெற்றியிலிருந்து
என் பாதத்தில் ஒட்டிக் கொண்டது
என் காலைத்
தோழி பார்த்து விட்டாள்
எனக்குப் பெரிய
தலை குனிவாய்ப் போய் விட்டது

ஆளன் (கா. ச. 2:79)

திணை - மருதம்

துறை - சீறேலென்று சீறடி பணிதல்—ஊடலுவகைக் கூற்ருகத் தலைமகள் சொல்லியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவரில்லாமல் வாழ முடியாத போது 297

தோழி! அவரில்லாமல் வாழமுடியாத போது
அவர்செய்யும் பிழைகளைப்
பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்
நெருப்பு சில நேரங்களில்
வீட்டை எரித்து விடுகிறது என்பதால்
யாராவது நெருப்பை விரும்பாமல் இருக்கிறார்களா?
நெருப்பைப் பயன்படுத்தாமல் வாழ முடிகிறதா?
ரோகாயெ (கா. ச. 2:63)

திணை - மருதம்

துறை - நன்னெறிப்படரும் தொன்னலக் கிளவியால் ஊடல் தணிவித்துக் கையறு தோழி கண்ணீர் துடைத்தது.

★ தேனீ கொட்டியதா? நம்பமாட்டேன் 298

தேனீ கொட்டியதால்
கீழுதடு சற்று வீங்கிய நிலையில்
எதிரே வந்த வேடனைக் கண்ட அவன் மனைவி
ஊடல் கொண்டு
வேறொரு மரத்தினடியில் போய்
நின்று கொண்டாள். (கா. ச. 7 : 34)
திணை - மருதம்

துறை - புலவி நுணுக்கம்

★ நான் அவரைக் கடிந்து பேச மாட்டேன் 299

அன்னாய்!
அவர் தவறாக நடந்து கொண்டாலும்
அவரைக் கடிந்து கொள்ளவோ
சினம் கொள்ளவோ என்னால் இயலாது
விளையாட்டாகக் கூட
அவர் மீது சினங்கொள்ள
என்னால் முடியவில்லை (கா. ச. 2:95)

திணை - மருதம்

துறை - உறுதிக் காட்டி அறிவு மெய்ந்நிறுத்த தகுதிக் கூற்று. அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி யுமாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ உன் மனம் நீர் நிலை போலிருக்கட்டும் 300

தோழி!
கோடைக் காலத்தில்
நீர்நிலைகளைக் கவனித்திருக்கிறாயா?
சினமுற்ற சான்றோரின் உள்ளம் போல்
உள்ளே குளிர்ந்தும்
மேற்பரப்பு சூடாகவும் காணப்படுகிறது
நீயும் உன் கணவரிடம்
அப்படி நடந்து கொள்வது தான் அறிவுடைமை
விக்ககராயன் (கா. ச. 2:86)

திணை - மருதம்

துறை - ஓம்படைக் கிளவி—தோழி கூற்று.

★ மலர்களின் குற்றம் 301

தேனீ ஏன் எல்லா மலர்களிலும் படிகிறது?
தேன் இல்லாத மலர்களும் இருப்பதால் தான்
அது மலருக்கு மலர் தாவுகிறது
தேனில்லாதது
மலர்களின் குற்றமே தவிர
தாவும் ஈக்களின் குற்றமன்று.
அனுராயன் (கா. ச. 2:59)

திணை - மருதம்

துறை - பேணு ஒழுக்கம் நாணிய தலைமகளை அன்புற்று நகைத்து ஏதுவின் கூறி ஊடல் தணிவித்த பொய் பாராட்டல்.

★ வைதாலும் வாழ்த்தினாலும் நீயே துணை 302

காதல! உன்னைவிட
என்னுயிர் தான் எனக்குப் பெரிது என்று நினைத்து
உன்னோடு வாயாடினேன்
ஆனால் நீயில்லாவிடில்
என்னுயிர் நிலைக்காது
ஆதலால்
நீ என்னை வைதாலும் சினந்தாலும்
நான் உன்னைக்
காதலித்தே ஆக வேண்டியிருக்கிறது. கா. ச. 3: 15)

திணை - மருதம்

துறை - அவர் வயின் விதும்பல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ சினம் ஒளிந்து கொள்கிறது 303

காதலனின்
கள்ளக் காதலிகளின் மேல் தோன்றும் என் சினம்
காதலனைக் கண்டதும்
கள்ளக் காதலனைப் போல்
ஓடி ஒளிந்து கொள்கிறது.

வாலாதித்தன் (கா. ச. 2: 44)

திணை - மருதம்

துறை - அவர்வயின் விதும்பல்

★ ஒத்திகை பார்க்கிறாள் 304

சினம் கொண்ட தலைவி
தலைவன் வரும்போது
எப்படியெல்லாம் கடிந்து பேச வேண்டும்
எப்படி நடந்து கொள்ள வேண்டும்
எப்படி வரவேற்க வேண்டும்
என்றெல்லாம் ஒத்திகை பார்த்து
முடிவு கட்ட முடியாமல்
மனங்குழம்புகிறாள்
அவள் உடல் நடுங்குகிறது. (கா. ச 2:87)

திணை - மருதம்

துறை - துனிகூர் எவ்வம்

★ கல்லாதவர் கூட பாராட்டப் படுகிறார்கள் 305

குறிப்பிட்ட அளவுக்குமேல்
எடையிட முடியாத சிறு துலாக்கோல் கூட
தட்டானால் தூக்கிப் பிடிக்கப்படுகிறது
இதைப் போல்
கல்லாதவர்களும் போதிய அறிவில்லாதவர்களும் கூட
சில நேரங்களில்
பலரால் பாராட்டப் பட்டு விடுகிறார்கள்
உன்னை அவர் பாராட்டி
உன் சொல்லை விரும்பிக் கேட்கலாம்
நான் கேட்க மாட்டேன்

பாவசிலன் (கா. ச. 2:91)

திணை - மருதம்

துறை - வாயில் மறுத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ தோற்றவர் வென்றார் 306

மகளிரிடம் பணிந்து விடுகின்ற கணவன்மார்
மனைவியரால் பெரிதும் விரும்பப்படுகின்றனர்
அவர்களின் காதலில்
இனிமை கூடுகிறது
இப்படியில்லாதவர்களின் காதல் வாழ்வு
இரங்கத் தக்கது. (கா. ச.1: 91)

திணை - மருதம்

துறை - வணங்கிய மொழியான் வணங்கற் கூற்றின் இன்றியமையாமையைத் தோழி தலைமகனுக்கு ஏமுறுகிளவியாகக் கூறியது

★ மறந்தது ஏன்? 307

தேனீயே!
முன்பு மாலதி மலரை யன்றிப்
பிற மலர்களை நாடாதிருந்தாய்
இப்போது மாலதிக் கொடி
பிஞ்சுகளாலும் காய்களாலும் நிரம்பியிருக்கிறது
நீ மாலதியிருக்கும் திசையையே
எட்டிப் பார்க்காமலிருக்கிறாயே
ஏன் மாலதியை மறந்து விட்டாய்?
மாயங்கன் (கா. ச:92)

திணை - மருதம்

துறை - அன்பு தலைப்பிரிந்து தானவட்பிழைத்த நிலையைத் தோழி தனக்குச் சிறைப்புறமாகப் பிறிதின் மேலேற்றிக் கூறுதலைத் தலைமகன் கேட்டல்

★ சினப்பாயா? பொறுப்பாயா? 308

அரையிருளில் அமளி நீத்து
அடக்கமாக வெளியேறும் அவனைச்
சினந்து சீறுவாயா? பொறுப்பாயா?
ஊரெல்லாம் கேட்க உரத்துக் கூவுவாயா?
அப்போது, அனைவரும் ஆழ்ந்துறங்குகின்றனரே.
அந்தராயன் (கா. ச. 1: 26)

திணை – மருதம்

துறை - கைவிடின் அச்சமும் கையறு நிலையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அப்பெண்கள் கொடுத்து வைத்தவர்கள் 309

ஒருவன் பல பெண்களை விரும்புகிருனு?
அப்படியானுல்
அப்பெண்கள் கொடுத்து வைத்தவர்கள்
ஏனெனில்
அவர்கள் அவன் பிரிவால் அழமாட்டார்கள்
நெட்டுயிர்க்கமாட்டார்கள்
வருந்தி உடல் மெலியவும் மாட்டார்கள்.

(கா. ச. 2: 47)

திணை - மருதம்

துறை - தலைமகள் பரத்தையரைப் புகழ்ந்த வஞ்சப் புகழ்ச்சி. தலைமகனுக்கும் தனக்கும் உள்ள உறவு உயிரும் உடம்பு போன்றதாகலின், இருவரின் இன்ப துன்பங்களில் வேறு எவரும் பங்கு கொள்ள அறவே இயலாது என்பதை வெளிப்படுத்திய கூற்று.

★ நாணத்தகுவன எவற்றையும் செய்யமாட்டார் 310

தோழி!
இறக்கும் தறுவாயில் ஊர்த்தலைவர்
தன் மகனைப் பார்த்து
என் பெயர் நிலைத்திருக்கும் வகையில்
நீ எவ்வகையான பழி தரத்தக்க
செயலும் செய்யலாகாது
புகழ் தரத்தக்க செயல்களையே
செய்தல் வேண்டும்
மறந்தும் நாணத்தகும்
செயல்களைச் செய்து விடாதே
என்று கூறியிருக்கிருர்
ஆதலால், ஊர்த்தலைவன் இல்லத்து மருமகளான
உனக்குப் பெருமை மிகும்
அவர் உங்கள் மீது
மிகுந்த அன்புடையராக இருப்பார்
பிற மகளிரை விரும்பும் போக்கு மாறிவிடும்
கலங்காதிரு. (கா. ச. 7 : 32)

திணை - மருதம்

துறை - கையறு தோழி கண்ணீர் துடைத்து மொழிந்த ஏமுறு கிளவி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ என் வாயே என் வாழ்வைக் கெடுத்தது 311

தோழி!
சிறிய ஊடலைப் பெரிதாக்கி விட்டேன்
பொறுமைச் சினத்தால்
அவரைக் காணவும் மறுத்தேன்
அவர் எதிரில் வந்த போது
சுடு சொற்களை அள்ளி வீசினேன்
அவர் காதை மூடிக் கொண்டு போய் விட்டார்
நான் கதவைச் சாத்திக் கொண்டு அழுகிறேன்
இனி அவர் முகத்தில் எப்படி விழிப்பது?
என் வாயே
என் வாழ்வைக் கெடுத்து விட்டது. (கா. ச. 6: 22)

திணை – மருதம்

துறை - புலவிமுதிர்ச்சியால் இகந்தமை சாற்றி இகழ்ந்ததற்கு இரங்கல்.
தலைமகனது காதற் சோர்வான் தலைமகளிடத்துத் தோன்றிய அன்பு தலைப்பிரிந்த கிளவி, புலவியை முதிரச் செய்து தலைமகன் நீங்கவே துனிகூர் எவ்வமாயிற்று.

★ மரகதத்தின் விலை மதிப்பு 312

பச்சை மணிக்கல்லே!
நீ எள்ளின் அளவாகக்
குறைக்கப்படும் வரையில்
உன் விலை மதிப்பு மிகாது
வினைத்திறம் பெறாத வயிர வினைஞர்களால்
நீ பட்டைத் தீட்டப்பட்டாலும்
உன் விலை மதிப்பு மிகாது. (கா. ச. 7 : 27)

திணை - மருதம்

துறை - நன்னெறிப் படரும் தொன்னலக் கிளவி.
பிரிவிடை மெலிந்த தலைமகளை நோக்கி, நின் மெலிவும் துன்பமும் நினக்கு நன்மையே பயக்கும் என பச்சைக்கல்லின் மேலேற்றிக் கூறியவாறு வினைத்திறம் பெற்ற வயிர வினைஞரால் தீட்டப் படுவதாவது, குடிவரவாலும், அறிவு கொளுத்தப் படுதலாலும் தலைமகள் பண்புடையளாதல். விலை மதிப்பு மிகுதல் என்பது கற்பாலும் பண்பாலும் தொழப்படும் தகைமை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ செவிடராய்க் குருடராய்ப் பிறக்கவேண்டும் 313

இவ்வுலகில்
செவிடராய்க் குருடராய்ப் பிறந்தவர்களே
கொடுத்து வைத்தவர்கள்
கொடியவரின் தீச்சொற்களையும்
இழிமொழிகளையும் கேட்க வேண்டியிராது
அற்பத்தனம் மிகுந்தவரின்
செல்வச் செருக்கையும்
அவர் செய்யும் கொடுமைகளையும்
காண வேண்டியிராது. (கா. ச. 7 : 95)

திணை - மருதம்

துறை - தலைமகனின் பேணு ஒழுக்கம் கண்டு தலைமகள் நாணிய கூற்று.

★ அவரிடம் ஒன்றும் சொல்லாதே 314

தோழி! அவரிடம் ஒன்றும் சொல்லாதே
அவர் மறதியால்
என்னை வேறொருத்தியின் பெயரிட்டழைக்கிறார்
அதனால் தவறொன்றும் இல்லை
அவர்
தான் விரும்பிய அந்த ஒருத்தியின் மீதாவது
ஆழ்ந்த நிலைத்த காதல் கொள்ளட்டும்,
(கா. ச. 2: 31)

திணை - மருதம்

துறை - கொடியோர் கொடுமை சுடுமென ஓடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகை இ பகுதியின் நீங்கிய தகுதிக் கூற்று.

★ அக்கறை உள்ளவர் போல் கேட்கிறீர்! 315

ஏன் பசந்து மெலிந்து விட்டாய் என்று
அக்கறை உள்ளவர் போல் கேட்கின்றீர்
கோடையில்
நான் மெலிந்துதான் இருப்பேன்
இது என் உடலின் இயல்பு. (கா. ச. 7 : 11)

திணை - மருதம்

துறை - பிரிவிடை மெலிந்த தலைமகள் ஊடியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ பரத்தையர்க்குத் தந்த பரிசு 315

உலகில் ஒவ்வொருவரும்
தம்மிடமுள்ள விலைமதிப்பு மிக்க பொருள்களைத்
தன்னால் விரும்பப்பட்ட காதலிக்கு அளிப்பர்
ஆனால், தாங்களோ
தங்களால் விரும்பப்பட்ட பரத்தையர்க்கு
ஏமாற்றத்தையும் வெந்துயரத்தையும்
பரிசளித்திருக்கிறீர்கள். வாகவராயன் (கா. ச. 3:12)

திணை - மருதம்

துறை - பரத்தையர் தலைமகனை நீடு நினைந்துரைத்த கூற்று. இதனால், தலைமகன் காதற்சோர்வாகிய தீயொழுக்கத்தினின்றும் நீங்கித் தலைமகளிடத்து முன்னைப்போல் அன்பினன் ஆயினன் என்பது குறிப்பு.

★ உண்மையன்பின் வெளிப்பாடுகள் 316

திடீர் சீற்றம்
நொடிப் பொழுதில்
சீற்றந் தணிதல்!
வேண்டுமென்றே கடுஞ் சொல் பேசுதல்
பொறுமையால் பொங்கி வருந்துதல்
மகனே!
இவைகளே உண்மையான அன்பின் அடையாளங்கள்
என்பதைத் தெரிந்துகொள் (கா. ச- 7: 75)
திணை - மருதம்

துறை - செவிலி தலைமகனுக்குக் கூறிய ஏமுறு கிளவி. ஏமுறு கிளவியாவது பாதுகாவலான அறிவுரை

★ செல்வச் செருக்கால் சிந்தை திரிந்தார் 317

தோழி! நாம் எளிய இயல்பினர்!
அவரோ ஆரவார வாழ்வினர்
வேறு வழியுண்டோ?
கண்ணீர் வெள்ளத்தைக்
கட்டுப்படுத்திக் கொள்வது எப்படி? (கா. ச. 7:64)
திணை - மருதம்

துறை - தலைமகனின் காதற் சோர்வை தலைமகள் தகுதியான் கூறியது.
காதற் சோர்வாவது காதலியை மறத்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஊர்நாய் போன்ருர் 319

நினைத்ததைப் பெற்றதும்
ஊரில் திரியும் நாய்கள்
ஓடிப் போய் விடுகின்றன
அத்தகைய நாய் போன்ருரின்
நட்பும் வேண்டாம்
அவர்கள் மீது நம்பிக்கையும்
வைத்தலாகாது. தம் எண்ணம்
நிறைவேறும் வரைதான் நம்மைப் புகழ்வர்.
(கா. ச. 7 : 86)

திணை - மருதம்

துறை - வாயிலாக வந்தவனைப் பழித்துத் தலைமகள் தோழியிடம் கூறியது.

★ சேவல்கூவியதும் துணுக்குறுவது ஏன் ? 320

சேவல் கூவியதும்
துணுக்குறுகிறீர் அணைத்துக் கொள்கிறீர்
நீர் இப்பொழுது
வேருெருத்தியின் வீட்டில் இல்லை
இது உம் சொந்த வீடு
(கா, ச. 6: 82)

திணை - மருதம்

துறை - புலவி நுணுக்கம்

★ காதல் ஓர் அறுசுவையுணவு 321

தோழி! கூடிக் கலந்த காதல்
ஓர் அறுசுவையுணவு
பிரிவுத் துன்பம்
உண்டது செரிக்காததால் ஏற்படும் வயிற்று வலி
வயிற்று வலி நீடிக்கக் கூடியதன்று
அது நமக்கு ஒரு பாடம் புகட்டும் ஆசிரியன்
(கா. ச, 7:68)

திணை - மருதம்

துறை - தலைமகனின் கொடுமை சாற்றிய தலைமகளுக்குத் தோழி ஏதுவின் உரைத்தல். ஏதுவின் உரைத்தலாவது தக்க சான்று காட்டி அறிவுரை கூறுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

322

★ உன்னை நினைந்திலேன்

பொய்க்கும் காதல!
நான் உன்னை நினைந்திலேன்
நான் நினைக்க முயன்றாலும் முடியவில்லை
கவிழ்க்கப்பட்ட குடத்தில்
ஒரு துளி நீராவது தங்கி நிற்குமா?
(கா. ச. 7: 54)

திணை - மருதம்

துறை - தலைமகள் ஏதுவின் உரைத்த அன்பு தலைப்பிரிந்த கிளவி

323

★ விளக்கின் குறும்பு

கணவன் மனைவி இருவரும் கொண்ட
கூடல் ஊடல் நிலைகளைக்
கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நிற்கும் விளக்கு
எண்ணெய் தீர்ந்துவிட்டதைக் கூட அறியாமல்
விழி மூடாமல்
எரிந்து கொண்டே இருக்கிறது
(கா. ச. 6:47)

திணை – மருதம்

துறை - ஊடலுவகை

324

★ வழியும் கண்ணீரைத் துடை

பெண்ணே!
உன் அழகிய முகத்தில்
வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொள்
வழியும் கண்ணீரும்
உன் முகத்திற்கு
அழகு கூட்டுகிறது என்று
உன் கணவன் நினைத்துக் கொள்ளப் போகிறான்
கண்ணீரைத் துடைத்த பிறகும்
ஏன் கண்களில் கண்ணீர் துளிக்கிறது
உன் முகத்திற்கு
அழகு தரும் முத்துகள் இவை என்று
உன் கணவன் சொல்லப் போகிறான்.
(கா. ச. 7 : 81)

திணை - மருதம்

துறை - கையறு தோழி கண்ணீர் துடைத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இந்தக்கிளி வேண்டாம் 325

அத்தையே!
இந்தக் கூண்டுக்கிளி
வேண்மாட (அந்தப்புரத்)தில் இனி இருக்கக்கூடாது
அதனை வெளியே கொண்டு போய் விட்டுவிடச்
சொல்லுங்கள்
எங்காவது பறந்து போகட்டும்
அவரும் நானும் கலந்தும் புலந்தும் பேசும் மந்தண
மான (இரகசிய) உரையாடல்களை
ஊரறிய எல்லார் முன்னிலையிலும்
பேசிக் காட்டுகிறது (கா. ச. 6 : 52)

திணை - மருதம்

துறை - ஊடலுவகை

★ கொடுமனத்தவளாகாதே 326

இன்று
ஊடலும் புலவியும்
புதுமையாய்க் காணப்படுகின்றது
கடுஞ்சினத்தவனே! கொடுமனத்தவளாகி விடாத
ஊடல் முதிர்ந்தால்
காதல் முறிந்துவிடும் இது உண்மை (கா. ச. 6: 21)

திணை - மருதம்

துறை - அடங்கா ஒழுக்கத்து அவன் வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டும் ஓம்படைக் கிளவி.
கைவிடின் அச்சம் பெரிதெனத் தலைமகளைச் செவிலி
தெருட்டியது.

★ கனவில் கண்ட கருவூலம் 327

அன்னாய்! இவ்வுலகில் அவருடைய காதல்
இவ்வளவு தாழ்வடைந்து விட்டதே
என்று வருந்துகிறேன்
அவருடைய அன்பு
கனவில் கண்ட கருவூலம் போன்று
தோற்ற மளிக்கிறது
கண் விழித்ததும் மறைந்து விடுகிறது
திணை - மருதம் (கா. ச. 5:23)

துறை - அன்பு தலைப் பிரிந்த கிளவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ மூன்ரும் மாந்தர் 328

தோழி!
நான் யார் பொருட்டுத்
துன்பங்களையும் கவலைகளையும் ஏற்றுக் கொண்டேனே
அவர் இப்பொழுது மூன்ரும் மாந்தராகி விட்டார்
என்னைக் காண்பதுமில்லை பேசுவதுமில்லை
அல்லும் பகலும்
அவருடைய உயர்வுக்கும் பெருமதிப்புக்குமாகப் பாடுபட்டு
அவருடைய பழிகளையெல்லாம் மறைத்துக்
குடும்பத்தின் நன்மதிப்பைக் காத்து வருவதற்கு
இதுவா அவரளிக்கும் பரிசு? (கா. ச. 6:24)

திணை - மருதம்

துறை - கைவிடின் அச்சம்

★ சிறந்தவர்கள் கூட ஒதுக்கப்பட்டு விடுகிருர்கள் 329

மார்பில் கிடந்த
விலை மதிப்புமிக்க அழகிய முத்தாரம்
காதலரின் களிப்புத் தழுவலில் அறுந்து
எங்கோ விழுந்து விட்டது
அறிவாலும் பண்பாலும் நிறைந்து
பாராட்டும் புகழும் பெற்ற தகுதி வாய்ந்தவர்களும்
சிறந்தவர்களும் கூட
சில நேரங்களில் புறக்கணிக்கப்புட்டு விடுகிருர்கள்
(கா. ச. 5:29)

திணை - மருதம்

துறை - புலவி நுணுக்கம்

★ சிலரே அறிவர் 330

காதல் நெருப்பின் இயல்பு கடுமையானது
நயமும் சுவையும் அறியாதாரின் வெற்றுள்ளத்தில்
அது விரைவில் அணைந்து விடுகிறது
நயமும் சுவையும் மென்மையும் அறிவார் உள்ளத்தில்
அது விரைவில் பற்றி எரிந்து
ஒளி விட்டுத் திகழ்கிறது
இதனை ஒரு சிலரே அறிவர் (கா. ச. 5: 30)

திணை - மருதம்

துறை - புலவி நுணுக்கம்-தலைமகள் முன்னிலைப் புறமொழி
யாகத் தலைமகனுக்குக் கூறியது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கரும்பாக இரு 331

தோழி! நீ என்றும் கரும்பாக இருப்பதை
நான் விரும்புகிறேன்
கரும்பும் சான்றோரும் நாவில் இனிப்பர்
நொறுக்கப்பட்டாலும் அரைக்கப்பட்டாலும்
பிழியப்பட்டாலும்
வெளிப்படும் கருப்பஞ்சாறு இனிமை தரும்
துன்புறுத்தப் பட்டாலும்
நல்லவர்களின் கண்ணீர்
காண்போர் உள்ளத்தில்
கனிவை உண்டாக்கும் (கா. ச. 6:41)

திணை - மருதம்

துறை - பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் காட்டும் நன்னெறிப் படர்ந்த தொன்னலக் கிளவி.

தொன்னலக் கிளவியாவது, அறஞ்சார்ந்த நல்லுரையை மேற்கோள் காட்டிக் கூறுதல்.

★ பார்க்காமலிருக்க முடியுமா ? 332

தோழி! அவரைப்பற்றி ஒன்றும் கேட்காமலும்
அவருடைய போக்கைக் கூர்ந்து பார்க்காமலும்
இருக்கச் சொல்கிறாய்
நமக்கு முரணான உலகியல் செய்திகளை
நாம் எப்படிப் பார்க்காமல் ஒதுக்கமுடியும்?
நம் பகைவன் எதிரில் வந்தால்
பார்க்காமல் இருக்க முடியுமா? (கா. ச. 6:14)

திணை - மருதம்

துறை - ஊடல் தணிவிக்கும் தோழியை நோக்கித் தலைமகள் வன்புறை எதிரழிந்து மொழிந்தது.

வன்புறை எதிரழிதலாவது வற்புறுத்திக் கூறும் ஆறுதல் மொழியை மறுத்துக் கூறுவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ காவு கொடுக்க நிறுத்தப்பட்ட எருமைக் கடா 333

அந்த விழா நாளில்
மிகுந்த ஒப்பனை செய்து கொண்டுவந்து
அவனைக் கண்டாள்
அவள் பெயரை மறந்த அவன்
தன் மனைவியின் பெயரால் அவளை அழைத்தான்
அதைக் கேட்டதும்
அவள் செய்து கொண்ட ஒப்பனைகளும் மார்பில் அணிந்த
மலர் மாலையும்
காளி கோவிலில் காவு கொடுப்பதற்காகக்
கொணர்ந்து நிறுத்தப்பட்ட
எருமைக் கடாவின் கழுத்திலணிந்த மலர் மாலை
போலவும்
அந்த எருமைக்குச் செய்யப்பட்டுள்ள ஒப்பனைகளைப்
போலவும்
அவளுக்குத் தோன்றியது

திணை - மருதம்

துறை - முன்பு தலைமகனால் விரும்பப்பட்ட வேறொருத்
திக்குக் காதற் சோர்வான் தோன்றிய கையறுநிலையும்
மறத்தலும் மயக்கமுமாம்

★ வண்டே! நீ அறிவிலி 334

வண்டே!
நீ ஒரு மண்டு போலும்
அழகிய தாமரை மலர் இருப்பதை நோக்காமல்
பழுத்த விளாம்பழத்தின் மணத்துக்காக ஏங்கி
அங்கு ஏன் போகிறாய்?
அதை உன்னால் தொட்டு உடைக்க முடியுமா?
நீ ஓர் அறிவிலி
ஓவியத்தில் வரையப்பட்டுள்ள
இனிப்புச் சிற்றுண்டியை எடுக்கக்
கை நீட்டி ஏமாந்ததைப் போன்றுள்ளது
உன் செய்கை. (கா. ச. 5 : 41)

திணை - மருதம்

துறை - தலைமகனின் பேணா ஒழுக்கத்தைப் பாங்கன் பிறிது
மொழிதலாக இடித்துரைத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ போர்க் களிறு 335

தோழி! அரசனின் போர்க்களிற்றைப் பார்த்திருக்கிருயா?
அதனுடம்பில் புழுதி படிந்திருக்கிறது
சேறு படிந்திருக்கிறது
வெறும் புல்லும் தழைகளும் உண்கிறது
என்ருலும் தன் பருத்த வடிவத்திற்கேற்பத்
தன் பெருமையை முழங்கிக் காட்டும் போர் முரசைப்போல்
பகைவர் அஞ்சி நடுங்குமாறு
பிளிறும் ஆற்றலை இயல்பாகப் பெற்றிருக்கிறது
(கா. ச. 6:26)

திணை - மருதம்

துறை - ஊடல் தவிராத தலைமகளைத் தோழி தணிவிக்கவும் தணியாளாய் எதிரழிந்து கூறியது.

★ உன் பெருமை உயரும் 336

பண்பின் பெட்டகமே!
நற்பேறில்லாதவள் என்று வருந்தாதே
உன்னை வெறுப்பவனுடைய பொருமை
உன் பெருமையை உயர்த்தும்
நான் இதை நன்கறிவேன்
உன் இரங்கத்தக்க காதலைக் கண்டு
மற்றவர்களைப் போல் பழிக்கவில்லை
பெருமைப்படுகிறேன். (கா. ச. 6:10

திணை - மருதம்

துறை - கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

★ என்ன ஆகும்? 337

நாகரிகம் தெரியாதவளே!
உன்னிடம் பணிந்து விட்ட கணவனை
ஏன் அன்பு ஒழுகப் பேசி அணையாமலிருக்கிருய்?
ஊடலின் முடிவு
கூடலாகாவிடின் என்ன ஆகும்?
உன் வாழ்வே சீர்குலைந்து விடுமே!
(கா. ச. 4: 9८)

திணை - மருதம்

துறை - ஊடல் தணிவிக்கும் தோழியின் கூற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ எவ்வாறு சினந் தணிப்போம் 338

தோழி? என்னிடம் என்னையறியாமல்
ஒரு சமயம் ஏதேனும் குறைபாடுகளிருந்தால்
அதன் கரணியமாக அவர் ஊடல் கொண்டிருந்தால்
அவருடைய சினத்தை
நான் விரைந்து தணித்து விடுவேன்
அவர் என்னை விரும்பாமலிருந்தால்
அவர் சினத்தை எவ்வாறு தணிப்பேன்? (கா. க. 5:80)

திணை - மருதம்

துறை - அன்பு தலைப்பிரிந்த கிளவி

★ சினங்கொள்வதை ஒத்திப்போடு 339

பொன் மேனியளே!
நகை முகம் காட்டு; மகிழ்ச்சி கொள்
சினங்கொள்வதை
மற்றொரு நாளைக்கு ஒத்திப் போட்டுவிடு
பொங்கிவந்த பெருநிலவு
இன்னும் சிறிது நேரத்தில்
வான எல்லையைக் கடந்து மறைந்து விடும்
ஊடலைத் தவிர் (கா.ச. 5:66)

திணை - மருதம்

துறை - புலவி நுணுக்கம்

★ வேறு யாரையோ பார்ப்பது போல் பார்க்கிறார் 340

அத்தையீர்! அவர் என்னை
வேறு யாரோ ஒரு பெண்ணைப்
பொதுவாகப்பார்ப்பது போல் பார்க்கிறார்
அந்தப் பார்வையில்
அன்பும் இல்லை; ஆர்வமும் இல்லை
விருப்பும் இல்லை; வெறுப்பும் இல்லை
என் உடல் மெலியாமல்
என்ன செய்யும்? (கா. ச. 6:6)

திணை - மருதம்

துறை - அன்பு தலைப்பிரிந்த கிளவி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நடந்து சென்றவளை எடுத்துச் சென்றார்களாமே! 341

தலைவ!
உன்னைக் காண்பதற்கென்றே தவமிருந்த அவள்
உன் குரல் கேட்டுச்
சில அடிகள் எடுத்து வைத்து நடந்து வந்தாள்
நீ அவளைக் காணாது கடந்து போனதும்
அவள் அங்கேயே மயங்கி வீழ்ந்து விட்டதால்
அவளைப்பிற பெண்டிர் எடுத்துச் சென்று
வீடு சேர்க்க வேண்டி வந்ததாமே!
உண்மையா? (கா. ச. 6:5)

திணை - மருதம்

துறை - இகந்தமை சாற்றல்—குற்றிசை—தலைமகளின் பொருட்டு வாயிலாகத் தானே வந்த பாங்கன் கூற்று.

★ நான் உங்களை ஐயுறுகிறேன் 342

தாங்கள்
என்னுள்ளத்தில் உறைகின்றீர்கள் என்பதில் ஐயமில்லை
என்னைத் தாங்கள் என்றும் சினந்ததில்லை
நான்
மிகுந்த அன்பும் பொறுமையும் உள்ளவள் என்று
தாங்களே சொல்லியிருக்கிறீர்கள்
அந்தப் பொறுமையின் எல்லையை
நான் கடக்கும்படி
உங்கள் இளமைத் துடிப்பின்
கட்டுமீறிய நடத்தை இருக்கலாமா?
நான் உங்களை ஐயுறுகிறேன். (கா. ச. 6:8)

திணை - மருதம்

துறை - தலைமகனின் பேணா ஒழுக்கத்திற்கு நாணிய தலைமகள் அவனை நோக்கியுரைத்த செங்கடு மொழி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவளுக்கு இணையாகாதவர்கள் இறந்தாபோவர்? 343

தோழி!
அவளுக்கு அழகும் பண்பும்
மிகுதி என்று சொல்லுகிறுர்கள்
இருக்கட்டுமே
என்னிடம் அத்துணை உயர்ந்த பண்புகள் இல்லை என்பதும்
அறிவேன்
அவளுக்கு இணையாகாதவர்களெல்லாம்
இறந்தாபோவார்கள்! (கா. ச. 6:11)

திணை - மருதம்

துறை - பரத்தை தலைமகளை நெருங்கச் சொல்லியது. நெருங்கச் சொல்லுதலாவது தன்னை மேம்படுத்திப் பிறரைத் தாழ்த்திக் கூறுதல்.

★ ஓசையே கேட்கவில்லை 344

மாமி!
காதல் மரம் தன்மான வேரூன்றி
நிலைத்த அன்புக் கிளைகளால் தழைத்துச்
செழித்து வளர்கிறது
அதனுல் தான் போலும்
அது விழுந்த போது ஓசையே கேட்கவில்லை
சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச. 5:31)

திணை - மருதம்

துறை - தலைமகன் சிறைப் புறத்தானுகத் தோழி அம்மாமியிடம் உலகியல் உரைப்பாள் போல் இகந்தமை இயம்பியது. காதல் மரம் என்பது பிரிவுக்கு முன்பு தலைமகள் செழித்திருந்த நிலைமை. தன்மான வேர் என்பது தலைமகளின் நற்குடிப் பிறப்பும் உயர் பண்புகளும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவர் கிடைக்க மாட்டார் சாவு கிடைக்கும் 345

அறிவிலா நெஞ்சே!
மற்றொருத்தியின் உள்ளத்தில் இருக்கும் அவரை
ஏன் நினைந்து வருந்துகிறாய்?
இப்படியே நீ ஏங்கிக் கொண்டிருந்தால்
அவருக்கு மாற்றாக
வேறொன்று உனக்கு உறுதியாகக் கிடைக்கும்
அதன் பெயர் சாவு
அவர் உனக்குக் கிடைக்குமுன்
அதுதான் எளிதில் கிடைப்பதாயிருக்கும்
திணை - மருதம் (கா. ச. 6:9)

துறை - நெஞ்சொடு புலத்தல்

★ வளையல்கள் தாமாகப் பெரிதாகின்றனவா? 346

தோழி!
நான் நல்லவண்ணம் தான்
பொறுமையாகக் கேட்கிறேன்
காதலர் பிரிந்து செல்லும் போது
மனைவியின் வளையல்கள்
தாமாகவே பெரிதாகி விடுகின்றனவா?
பின்னே ஏன் கழன்று விழுகின்றன ?

திணை - மருதம் (கா. ச. 5 53)

துறை - தலைமகன் கேட்ப தோழிக்குக் குறிப்பான்
கூறியது

★ இப்போது தொடவும் தயங்குகிறார் 347

அப்போதெல்லாம்
நான் நெய்யின் நிறம் விளங்க
மிகுதியாக மஞ்சள் பூசி
ஓரிடத்தமர்ந்து ஒதுங்கியிருக்க வேண்டிய காலத்திலும்
ஆராக் காதலால் ஆசை மொழிகளை
உதிர்த்துக் கொண்டிருந்தீர்
இன்று
நான் நன்கு ஒப்பனை செய்து கொண்டிருக்கும் போது
தொடவும் தயங்குகிறீர்

திணை - மருதம் (கா. ச 6:19)

துறை - அருமைக் காலத்துப் பெருமைக் காட்டிய
எளிமைக் காலத்து இரக்கக் கிளவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

348

★ ஆம்! புதியவர் தான்! பகைவர்தான்!

அன்பே! என் மேல்
ஏன் இவ்வளவு சினங் கொள்கிருய்!
நான் என்ன புதியவனு அல்லது பகைவனு?
என்கின்றீர்.
ஆம்! நீங்கள் புதியவர்தான்
ஏனெனில்
உங்களிடம் இப்போது காணப்படும் குறைபாடுகள்
புதியன
நீங்கள் பகைவர்தான்
ஏனெனில்
நீங்கள் புரிந்து வரும் குற்றங்கள் புதியன
பகைமை உண்டாக்குவன

குவிந்தன் (கா. ச. 4: 84)

திணை - மருதம்
துறை - புலவி நுணுக்கம்

349

★ நெஞ்சே எரிந்து போ

நெஞ்சே!
துயர நெருப்புப் புகைவதால்
பற்றி எரிகிருயா? எரிந்து போ!
உள்ளக் குமுறல் தாங்காமல்
கொதிக்கிருயா? கொதித்து போ
ஏமாற்றங்கள் என்னும்
சம்மட்டி அடிகளைத் தாங்க முடியாமல்
உடைகிருயா? தூள் தூளாக உடைந்து போ
உன் மேல் சிறிதும் அன்பில்லாத அவரை
நினைத்ததற்கான தண்டனைகளை
நன்ருக ஏற்றுக் கொள்

சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச. 5: 1)

திணை - மருதம்
துறை – நெஞ்சோடு புலத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ நீ யாரைச் சினந்தாய்? 350

அவர் பணிந்த போது நீ மதிக்கவில்லை
அவர் அன்பாகப் பேசிய போது
நீ ஆத்திரமாகப் பேசினாய்
அவர் இன்சொல் பெசிய போது நீ கடுஞ்சொல் வீசினாய்
அவர் உன்னை விட்டுப் புறப்பட்ட போதும்
நீ தடுக்கவில்லை
இப்போது நீ தனித்திருந்து வருந்துகிறாய்
இப்பொழுதாவது சொல்
நீ யாரைச் சினந்தாய்?
உன் சினம்
இப்போது யாரைத் தாக்கியிருக்கிறது?

(கா. ச. 5: 32)

திணை - மருதம்

துறை - இகழ்ந்ததற் இரங்கல்- தோழியின் கூற்று

★ எப்படி அன்பு செலுத்த முடியும்? 351

அருளில்லாதவனே!
அவள் எப்படி உன் மீது அன்பு செலுத்த முடியும்?
அவளோ
நாள்தோறும் உன்னையே நினைந்து போற்றி வந்தாள்
நீ அவளை மணக்கவில்லை
அதுமட்டுமன்று
வேறொருத்தியின் பெயரை
அவளுக்கிட்டு அழைப்பதை அவள் எப்படிப் பொறுத்துக்
கொள்வாள்?

(கா. ச. 5:52)

திணை - மருதம்

துறை - அவள் நிலையுரைத்துத் தலைமகனைப் பாங்கன் தெருட்டியது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெய்தல் திணை

கடுக்கும் என் நெஞ்சம்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இரங்கல் நறுநெய்தல்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெய்தல்

★ துன்பத்தில் துணையானள் 352

வீடே விழாக்கோலம் பூண்டிருக்கிறது. மாவிலைத் தொங்கல்களும் கமுகுப்பாளையும் தென்னங் குலைகளும் தொங்கும் பசுமையான பந்தலும், பட்டாடை உடுத்து முத்தும் மணியும் பதித்த அணிகலன்களைப் பூண்டு பகட்டாக வரும் விருந்தினரும், பாட்டும் இன்னியமும், அவ் வீட்டின் விழாவை ஊராருக்கெல்லாம் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆனல் ஒரேஒரு குறை எல்லாருடைய கண்ணிலும் படுகிறது. அந்த வீட்டின் தலைவி எங்கே? காணேமே! விழா ஆரவாரத்தில் அவளிருக்கும் இடமே தெரியவில்லை. அவள் விழாவில் முதன்மையிடம் பெற வேண்டியவள். பிறரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வீட்டின் ஒரு புறத்தில் ஒதுங்கியிருக்கிருள். என்ன கரணியம்?

பக்கத்து வீட்டுக்காரி, அவள் கணவன் தொலைநாட்டிற்குச்
சென்று
இன்னும் திரும்பி வராததால்
வாடிக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருக்கிருள்
அவள் இவளுக்கு உயிர்த்தோழி
தன் தோழி வருத்த முற்றிருக்கும்போது

தான் மட்டும் விழாக் கொண்டாட விருப்பமில்லாமல்
ஒதுங்கியிருக்கிருள்
தன் தோழிக்குத்
துன்பத்தில் துணையாகி விட்டாள்

இரவிராய (கா. ச : 38)

திணை - நெய்தல்

துறை - பரிவுற்று மெலிதல் - தோழியின் கூற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கண்டவர் நகைக்கின்றனர் 353

நானும் அவரும் சந்தித்தோம்
அவர் சிரித்தார் நானும் சிரித்தேன்
இப்படிப்
பலநாள் சிரித்துக் கொண்டே இருந்தோம்
அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை
அவர் என்னை ஏமாற்றி விட்டுப் போய்விட்டார்
எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை
இதயமில்லாதவனைக் காதலித்ததால்
உனக்கு இந்த நிலை நேர்ந்தது என்கிறாள் தோழி
இப்போது
என்னைக் காண்போர் அனைவரும் சிரிக்கிறார்கள்.

சாதவாகன மன்னன் ஆளன் (கா. ச : 41)

திணை - நெய்தல்
துறை - தன்மனத்தழுங்கல்

★ வீட்டில் என்ன இருக்கிறது? 354

மனைவி இறந்த பிறகு
வயலிலிருந்து வீடு செல்ல
அவனுக்கு விருப்பமேயில்லை
வீட்டில் என்ன இருக்கிறது
என்கிறான் அவன் ! (கா. ச. 2:69)
திணை - நெய்தல்
துறை - தபுதார நிலை.

★ மூதாளனும் முற்றிய கதிரும் 355

நெற்கதிர்
முற்றி வளைந்து தொங்கிய வாறே
பனிநீர் (கண்ணீர்) உதிர்க்கிறது
இனி களத்தைச் சந்திக்க வேண்டிவருமே
என்ற ஏக்கத்தால் கண் கலங்குகிறது
நரைத்துத் திரைத்து
மூத்துப்போய் விட்ட மூதாளனும்
துயரத்தால் தலை தொங்கிய நிலையில்
காலனைச் சந்திக்க வேண்டி வருமே
என்று ஏங்குகிறான் (கா. ச. 6;68)

திணை - நெய்தல்

துறை - இளமை தீர்திறம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வீழ்ச்சி வந்தது ஏன்? 356

தலைவனின் வீழ்ச்சியும் மறைவும்
நெஞ்சை விட்டகலாத
நெடுந்துன்பக் காட்சிகளாகி விட்டன
யார் வந்து துயரத்தை ஆற்றினாலும்
அது ஆறுதலாகத் தெரியவில்லை
வீழ்ச்சிக்கான கரணியத்தை அறிந்து கொள்ள
அவள் உள்ளம் அவாவுகிறது என்பதைத்
தோழி புரிந்து கொண்டாள்.
ஒருவன் புகழேணியின் கொடுமுடியில் இருக்கும்போது
இரு கரணியங்களால் வீழ்ச்சியடைகிறான்
எடுத்த செயல் முடியுமுன்பே தன் தகுதியை
விளம்பரப்படுத்துவது
பணிமுடிந்தவுடனே
தன் வெற்றியை அறிவித்து விழா கொண்டாடுவது
தோழி இக்கரணியங்களைச் சொன்னபோது
அவளுக்கு இருளில் ஒரு மின்மினி வெளிச்சம் தெரிவதுபோல்
சில உண்மைகள் புலப்பட்டன.

(கா. ச. 3 : 55)

திணை - நெய்தல்

துறை - தொல்லவை உரைத்தல்

★ கிழவி அழுகிறாள் 357

அந்த வேட்டுவக் கிழவி
தன் கணவன் இறந்த நாளை விட அதிகமாக அழுகிறாள்
ஏனெனில்
அந்த வேடன்,
ஊர் நடுவே
வீரத்தின் அடையாளமாக அவள் போற்றி வந்த
அவள் கணவனின் வில்லை
வளைக்கும் போது முறித்து விட்டான்

(கா. ச. 7:63)

திணை - நெய்தல்

துறை - தன் மனத்தழுங்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ உடன்கட்டை ஏறினுள் 358

கணவனிறந்தால்
மனேவியும் தீப்பாய்ந்து இறக்கும்
ஆஞ்சிக்காஞ்சி என்னும் மரபுவழி வந்த வழக்கத்தைப்
போற்றுபவள் அவள்
காண்போர்க்குமயிர்கூச் செறியும்படி
தன் இறந்த கணவனுக்காக மூட்டப்பட்ட தீயில்
கணவனே அணேத்தபடியே
வெந்து சாம்பலாகி விட்டாள்
அவளுடைய மகள்
பின்னும் எரிந்து கொண்டிருந்த தீயை
அணேத்து விட்டாள்

(கா. ச, 5 : 7)

திணே - நெய்தல்

துறை - ஆஞ்சிக்காஞ்சி

★ எப்போது அழப்போகிருய்? 359

கணவன் மறைந்தான்
அவனே நினேத்து
நீ எப்போது ஒப்பாரிவைத்து அழப்போகிருய்?
துயரம் உன் தொண்டையை அடைக்கும்போது
ஒரு சொல்லும் முழுமையாக வெளிவராதே
விக்கலும் விம்மலும்தான் வரும் !

(கா. ச. 4 : 33)

திணே - நெய்தல்

துறை - தாபதநிலே

★ யாரிடம் சொல்வேன் 360

எனக்கு உற்றவராக
நம்பிக்கைக்குரியவராக யாரைத் தெரிந்தெடுப்பது?
இவ்வூரில்
அனேவரும் தாழ்ந்த இயல்பினர்
என் இன்ப துன்பங்களே
யாரிடம் சொல்ல முடியும் ?

மேகநாதன் (கா. ச. 2:64)

திணே - நெய்தல்

துறை - தன் மனத்தழுங்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இறந்தாலும் வாழ்பவரே! 361

ஆணாயினும் பெண்ணாயினும்
உண்மையான காதலன்பு
வளரப் பெற்றவர்
இறந்தாலும் வாழ்பவரே
அப்படியில்லாமல்
தன் காதல்துணை இறந்த பின்னும் வாழ்பவர்
இருந்தாலும் இறந்தவரே

வட்டரங்கன் (கா; ச. 2 ; 42)

திணை - நெய்தல்

துறை - தலையொடு முடிந்த தலைமகளையெண்ணி தோழி தன்னுள் கூறியது.
தலையொடு முடிதலாவது கணவனொடு மனைவி உடன்கட்டையேறுதல்

★ அவர் இதை அறியவில்லையே! 362

தன் கூண்டைக் காணாத பறவை
திகைப்புற்று வருந்துகிறது
கணவனைக் காணாத அவள் கண்கள்
மயங்கிச் சோர்கின்றன
அவள் உடல் நடுங்குகிறது
அவள் நெஞ்சம்
அவன் ஒருவனுக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறது
உடலுறுப்புகள் பொலிவிழந்து வாடுகின்றன
அவள் உடல் உறுப்புகள் அனைத்தும்
அவனுக்காகப் பரிந்து தாமும் துன்புறுகின்றன.
கணவன் மனைவி
ஈருடல் ஒருயிர் என்றால்
அவரும் துன்புற வேண்டுமல்லவா?
அவர் இதையறியவில்லையே!

முத்தசன் (கா. ச : 39)

திணை - நெய்தல்

துறை - இல்லத்தழுங்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இன்னும் வாழ்நாள் எதற்கு? 363

வீடு வீடாகச் சென்று
பணியாற்றிக்களைத்துப் போன உடம்பு இது
மூப்பு எய்திய காக்கை
இரைதேட முடியாதவாறு போல
ஓரிடத்துக் கிடக்கும் எனக்கு
இன்னும் வாழ்நாள்கள் எதற்காக வேண்டும்?
இந்த உடம்பை வெறுக்கிறேன்

விக்கமராயன் (கா. ச. 2:34)

திணை - நெய்தல்

துறை - வாணுளை முனிந்தது

★ அவர்களைத்தான் உனக்குப் பிடிக்குமா? 364

ஏ! அறிவுள்ள வறுமையே!
நீ அறிவாளிகளையும் பண்பாளர்களையும்
கொடையாளர்களையும்
சிறப்பாக விரும்பிப் போய்ச் சேர்வது ஏன்?
அவர்களைத்தான் உனக்குப் பிடிக்குமா?
இழிந்தவர்களின் தொடர்பை
நீ கூட வெறுக்கிருயா? (கா. ச. 7:73)

திணை - நெய்தல்

துறை - இகந்தமை சாற்றி இரங்கல்
வறுமைமேலேற்றி இழிந்தாரின் நட்பை இகழ்ந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைக்கிளை

எற்றென்னை உற்ற துயர்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கைக்கிளை என்பது ஒருதலைக் காமம்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைக்கிளை

★ ஆயமகள் 365

ஆயமகளிர் உடனாடும் கூத்தில்
ஒருத்தி
தன் அருகிலாடும் இளையாளின் கன்னத்தில்
கண்ணனின் உருத்தோற்றம் கண்டு
அவள் ஆட்டத்தைப் பாராட்டுவது போன்று
அடுக்கடுக்காக முத்தமிட்டாள்

குவரன் (கா. ச. 2:14)

திணை - கைக்கிளை

துறை - நோக்குவை எல்லாம் அவையே போறல்—நயப்புற்றிரங்கலுமாம்.

★ தும்பைப் பூட்டச் சொன்னால் அவிழ்க்கிறான் 366

அந்த இளைஞன்
வயல் வழியாகத் தம் கணவன்மார்க்கு
உணவு எடுத்துச் செல்லும் இளமகளிரைப் பார்த்த
மயக்கில்
ஏரில் எருதுகளைப் பூட்டத் தொடங்கிய தும்பை
நினைவில்லாமல் அவிழ்த்து விடுகிறான்.

(கா. ச. 7:92)

திணை - கைக்கிளை

துறை - ஏமஞ்சாலா இடும்பை எய்தல்

★ ஏழையின் கனா 367

ஏழையின் கனவு நிறைவேறாதது போல
நீ அவள்மீது வீசிய பார்வை
காதலாகக் கனியாததால்
பயன் விளைக்காத தாயிற்று (கா. ச. 7:10)

திணை - கைக்கிளை

துறை - பயனில் காட்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இந்த ஊரில் ஒரே இளைஞன்தான் இருக்கிறனு 368

மாமி!
இந்த ஊரில்
அந்த ஒரே இளைஞன்தான் இருக்கிறனு?
இவ்வூர்ப் பெண்களின் பேச்சு
அவன் பெயரில் தொடங்கி
அவன் பெயரிலேயே முடிகின்றனவே

திணை - கைக்கிளை (கா. ச. 7 : 48)

துறை - வேட்கை செப்பல்

★ என் ஆசை ஓவியங்களை ஊழ் அழித்துவிட்டது 369

நான் மனத்திரையில் தீட்டிப் பார்த்த
நீண்ட ஆசை ஓவியங்களை
என் நம்பிக்கை என்னும் தூரிகைகளால்
தெளிவாகவும் பொலிவாகவும் வரைந்திருந்தேன்
அந்த அழகிய ஓவியங்களை
என் நம்பிக்கைத் தூரிகைகளாலேயே
ஊழ் என்னும் குழந்தை
மறைவாகச் சிரித்தபடி அழித்து விட்டு
மீண்டும் சிரிக்கிறது

திணை - கைக்கிளை (கா. ச. 7 : 66)

துறை - ஆக்கஞ் செப்பல்

★ எட்டிப் பார்த்தும் தெரியவில்லை 370

அவளால் விரும்பப்பட்டவன்
தெருவில் வருகிறன் எனக் கேள்விப்பட்டு
வீட்டின் சுற்று மதிலருகில்
ஓடோடி வந்தாள்
காற்பெரு விரலூன்றி எழும்பி நின்று
கைப்பிடியில் கொங்கை தோய எட்டிப்பார்த்தும்
அவன் கண்ணுக்குத் தெரியவில்லை என்றல்
அவள் என்ன செய்வாள்?

திணை - கைக்கிளை (கா. ச. 3 : 21)

துறை - நாணுவரையிறத்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இத்துயரம் இன்னும் எத்துணைக் காலத்திற்கு? 371

என் நினைவில் தோன்றும்
உன் அழகிய முகத்தின் காட்சி
இன்னும் எத்துணைக் காலம்வரை
என்னை இத்துயரத்தில் நீடித்திருக்கச் செய்கிறதோ
தெரியவில்லை?

திணை - கைக்கிளை விசமசேனன் (கா. ச. 4 : 39)

துறை - வெளிப்பட இரத்தல்

★ காமனே உன்னை வேண்டுகிறேன் 372

காமனே!
மறு பிறப்பிலும் என் உயிரை
உன் திருவடியில் வைத்து வழிபடுவேன்
எனக்குச் செய்யும் பேருதவியாக நினைத்து
ஒரே ஒரு செயலை மட்டும் செய்வாயா?
என் மேல் எய்யும் மலரம்புகளை
அவர் மேலும் ஏவ மாட்டாயா?

திணை - கைக்கிளை (கா. ச. 5: 41)

துறை - புணரா இரக்கம்

★ எட்டாத தொலைவில் இருக்கிறாய் 373

நிலவைப்போல்
நீ எட்டாத தொலைவில்
எனக்குக் கிட்டாத நிலையில் இருக்கிறாய்
நிலவின் கதிர்கள்
தொடும்போது மகிழ்ச்சியுண்டாகிறது
உன் அழகின் வீச்சு
என் கண்களில்படும்போது
அளவற்ற மகிழ்ச்சியுண்டாகிறது
எல்லாக் கலைகளுக்கும் உறைவிடமாய்
எட்டாத உயரத்தில் நிலவு விளங்குகிறது
நீயும் அவ்வாறே இருக்கிறாய்

திணை - கைக்கிளை ராயரசியன் (கா. ச. 5 : 21)

துறை - வேட்கை செப்பல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ அவளைக் கண்டு பேசாததேன்? 374

உன்னை உறுத்து நோக்கிக் கொண்டிருந்த
அவளுடைய கண்களில்
உள்ளூரச் சுரந்த துயரக் கண்ணீரால்
அவள் கண்கள் புல்லென்று பொலிவிழந்தன
இளைஞனே!
நீ அவளைக் கண்டு ஏன் பேசவில்லை?

திணை - கைக்கிளை (கா. ச. 4 : 71)

துறை - மறைந்தவற் காண்டல்

★ பூவிலைப்பெண்டே! பூவின் விலை என்ன? 375

பூக்காரியின் அழகை
அனைவரும் கண்ணுற்் பருகுகின்றனர்
அவளுடைய நகிற்பெருக்கத்தையும்
இடையின் சிறுமையையும் காணவிரும்பியோர்
வேண்டுமென்றே அவளிடம் வந்து
மீண்டும் மீண்டும் பூவிலை கேட்கின்றனர்.

திணை – கைக்கிளை (கா. ச. 6 : 38)

துறை - காட்சி வேட்கை

★ ஏதம் விளைப்பாள் 376

பேதைப் பருவத்திலேயே
இவள் இத்துணைக் கவர்ச்சியாக இருக்கிறாள்
இவள் மங்கைப் பருவம் எய்தும்போது
நச்சு வாழையைப்போல் பொலிந்து
இளைஞர்களுக்கு ஏதம் விளைவிப்பாள்

திணை - கைக்கிளை போசயன் (கா. ச. 5 : 10)

துறை – ஏமஞ்சாலா இடும்பை

★ நெஞ்சே ஏன்! வீணாக வருந்துகிறாய்? 377

நெஞ்சே!
நீயே அவரை விரும்பினாய்
அவர் விரும்புகிறாரா என்று அறியாமல்
உன் நெஞ்சை அவரிடம் போக்கி
ஏன் வீணாக வருந்துகிறாய்?

திணை - கைக்கிளை (கா. ச. 4 : 45)

துறை - நீடு நினைந்திரங்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ வாமனனும் நெடுமாலும் 378

கண்ணன்
(வாமனனாக) குறளனாகச் சிறு வடிவத்தில் தோன்றி
மதுவென்னும் அரக்கனையும்
விண்ணும் மண்ணும் அளந்த நெடுமாலாக
உயர்ந்து தோன்றி
மாவலி மன்னனையும் கொன்றான்
அதுபோல
இவள் கொங்கை முதலில் சிறிதாக இருந்து
இப்போது பெரிதாக வளர்ந்திருக்கிறது?

திணை - கைக்கிளை (கா. ச. 5: 25)

துறை - ஆக்கஞ் செப்பல்

★ கொடியவனின் அன்பு 379

வன்னெஞ்சக் கொடியவன்
அருகில் வந்தான்
அன்பு மொழிகளால் என்னைப் பாராட்டினான்
எனக்கு மிகுந்த அச்சம் தோன்றியது
வழிப்போக்கரை
மரங்களிடையில் ஒளிந்திருந்த கள்வர்
திடுமென வெளிப்பட்டு
எதிர்மறிப்பது போன்ற காட்சி
என்னுள்ளத்தில் தோன்றியது
இச்சூழலில்
யாருக்குத்தான் அச்சம் தோன்றாமலிருக்கும்!
நல்லவேளையாக
என் உறவினர் அங்கு வரவே
அவன் ஓடிப்போய் விட்டான்

திணை - கைக்கிளை (கா. ச. 6 : 36)

துறை - சொல்லெதிர் பெறான் சொல்லியின்புறல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருந்திணை

சீ! என்ன செய்கை இது?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ இலக்குவனைப் பார் 880

கணவனுடன் பிறந்த கொழுந்தன்
கணவனில்லாத நேரத்தில்
தகாத பார்வை பார்க்கிறான்
குலக் கொடியான அவளின் உள்ளமும் உடலும் கூசுகிறது
அஞ்சி நடுங்குகிறாள்
வெளியில் சொன்னாலும்
குடும்பம் கொலைக்களமாகி விடும்
உள்ளுக்குள்ளே
மறைத்துக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சியும் அன்று இது!
அவளுக்கு ஒரு நல்ல உளவு தோன்றியது
மாளிகை போன்ற பெரிய தன் வளமனையின் சுவர்களில்
இராமாயணக் கதை ஓவியமாக வரையப்பட்டிருந்தது
கொழுந்தனை அழைத்து
இராமாயண ஓவியத்தில் இலக்குவனைக் காட்டினாள்
இலக்குவன் கதையை
விரிவாக எடுத்துரைத்தாள்
இலக்குவன் தன் அண்ணியான சீதையைத்
தாயாகக் கருதினான்
நான் உன் தாய்
நீ என் மகன் என்றுரைத்தாள்
கொழுந்தன் நல்லவனாகி விட்டான்.

(கா. ச. 1:34)

திணை - பெருந்திணை [தலைமகளின் கூற்று]

துறை - கொழுந்தனுக்கு உறுதி காட்டி அறிவு மெய் நிறுத்தற் பொருட்டு ஏதுவின் உரைத்தது பெருந்திணை என்பது பொருந்தா வொழுக்கம். தன் கற்புக்கும் உயர் குடும்பப் பண்பு நலங்கட்கும் தீங்கு நேராத வண்ணம் தற்காத்துக் கொள்ளுதலும் தகை சான்ற சொற் காத்துக் கொள்ளுதலும் இல்லத்தரசிக்கு வேண்டப்படும் இன்றியமையாத பண்புகளாகும். இக்கட்டான காலங்களில் ஒரு பெண் தன்னை எவ்வாறு காத்துக் கொள்கிறாள் என்பதற்கு இப்பாடல் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

381

★ கை நடுங்குகிறது

பருத்தி நிலத்தில்
பொன்னேர் கட்டும் போது
தன்னெஞ்சே தன்னைச் சுடுவதால்
ஒழுக்கந்தவறிய பெண்ணின் கை
கலப்பைக்குக் குங்குமம் இட நடுங்குகிறது.

கயிலன் (கா. ச. 2: 65)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

382

★ பொருந்தாத நோக்கு பொருந்தியது

இரவலன்
தனக்குப் பிச்சையிடும் பெண்ணின் உந்திச் சுழியையும்
இடைவனப்பையும் உற்று நோக்குகிறான்
வாயிற்படியில் உயர நின்று
குனிந்தபடி அவனுக்குச் சோறிடும் அவள்
அவன் முகத்தில் பொலியும்
நிலவொளி போன்ற அமைதியான அழகைப் பருகுகிறாள்
காக்கைகள் வந்து
இருவர் கைகளிலுமுள்ள ஏனத்திலிருக்கும் சோற்றைக்
கொத்திக் கொண்டு போகிறது.

சசிராயன் (கா. ச. 2:62)

திணை - பெருந்திணை

துறை - மிக்க காமத்து மிடல்

383

★ தீயதும் நல்லதாகத் தெரிகிறது

உலகம்
விரும்பக் கூடாததையும்
அமங்கலமானதையும் கூட அவாவுகிறது
மாதவிடாய் காலத்திலும்
பெண்ணின் தோற்றம் பொலிவோடு தானிருக்கிறது
மாந்தக் கண்களுக்குப்
பொல்லாதவை கூட
நல்லவையாகத் தோன்றுவது ஏன்?
அறிவின்மை தான்.

(கா. ச. 5:80)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஊர்த்தலைவன் உற்றுப்பார்க்கிறான் 384

இறந்தவனின் மனைவியர்
உடன் கட்டை ஏறுவதற்காக
அதற்குரிய உடையணிந்து வந்து நிற்கின்றனர்
இந்தத் துயரக் காட்சியைக் கண்ட
அனைவரின் கண்களும் கலங்குகின்றன
ஆனால் உடன் கட்டையேறும் மகளிரின் இளமையையும்
அழகையும்
ஊர்த்தலைவன் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

திணை - பெருந்திணை (கா. ச. 5:49)

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

★ துறவிக்குச் சோறு கிடைக்கவில்லை 385

கரஞ்ச மரக்கிளையை
ஒடித்துக் கொண்டிருக்கும் ஏ! துறவியே!
இந்தப் பெரிய ஊரில்
உனக்குச் சோறு கிடைக்கவில்லை என்கிறாய்
நீ இதுவரை செய்துள்ள
பழி தரத்தக்க குற்றங்களை மறைப்பதற்காக
நீ இத்துறவுக் கோலம் பூண்டிருக்கிறாய் என்பதை
ஊரில் அனைவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்
அதற்கென்ன செய்வது? (கா. ச. 6:53)

திணை - பெருந்திணை

துறை - இளமை தீர்திறம்

★ கரும்பாலைச் செப்பக்காரன் 386

இயந்திரச் செப்பக்காரனே (O'Mechanic)
நீ வேனீர் (பானகம்) வேண்டுமென்கிறாய்
நான் எதிர்பார்த்தது போல்
கரும்பாலை இயந்திரத்தை நன்கு செப்பம் செய்யவில்லை
அது நன்கு இயங்கவில்லை
உனக்குக் காதல் திறமும் தெரியவில்லை
கருப்பஞ்சாறு இல்லாமல்
வெல்லக்கட்டி செய்ய இயலுமா? (கா. ச. 6:54)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம். உழவன் மனைவியின் கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ உன்னைக் காட்டிக் கொடுத்து விடும் 387

பெண்ணே!
கள்ளக் காதலனைத் தேடி
நள்ளிரவில் மெல்ல நடந்து செல்வதைத் தவிர்
நள்ளிருளில் ஏற்றப்படும் சிறு விளக்கு
தொலைவில் இருப்பவர்களுக்குக் கூடத் தெரிந்து விடும்
ஒளி விட்டுத் திகழும்
உன் முகப் பொலிவும் பொன்மேனிக் கட்டழகும்
உன்னைக் காட்டிக் கொடுத்து விடும். (கா. ச. 5:15)

திணை - பெருந்திணை

துறை - இரவுத் தலைச் சேறல்

★ எனக்குத் தெரியாதா மாமி! 388

மாமி! நீ என் கூந்தலில்
மூங்கில் சருகு ஒட்டிக் கொண்டிருக்கிறது
என்று சொல்கிறாய்
உன் முதுகில்
வெண் புழுதி எப்படி வந்தது என்று கேட்க
எனக்குத் தெரியாதா என்ன? (கா. ச. 7:64)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

★ பறவைகள் கை தட்டிச் சிரிக்கின்றன 389

கன்னிப் பெண்
கற்பிழந்தாள் என்பதைக்
காணக் கூசிய பறவைகள்
கூட்டமாக எழுந்து ஓ!ஓ! என ஆரவாரித்து
எள்ளி நகையாடின
கை தட்டிச் சிரிப்பது போல
இறகுகளைப் படபட வென்று
அடித்துக் கொண்டு பறந்தன. (கா. ச. 3:18)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ ஆய்ச்சியர் மறைத்த உறவு 390

கண்ணனுக்குத்
திருமணப் பருவம் வந்ததும்
ஆய்ச்சியர்
தம் உறவை யசோதையிடம் சொல்லாமல்
மறைத்து விட்டார்கள். (கா. ச. 7:55)

திணை - பெருந்திணை

துறை - மிக்க காமத்து மிடல்

★ கணவன் வந்தால் குலைக்கிறது 391

அவள் வளர்த்துள்ள நாய்
கள்ளக் காதலன் வந்தால் வரவேற்கிறது
வாலைக்குழைக்கிறது
அவளுடைய கணவனைக் கண்டால்
குலைக்கிறது கடிக்கப்பாய்கிறது. (கா. ச. 7:72)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

★ யாரை நோவது? 392

மகளிர் பலர் முன்னிலையிலும்
உன்னைப்பற்றிப் புகழ்ந்துரைத்த எங்கள் குற்றத்தால்
பொதுமகளிர் உன்னை வயப்படுத்திக் கொண்டனர்
நீ எங்கட்குக் கிட்டாதவனாய் விட்டாய்
நாங்கள் யாரை நோவது? சங்கரசத்தி (கா. ச. 4:50)

திணை - பெருந்திணை

துறை - கண்டு கண் சிவத்தல்

★ நள்ளிருளிலும் 393

இன்று நள்ளிருளிலும்
நான் அவரைத் தேடிப்போவேன் என்று
அதற்காகப் பகற் பொழுதிலேயே
வீட்டுக்குள் கண்ணை மூடிக் கொண்டு
காலால் தரையைத் தடவி
மெதுவாக நடந்து பழகுகிறாள். சுசரியன் (கா. ச. 3:49)

திணை - பெருந்திணை

துறை - இரவுத் தலைச் சேறல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ பெண்களின் நெஞ்சம் 394

இயற்கையாகப்
பெருகி உயர்ந்திருந்த அவளுடைய கொங்கைகள்
எவ்வாறு கீழே விழுந்து விட்டன
மகளிரின் நெஞ்சத் தருகில்
யாரும் நிலைத்திருக்க முடியாதா ?

சவரசித்தன் (கா. ச. 3:68)

திணை - பெருந்திணை

துறை - இளமை தீர்திறம்—பொது மகளைப் பழித்தது.

★ நாங்கள் பரத்தையரானதேன்? 395

உன் மனைவி
கற்புடையவளாகவும்
நாங்கள் கற்பில்லாதவர்களாகவும்
இருக்க நேர்ந்திருப்பது ஏன் தெரியுமா?
உன்னுடைய
கட்டிளமையின் கதிர் வீச்சாகிய
பெருமிதப் பொலிவு தான். அனுலச்சீயே (கா. ச. 3:28)

திணை - பெருந்திணை

துறை - மிக்க காமத்து மிடல்

★ தேளா கடித்தது! 396

கணவன் முன்னிலையில்
தன்னைத் தேள் கடித்து விட்டது என்று
பொய்யாக நடிக்கிறாள்
கணவனின் இசைவு பெற்று
தோழியோடு
தன் கள்ளக் காதலனாகிய மருத்துவன் வீட்டுக்கு
இப்பெண் கையை உதறிக் கொண்டே போகிறாள்.

(கா. ச. 3:37)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கிளியைப் பின் தொடரும் தேனீக்கள் 397

மாம்பழம் தின்ற
கிளியைப் பின் தொடர்ந்து
தேனீக்கள் பறக்கின்றன. (கா. ச. 7:66)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம். செல்வம் மிக்க வனைக் குலமகளிர் விரும்பிய பொருந்தாச் செய்கையைக் குறிப்பான் உணர்த்திய குறிப்பு. கண்டோர் கூற்று.

★ எப்படிப் பட்டவளாயிருப்பாள்? 398

தீய வழியில்
பணம் சேர்த்தவனிடம் பணம் பெறுபவர்கள்
எப்படிப் பட்டவர்களாயிருப்பார்கள்?
கொடியவர்களாகத் தானிருப்பார்கள்
வேப்பம் பழத்தைக்
காக்கைகள் தானே விரும்புகின்றன. (கா. ச. 3:48)

திணை - பெருந்திணை

துறை - பொருளுக்காகப் பரத்தமை மேற் கொண்ட பொது மகளிரைப் பழித்தது.

★ தேனீயும் முரடரும் 399

தேனீக்கள்
மாம்பூக்களிலிருந்து மலர்த்துகளை எடுத்துச் செல்வது
தம்மால் கவர்ந்து கொள்ளப்பட்ட மகளிரை
முரடர்கள் நகத்தால் கீறித் துன்புறுத்தித்
தலை மேல் தூக்கிக் கொண்டு போவது போன்றிருக்கிறது.
(கா. ச. 4:41)

திணை - பெருந்திணை

துறை - மிக்க காமத்துமிடல்—ஓம்படைக் கிளவியாக உலகியல் கூறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ உங்கள் மனைவிக்கு எப்படித் தெரியும்? 400

உங்கள் மனைவி
உங்கள் உள்ளத்தில் ஏற்கெனவே இருப்பதால்
தாங்கள் என் உள்ளத்தில்
உங்கள் மனைவியோடு குடியிருக்கிறீர்கள்
இல்லா விட்டால்
நான் விரும்பும் பொருள்கள்
உங்கள் மனைவிக்கு எப்படித் தெரியும்?

மகாஏவன் (4:37)

திணை - பெருந்திணை

துறை - தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கை வண்ணனை

கற்பனைக் கோலங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

" அழகெலாம் ஒருங்கே கண்டால்
ஆர்கொலோ ஆற்றவல்லார் ?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கை

★ இயற்கை வண்ணனை புத்த துறவிகள் 401

பலாச மரத்தின்
சிவந்த இலைகள் அடிமரத்தைச் சுற்றிலும்
தரையில் வீழ்ந்திருப்பது
புத்தபகவானின் திருவடியாகிய
பாதபீடிகையை வீழ்ந்து வணங்கும்
புத்ததுறவிகளைப் போன்றிருக்கிறது. (கா. ச. 1 : 30)

★ மயில் 402

மயில்
மழைக்காலத்தில் புல்நுனியின் மேலுள்ள
பனித்துளியை பைம்மணி (மரகத)
ஊசியில் பொருந்தி நிற்கும் முத்துகளை
உண்பதுபோல் பருகுகிறது. பாலிதன் (கா. ச. 4 : 94)

★ இருளின் எச்சம் 403

வெண்குமுதத்தில்
அமர்ந்த வண்டுக் கூட்டம்
இருளின் எச்சமாகத் தெரிகிறது
நிலவொளியால்
இந்த இருளைப் போக்க முடியாதோ ? (கா. ச. 6 : 61)

★ மேகமும் இடியும் 404

மேகக் கொங்கைகள்
பொழிந்த பாலமுதாகிய
மழை வெள்ளத்தால்
விந்திய மலை பசுமை பெற்றுப் பொலிகிறது
மலை முகட்டிலிருந்து கீழே தள்ளப்பட்ட
மேகத்தின் நெஞ்சாங் குலைபோல்
காற்றால் பிடரி பிடித்து உந்தப்பட்ட
இடி நடுங்குகிறது. (கா. ச. 6:83)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ கழுவேற்றம் 405

கூரிய வேல்களை
நட்டுக்கட்டப்பட்ட வேலியின் மேல்
மழையில் நனைந்து
கழுத்து மேலும் குளிரால் குறுகி
சிறகை வெயிலில் விரித்து
அமர்ந்திருக்கும் காக்கைகள்
கழுவேற்றப்பட்டவை போல்
காணப்படுகின்றன. (கா. ச. 6: 63)

★ நிலமகளின் மடியில் தவழும் குழந்தைகள் 406

தாய் மடியில்
தவழும் குழந்தை
பால் பெறும் எண்ணத்தின் எதிர் நோக்கில்
மகிழ்கிறது
வயல் சேற்றிடையில்
கால் மூழ்கத் தழை மிதித்துக் கொண்டிருக்கும் உழவர்கள்
நிலமகளின் மடியில் தவழும் குழந்தைகள்
இவர்கள்
வயலில் பால்கட்டும் நெற்கதிர்களைக்
கண்முன் காணும்எண்ணத்தின் எதிர்நோக்கில்
உள்ளத்தில் ஊறும் மகிழ்ச்சிப்பால்
பருகிக் கொண்டிருக்கிறார்கள். (கா. ச. 6: 67)

★ குந்தமலர் 407

அன்னாய்!
குந்த மலரில் மட்டும்
அப்படி என்ன பெரிய கவர்ச்சியிருக்கிறது?
இந்தத் தேனீக்கள்
குந்தக் கொடிகளின்
அழகைக் கண்களால் பருகுகின்றனவே! (கா. ச. 6:91)

குந்தமலர் என்பது மல்லிகை மலர்களின் வகைகளுள் ஒன்று. இம்மலரின் பெயரைப் பெண்களுக்கு இடுவர். குந்தவை எனப் பெயர் கொண்ட மகளிர் தமிழகம் ஆந்திரம் கன்னடம் ஆகிய முந்நிலப் பகுதிகளிலும் பலரிருந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

★ மின்னல் 408

மேக எருமையின் வயிற்றில்
வானவில் குத்தியது போல்
மின்னல் நெளிகிறது. (கா. ச. 6:84)

★ காய்ச்சல் கண்ட மரம் வாயாலெடுக்கிறது 409

மரப்பொந்துகளிலிருந்து
வெளியில் பறந்துவரும் கிளிகளின் வரிசை,
மழைக்காலத்தில்
காய்ச்சல் கண்டமரம்
பித்தத்தை வாயால் எடுப்பதால்
குருதியொடு கலந்து வெளிவரும்
பித்தநீர்க் கோவை போன்றுள்ளது. (கா. ச. 6:62)

★ பெடை நாரை 410

அதோ! பார்!
தாமரைப் பாசடை மீது
பெடைநாரை
ஆடாமல் அசையாமல் அமர்ந்திருக்கிறது
அதன் தோற்றம் பைம்மணி (மரகத)த் தட்டின்மேல்
நிறுத்திவைத்த
பால்நிற வெண்சங்கைப் போன்றிருக்கிறது.
(க. ச. 1:3)

★ தாமரைக்குளம் 411

மாமி !
நம் சிற்றூரின் அழகுக்கு அழகூட்டி வந்த
தாமரைக் குளத்தை இன்று பாருங்கள்
மாரிக்கால காட்டாற்று வெள்ளத்தால்
அடித்துச் செல்லப்பட்ட தாமரைக் கொடிகள்
எட்செடிக் குவியலைப் போல்
காட்சியளிக்கின்றன. (க. ச. 1:8)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

412

★ மஞ்சள்முக விறலி

பசிய நெற்கதிர்
முற்றி வெளுத்துவிட்டதே என்று
ஏன் அழுகிறாய்?
சணல் வயலைப்பார்
மஞ்சள்முக விறலியைப்போல்
பொலிகிறது.

(கா. ச. 1 : 9)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திணை துறை விளக்கம்

உலக மொழிகளில் எண்ணிறந்த இலக்கியச் செல்வங்கள் உள்ளன. காதல் வாழ்வாகிய அகப்பொருள் இலக்கியங்களுக்குத் திணையும் துறையும் வகுத்துக் கூறுவது தமிழ்மொழி ஒன்றில் மட்டும் சிறப்பாகக் காணப்படுகிறது. திணை துறை வகுப்பது ஏன் தேவைப்படுகிறது என்று சுருக்கமாக இங்குக் குறிப்பிடுவது, இந் நூலுக்கு நான் புதிதாகத் திணை துறை வகுத்திருப்பதன் நோக்கத்தை விளக்குவதாக இருக்கும்.

காப்பியமாக வடிக்கப்படாததும் கதையோடு தொடர்புபடுத்தப் படாததுமாகிய தனிப்பாடல்கள் அகப்பொருள் தழுவி வரும்போது அதை நாடக உறுப்பாக்கிக் காட்ட திணைதுறை பாகுபாடு தேவைப் படுகிறது. திணைதுறை வகுக்கப்பட்ட ஒவ்வொரு அகப்பாட்டும் ஒவ்வொரு நாடகக் காட்சியாக நம் கண்முன் வந்து நிற்கிறது.

ஊடலும் கூடலும், வாழ்வும் பிரிவும், இரங்கலும் ஏக்கமும் முன்னிகழ்ச்சிகளால் உணர்வூட்டம் பெற்றவை; பின்னிகழ்ச்சிகளை எதிர்நோக்கும் கருத்தூட்டம் பெற்றவை. அத்தகைய உணர் வோட்டங்களே திணை; கருத்தோட்டங்களே துறை எனப்படும். மாந்தனை ஆட்டிப் படைக்கும் அகவுணர்வுகள் அவன் வாழும் சூழலால் வடிவம் பெறுகின்றன. அச்சூழலை உருவாக்குவன அவன் வாழும் நிலமும் காலமும். நிலமும் காலமும் அவனால் கட்டுப் படுத்த முடியாதவையாதலின் முதற்பொருள் எனப்படும். அவனைச் சூழவுள்ள ஓரறிவுயிர் முதல் ஆறறிவு உயிர் வரையுள்ள சூழலை ஓரளவுக்கு அவன் கட்டுப்படுத்தலாம். இவை முதற் பொருளில் கருக்கொண்டெழுந்ததால் கருப்பொருள் எனப்படும்.

திணை என்னும் சொல்லுக்கு ஒழுங்கு என்று பொருள். குறித்த வரையறையுடைய (முதற்பொருளும் கருப்பொருளும்) நிலப்பகுதியில் குறிப்பிட்ட ஒழுங்கில் பழகிவிட்ட மனநிலையோடு ஒருவன் வாழ்வது திணைக்குரிய ஒழுக்கமாகிறது. ஒரு ஒழுங்கில் பழகிவிட்ட மனநிலை உரிப்பொருள் எனப்படும். முதற்பொருளும் கருப்பொருளுமாகிய நிலஅமைதியும் உரிப்பொருளாகிய மக்களின் உணர்வு அமைதியும் திணை எனப்படும். நில இயல்புக்கேற்ப வேறுபடும் வாழ்வியல் அமைப்புகளை ecological taxonomy என்பர்.

முல்லை நிலத்தில் வாழ்பவனுக்கு ஆனிரைகளையும் கன்று களையும் காணும்போது இல்லிருந்து மக்களொடு மகிழ்ந்து வாழும் ஆசையும், பாலைநிலத்தில் வாழ்பவனுக்குக் கொள்ளையடித்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொலை புரியும் உணர்வும், சூழலால் தானாகவே உள்ளத்தில் உரம் பெற்று வளரும். இதனை மேனாட்டார் environmental Psychology என்பர். ஒருவனுக்கு நல்ல சூழலை அமைத்துத் தராமல் அவனை நல்லவனாக்க முடியாது. இத்தகைய சூழலில் பிறந்து வளர்ந்தவனின் மனநிலை இப்படித்தானிருக்கும் என்று காட்டுவது திணை.

நல்ல சூழலில் வளர்ந்து மனவளம் பெற்றவர்கள் வேறு எந்தச் சூழலுக்குச் சென்றாலும் நல்ல சூழலையே உண்டாக்க முயல்வர். தீயசூழலில் பழகி மனவளம் இழந்த கொடியவர்கள் எந்த நிலத்திற்குச் சென்றாலும் அதே தீய சூழலை உண்டாக்க முயல்வர். இவ்விரு திறத்தார்க்கும் ஏற்படும் கருத்து மோதலே அகவாழ்விலும் புறவாழ்விலும் காணப்படும் துறைகள். நல்லவர் நல்லவரையே எதிர்கொள்ளும்போது ஏற்படும் காதல் கருத் தோட்டங்களே அன்பின் ஐந்திணைக்குரிய அகத்துறைகள்.

ஊடல், பிரிவு, இரங்கல் என்னும் உணர்வுகளின் கருத்து ஒன்றாயினும் அவற்றை வெளிப்படுத்தும் பாங்கால் சுவை மிகுதி யாகிறது. கேட்போரின் உள்ளத்தை நெகிழ்விக்கும் திறனுடைய தாகிறது. குறிப்பிட்ட துறையில் நெஞ்சு நெகிழ்விக்கும் அளவுக்குத் தம் கருத்தைச் சுவைபடப் புலப்படுத்தும் திறன் பெரும் புலவர்க்கே வாய்க்கும். காதல் வாழ்வில் இனிமை மிக வேண்டுமாயின், ஆணாயினும் பெண்ணாயினும் தன் கருத்தைச் சுவைபட மனதைத் தொடுமாறு எடுத்துரைக்கும் ஆற்றல்பெற வேண்டும் என்பதே துறை வகுப்பதன் நோக்கம்.

காதலுணர்வின் விளைநிலமான உள்ளத்தைப் பண்படுத்த திணை துறைவழிக்கூற்றுகள் பயன்படுகின்றன. திணை உணர்வு ஒரு காட்டாற்று வெள்ளம்; துறை என்பது அக்காட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் மடை. செங்கடுமொழி என்னும் துறை இதனை நன்கு விளக்கும். அகவாழ்வை வெறும் விலங்கின் கூடுதலைப்போல் கருதினால் இதன் அருமையை உணர முடியாது. உணர்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளத் தெரியாதவர்களின் அக வாழ்க்கை இரங்கத் தக்கதாகிவிடும். துறையில் வற்புறுத்தப்படும் கருத்தோட்டங்கள் உணர்வோட்டங்களை ஒழுங்குபடுத்தி அக வாழ்வில் உண்மையான இயற்கை இன்பத்தைப் பெறச்செய்கிறது.

குறிஞ்சித்திணையில் கண்ணும் மனமும் உவக்க ஒன்று கூடுகின் றனர். கைப்பிடித்தவன் பாலைத்திணையில் கண்கலங்கப் பிரிகிறான். மருதத்திணையில் அவள் மனங்கலங்கி ஊடுகிறாள். நெய்தலில் கண்ணும் மனமும் அலமற ஏங்குகின்றனர். இதுதான் உலக வாழ்வு என்பதை ஐந்திணைப்பிரிவுகள் நன்குணர்த்தி, இன்பதுன்பங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் சரிசமமாகத் தம்மைக் காத்துக் கொள்ளத்தக்க கருத்தோட்டங்களைத் துறைப்பிரிவுகள் வாரி வழங்குகின்றன.

ஆங்கிலம் போன்ற வளமான மொழிகளில் திணைதுறை குறிக்கப்படாததால் அந்த அகப்பாடல்கள் குறித்த உணர்வை அல்லது கருத்தைச் சுவைபட எடுத்துக் காட்டவில்லையா என்று வினவக்கூடும். forsaken mermaid என்னும் ஆங்கிலப் பாடலைக் கேட்டு உருகாதார் இல்லை என்பது உண்மையே. உணர்வை வெளிப்படக் கொட்டிக் கருத்தைக் கவரும் பாடல், உணர்வைக் குறிப்பாக வெளிப்படுத்தி உவமை, உள்ளுறைஉவமை, இறைச்சிப் பொருள் போன்ற அணிவகைகளால் கருத்தை விளக்கும் பாடல் எனப்பாடல்களை இருவகைப்படுத்தலாம். முன்பு காட்டிய ஆங்கிலப் பாடல் முதல்வகையைச் சார்ந்தது பிரிவுக்குப் பொறுப்பானவர் இருவருமா, ஒருவரா, ஒருவரும் பொறுப்பில்லாமல் புறச்சூழலால் ஏற்பட்டதா என்பதை இப்பாடலிலிருந்து நம்மால் ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. திணை-நெய்தல்; துறை-இகந்தமை சாற்றி இரங்கல் என்று துறை பிரிக்கப்பட்டிருந்தால் பிரிவுக்குப் பிரிந்தவரே பொறுப்பு என உணர முடிகிறது. துறை-பரிவுற்று மெலிதல் என்றால் இருவரிடமும் தவறில்லை, வேறு யாராலோ பிரிந்தனர் என உணரமுடியும். துறை - தன்மனத் தழுங்கல் என்றால் யாரோ ஒருவரிடம் முன் செய்த குற்றவுணர்வு உள்ளது என உணரமுடிகிறது. பாடலில் வருத்த உணர்வு சுவை பட வண்ணிக்கப்படுமே ஒழிய காரணம் விளக்கப்படாது. அதனைத் துறை பாகுபாடு தான் விளக்கிக் காட்டும்.

இனி, இரண்டாம் வகைப் பாடலான குறிப்பால் உணர்த்தும் அணிவகைப் பாடலுக்குத் திணை துறை பிரிக்கப்படாவிடின் ஒன்றும் புரிந்து கொள்ள முடியாது. சான்றாக இந்நூலிலுள்ள 73-ஆம் பாடலைக் காண்போம்.

> 'தேனீக்கள் தாமரை மலரைச் சூழ்ந்துள்ளன
> இக்காட்சி, திருமகளின் கழுத்தில்
> வயிரமாலை இட்டது போன்றுள்ளது. (கா ச. 6:74)

இதனைத் திணை துறையோடு பொருத்திப் பார்க்காவிட்டால் வெறும் இயற்கை வண்ணனை குறித்த பாடலாகத்தான் தெரியும்.

உயர்குடியில் பிறந்தவர்களும் பண்பால் மேம்பட்டவர்களும், வெளிப்படச் சுருக்கென்று ஒன்றைச் சொன்னால் மனம்நோகும் என எண்ணிக் குறிப்பாக, உவமை வாயிலாகத் தம் கருத்தை வெளிப்படுத்துவது மரபு; இப்பாடலுக்கு திணை-குறிஞ்சி, துறை-வரைவு கடாதல், என்று திணை துறை வகுக்கும்போது இதில் குறிப்பாகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறப்படும் கருத்து தெளிவாகப் புரிகிறது. இது தோழி தலைமகனைப்பார்த்துச் சொல்வது. இவளைக் காதலித்து நீ இன்னும் மணம் புரிந்து கொள்ளாமல் காலம் நீட்டிக்கிறாய். இதோ பார்! தாமரை மலரைச் சூழ்ந்துள்ள வண்டுகளின் வரிசை' மங்கலமகளின் கழுத்தில் இடப்பட்ட மங்கலநாணை (தாலி)ப் போன்றில்லையா? இதைக் கண்டாயினும் இவள் கழுத்தில் தாலிகட்டும் நினைவு உனக்குத் தோன்றவில்லையா' என்று நேருக்குநேர் கடுமையாகப் பேசவேண்டிய சொற்கள் வெறும் உவமையை மட்டும் சுட்டிக் காட்டி வாயுள்ள ஊமையாக நிற்கிறது. எனவே, உயர்ந்த நாகரிகத்தை மொண்டு நிற்கும் உரையாடல்களின் வடிவான இத்தகைய அகப்பாடல்களுக்குத் திணை துறை வகுக்கப்படாவிடின் அகப்பாடலின் உயர்ந்த சுவையையும் இழந்துவிடுவோம்; கருத்தையும் மறந்து விடுவோம்.

ஆந்திரநாட்டு அகநானூறான காதாசப்த சதியில் இவ்வாறு குறிப்பால் பொருள் உணரத்தக்க பாடல்கள் பல உள்ளன. அவற்றைத் திணைதுறையோடு சார்த்தியறியாததால் பல பாடல்களுக்குப் பொருள் விளங்கவில்லையென்றும், வெறும் இயற்கை வண்ணனைப் பாடல்கள் இவை என்றும் உரையாசிரியர்கள் ஒதுக்கியுள்ளனர். இப்பாடலில் என்ன கருத்து சொல்லப்படுகிறது என்பதை அறியாதபோது அது வெற்றுப் பாடலாகிறது. காதா சப்தசதியை செருமானிய மொழியில் மொழிபெயர்த்த வீபர் என்னும் அறிஞரும் சில பாடல்களுக்கு உரைக்குறிப்பு தரமுடியாதபோது கேள்விக்குறியிட்டுள்ளாராம். இந்நூலின் செருமானிய மொழிபெயர்ப்பு பதினேழு பதிப்புகளாக வெளி வந்துள்ளதாம். கி. பி. 1881-இல் காதா சப்த சதியைச் செருமானிய மொழியில் மொழி பெயர்த்த வீபர் பெருமகனார் தமிழ்கற்று, அகநானூறு குறுந்தொகை கலித்தொகை போன்ற அகப்பாடல்களைத் திணை துறை விளக்கங்களோடு செருமானிய மொழியில் மொழி பெயர்த்திருந்தால் தமிழின் பெருமையை உலகம் நன்கறிந்திருக்கும்.

துறை என்பது பண்பாட்டு அளவுமானி

பல்வேறு படித்தரத்திலுள்ள மாந்தரின் மனவுணர்வுகளை வகைப்படுத்தி அவரவர்களின் மனவளத்தை அளந்து காட்டும் அளவுமானியாக 'துறை' செயல்படுகிறது. ஊடல் என்னும் துறையை எடுத்துக்கொள்வோம். ஊடல் உணர்வுகளைப் பல்லாயிரம் வகைகளில் வடித்துக் காட்டலாம். ஊடலுணர்வின் தரமான வெளிப்பாடாக நிற்கும் பாடல்கள் காலங்கடந்து நிற்கும் புகழ் பெற்று விடும். ஒரு பெண் ஊடலின்போது கணவனைக் கண்டபடி வைது விடுகிறாள். 'அவர் காதைப் பொத்திக் கொண்டு போய் விட்டார். நான் கதவைச் சாத்திக் கொண்டு அழுகிறேன்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்கிருள்; அவளுடைய மனவளம் அவ்வளவுதான். மற்ருெரு உயர்பண்பு நிறைந்த பெண்ணின் ஊடலைக் காண்போம். கண வனின் கொடுமையால் கடுஞ்சினம் பொங்கியபோதும் ஒன்றும் பேசாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாளாம். ஏன் நீ ஒன்றுமே பேசவில்லை என்று தோழி கேட்டபோது, ''எடை கற்களை அதிகமாகப் போட்டால் எடையிடப்படும் தவசத்தின் எடை மிகக் குறைந்து போய்விடும். உயர்குடிப்பெண்டிர் தகாத கடுஞ்சொல் பேசினுல் உயர்பண்புகளின் மதிப்பு குறைந்துவிடும் அதனுல்தான் நான் ஒன்றும் பேசவில்லை'' என்ருளாம் அவள். ஊடற் காலத்தில் கடிய உணர்வுகளையும் துயரத்தையும் பண்பாடு எந்த அளவுக்குக் கட்டிக்காக்கிறது என்பது இத்துறைப்பாடலால் வெளிப்படுகிறது. ஒரே துறையில் பல பாடல்கள் பாடப்பட்டாலும் அவை அப்பாட்டுக்குரியவரின் மனவளத்தை நன்கு அளவிட்டுக் காட்டிவிடுகிறது. ஒவ்வொரு அகத்துறையிலும் பாடப்பட்ட உயர்ந்த பாடல்களைக் கேட்கும் வாய்ப்பைப் பெறும் பண்பில்லாத வரும் அகவாழ்வுக்குத் தேவைப்படும் உயர்ந்த மனவளத்தைப் பெறுவார்கள்.

எனவே, துறையமைய அகப்பாடல்களைப் பாடுவது என்பது மேன்மேலும் உயர்ந்து செல்லவேண்டிய மாந்தரின் பண்பாட்டைக் காத்து வளர்க்கும் முயற்சியின் அடிப்படை என்றறியலாம்.

திணை துறை பாகுபாட்டின் பயன்கள் :

1. திணை துறை பிரிக்கப்படாவிடின் சில அகப்பாடல்களின் பொருளே விளங்காமற் போய்விடும்.

2. காதல் தொடர்பான செய்திகளை மறைத்தே கூறுவர் அகப்பாடல்கள் என்னும் பெயர் இதனுல் தான் ஏற்பட்டது மறைத்துச் சொல்லப்படும் செய்தியைத் திணை துறை பாகுபாடு குறிப்பாக வெளிப்படுத்திக் காட்டும்.

3. அகச் செய்திகளை மறைத்துக் கூறுவது உயர்ந்த நாகரிகத் தின் அடையாளம்.

4. துறையமையப் பாடுவது பண்பாட்டின் அளவு மானியாக அமைகிறது.

5. அகத்துறைகள் புலமைத் திறத்திற்குத் தூண்டுகோலாக வும் அகவாழ்வின் சட்டக் கூறுகளாகவும் நின்று சுவை பயக் கின்றன.

அன்பின் ஐந்திணை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தையும் அன்பின் ஐந்திணை எனக் கொண்டனர். மலரினும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெல்லிது காமம் என்பதால் ஓரளவுக்குப் பண்பட்ட மனநிலையினரே அதன் அருமையை உணரவல்லவர். வலிந்துகூடும் பெருந் திணையும் தன்னை விரும்பாதவரைத் தான் விரும்பும் கைக்கிளையும் விலங்கியல்புகளாதலின் உயர்திணைக்குரிய அன்பின் ஐந்திணையில் சேர்க்கப்படவில்லை. கைக்கிளை பெருந்திணைக்குரிய பாடல்களை எவரேனும் பாடுவராயின், அவற்றை அஃறிணைப் பாடல்களாகப் பழந்தமிழர் கருதினர் போலும். உள்ளத்தின் சுவையை நுகர்வது காதலின் அடிப்படையாகவும் உடல்நலம் நச்சுவது காமத்தின் அடிப்படையாகவும் இருந்த நிலையையே மேற்கண்ட பாகுபாடு காட்டுகிறது எனலாம்.

குறிஞ்சி மலைநிலம். இங்கு மக்கள் தொகை மிகவும் குறைவு. ஒரு மலை முகட்டில் வாழும் ஐந்து குடும்பத்தினர் மற்றொரு மலையி லிருந்து யாரேனும் வரமாட்டார்களா என எதிர்நோக்குவர். மாந்தரைக் காண்பதே அவர்களுக்கொரு மகிழ்ச்சி. ஆணும் பெண்ணுமாக எதிர்ப்படுவது மேலும் புதுமை. மக்கள் தொகை குறைந்த நிலப்பகுதியில் இனப்பெருக்கம் குறித்த புணர்ச்சியே அக வொழுக்கமாயிற்று.

ஆணும் பெண்ணும் இணைந்த அகவாழ்வு, நிலையான உணவுப் பொருள் தேடி இல்லறத்திற்கேற்ற முல்லைநிலம் நோக்கி மலையி லிருந்து இறங்கி வந்தது. முல்லை நிலம் அளவான மக்கள் தொகை கொண்டது. காடுபாதியும் நாடுபாதியுமாக அமைந்த இயற்கையான வாழ்வுச்சூழல். மாந்த உணர்வுகளும் அகப்புற ஆசைகளும் மட்டுப்படுத்தப்பட்ட கட்டான சூழல். ஆதலால் அமைதியான இல்லறத்திற்கு அடித்தளமாயிற்று. அகவாழ்வின் செம்மைக்கும் புறச்சூழல்களே அடிப்படை என்பது இதனால் விளங்குகிறது.

மருதநிலம் செல்வத்திற்கு ஏழ்மை அடிபணிந்து வாழுமிடம். மக்கள் தொகை மிகுதி. அதிகாரமும் செல்வமும் பெற்றவர்கள் அகவாழ்வில் செம்மை திறம்புகின்றனர். செல்வம் குவியும் இடத் தில் ஒழுக்கம் கெட, வாயில்கள் தாமாகத் திறக்கின்றன; பரத்தமை வாழ்வு பெறுகிறது.

நெய்தல் நிலம் வணிகத்தில் சிறந்தது. கடல் கடந்து செல்வோர் மிகுதி. வாழ்வில் பல்வகைத் தோல்விகளைத் தழுவிச் சலித்துப் போனவர்களைப் போல கடல்சார் நெய்தல் நிலவாழ்வு புல்லென்றிருக்கும். அவர்களுடைய உள்ளமிடும் ஓலம், கடலலை களின் ஓயாத ஓலத்திற்கு ஒப்பாவதால் நெய்தல் இரங்கல் பொருள் தருவதாயிற்று. நெய்தல் நிலம் கடற்கரை மட்டுமன்று; கடலும் சேர்ந்தது! கடலையும் சேர்த்து (வாழ்வுக்குரிய நிலஎல்லை) நெய்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திணையாகப் பிரித்த தமிழரின் நிலவியலறிவு பாராட்டத்தக்கது. எல்லைக்குட்பட்ட கடலை territorial waters என்பர்.

பாலைநிலம் வறண்டிருப்பதால் மக்களின் மனமும் வறண்டு கடினமாயிற்று. கன்னெஞ்சத்தவரும் வன்னெஞ்சத்தவரும் அங்கு மிகுதி. ஆறலைக் கள்வரும் கொன்றுழலும் தீயவரும் வாழும் பாலை நிலத்தை அன்பின் ஐந்திணையில் சேர்த்தது ஏன் என்று வினவக் கூடும். பாலைநிலமான முல்லையும் குறிஞ்சியும் மீண்டும் மழை வளத்தால் செழித்தால் அக்கொடியவரும் நல்லவராதல் கூடும்; கொடிய கள்வனும் தன்மனைவி மக்கள்மீது ஆராத அன்புடையவனே. பாலைநிலத்து விலங்குகளும் அன்பு வாழ்வின. ஆதலால் பாலைத்திணையும் அன்பின் ஐந்திணையுள் சேர்க்கப்படுவதாயிற்று.

மருதமும் நெய்தலும்கூட மழை பெய்யாத வற்கடம் (பஞ்சம்) வருமாயின் பாலைநிலமாகாதா என வினவலாம். மருதநிலத்தில் மழை வறண்டாலும் அடிநிலத்து ஊற்றுநீர் குறையாது. நல்ல விளையுள் காலத்தில் சேமித்த உணவுப் பண்டங்களும் வறுமை வராமல் தடுக்கும். நெய்தல் நிலத்திலும் மருத நிலத்திலும் பெருகியுள்ள தொழிற் பெருக்கமும் வணிகவளமும் செல்வப் பெருக்கமும் கொடிய வறட்சியையும் தாங்கி மக்களுக்கு வாழ்வளிக்கும். இவர்கள் குறிஞ்சி முல்லை நிலத்தாரைப்போன்று இடம் பெயர்ந்து செல்ல வேண்டுவதில்லை.

குறிஞ்சி அகவாழ்வின் முதல் நோக்கமான கூடுதலைக் காட்டுகிறது. முல்லைநிலம் மக்கட் செல்வம் குலவும் இல்லறத்தைக் காட்டுகிறது. பாலைநிலம் வாழ்க்கையின் புறப்போராட்டமான பிரிவைக் காட்டுகிறது. மருதநிலம் வாழ்க்கையின் அகப்போராட்டமான ஊடலைக் காட்டுகிறது. நெய்தல் நிலம், வாழ்க்கையே முடிந்து போன அல்லது முடியுந்தறுவாயிலுள்ள அவலத்தை அள்ளி நிற்கிறது. உலகில் அனைவரின் வாழ்வும், வளரும் இளமையில் தோன்றி தளரும் முதுமையில்முடிவுறுகிறது; மகிழும் புணர்வில் தோன்றி மாழ்கும் இரங்கலில் முடியும் பாங்கே அன்பின் ஐந்திணையான காதல் வாழ்வின் இயல்பு. வாழ்நாளில் ஒரு நாளாயினும் உவகைக் கண்ணீர் சொரியும் வாய்ப்பைக் கண்கள் பெற்றனவோ இல்லையோ, துன்பக் கண்ணீர் சொரிய வேண்டிய சூழ்நிலையிலிருந்து மாந்தரின் கண்கள் தப்ப முடியாது என்பதை ஐந்திணை அமைப்பு வகைப்படுத்திக் காட்டுகிறது.

மழையின் வறுமை பாலைநிலம். செல்வத்தால் வறுமையுறல் ஒழுக்கம் சிதையும் மருதநிலம் உயர்ந்த பண்புகளின் வறுமையால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நல்ல உள்ளங்களில் ஆறாத புண்ணை உண்டாக்குவது நெய்தல் நிலம். மேற்கண்ட வறுமைகள் உயர் பண்புகளை அழித்துவிடு கின்றன. எத்தகைய வறுமைவரினும், பண்பாட்டுக்குத் தலைமை தரும் மக்கள் அமைப்பு, என்றும் நிலைத்து வாழும் குடிப்பெருமை யுடையதாகிறது. அகவாழ்வின் செம்மை புறவாழ்க்கையைச் செம்மைப்படுத்தும். அகவாழ்வின் ஆணிவேர் கற்புடைமை. கற்பால்தான் குடிப்பெருமை நிலைக்கிறது. குடிப்பெருமையால் பண்பு வாழ்கிறது. பண்புடையவர்களால்தான் உலகம் வாழ் கிறது. உலகத்தைப் பண்பாட்டின் பிடியிலிருந்து நழுவவிடாமல் நல்ல இலக்கியங்கள் காத்துவருகின்றன. நல்ல இலக்கியத்திலும் நல்ல இலக்கியம் என்பது அகவாழ்வைப் பண்பாட்டுப் பின்னணி யில் விளக்கும் இலக்கியம். அகவாழ்வைப் பண்பாட்டுப் பின்னணில் விளக்கவும், வெறும் கைக்கிளை பெருந்திணைப் பாடல்களாகிவிடாமல் இலக்கியக் கட்டுக்கோப்பைக் காக்கவும், திணைதுறை பாகுபாடுகள் உதவுகின்றன.

குறிஞ்சியில் காதல் கவர்ச்சி; முல்லையில் உடைமை (ஆனிரை) கவர்ச்சி, மருதத்தில் நிலக்கவர்ச்சி, நெய்தலில் செல்வம்தேடும் பொருள் கவர்ச்சி; பாலையில் உயிர் கவர்ச்சி; இத்தனைக் கவர்ச்சி களாலும் கவரப்படாமல், என்றும் அன்பு ஒன்றால் மட்டும் கவரப் படும் வாழ்வே அன்பின் ஐந்திணை.

வட இந்தியாவில் தமிழ்த் திணை துறை

பழங்காலத்தில் தமிழ்த் திணை துறைகள் வடநாட்டிலும் அறிமுகமாகியிருந்தன என்று கருத இடமிருக்கிறது. கபிலர் பத்துப்பாட்டுள் ஒன்றான குறிஞ்சிப் பாட்டைப் பாடியவர். அக் காலத்தில் வடநாட்டில் அரசாண்ட யாழ்ப் பெருந்தத்தன் (பிருகதத்தன்) என்பவனுக்குத் தமிழ் கற்பிக்கவும் தமிழரின் அக வொழுக்கத்தைப் புலப்படுத்தவும் குறிஞ்சிப் பாட்டைக் கபிலர் இயற்றினார் என்று கூறப்படுகிறது. இதிலிருந்து வடநாட்டு வேந்தரும் புலவர்களும் தமிழை விரும்பிக் கற்றனர் என்று தெரி கிறது. கபிலர் என்னும் பெயர் பூண்ட பிராகிருத புலவர்களும் வட நாட்டிலிருந்தனர். இருக்கு வேதத்தில் வரும் 'பன்சஜன' என்னும் சொல் வடமேற்கு இந்தியாவில் வாழ்ந்திருந்த ஐந்திணை மக்களாகிய திரவிடரையே குறிக்கும் என்று பி. தி. சீனிவாச ஐயங்கார் The History Of the Tamils (ப-84) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே, தமிழின் திணை துறை பாகுபாடுகள் வடநாட்டிலும்தெரிந்திருக்கும் என்றும் அது பிற்காலத்து வழக் கிறந்தது என்றும் கருதலாம்.

'என் நெஞ்சந் திறப்போர் நிற்காண்குவரே' என்பன போன்ற அகப்பாடல்கள் தமிழிலுள்ளது போலவே சிறிதும் கருத்து மாறாமல் முழுமையாகப் பிராகிருதப் பாடல்களில் இருப்பதைக் காணும்போது பிராகிருத மொழிக்கும் தமிழுக்கும் இடையே நிலவிய கொள் கொடை உறவு தெளிவாகப் புலனாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நூலில் பயின்றுள்ள அகத்துறைகள்

1. அகமலிவுரைத்தல் - நெஞ்சுநிறை மகிழ்ச்சியை வெளிப் படுத்தல்.

2. அஞ்ச வந்த உரிமைக் கிளவி - பிறர்க்கு அச்சந் தரும் கற்புச் சிறப்பால் இல்லறத்திற் கேற்ற உரிமையுடையளா தலைவிளக்குதல்.

3. அடங்கா ஒழுக்கத்துக்கு அவன் வயின் அழிந்தோளை நாளது சின்மையும் இளமையது அருமையும்கூறி அடங்கக் காட்டுதல் – தலைவனின் தகாத ஒழுக்கம் கண்டு மனம் வெதும்பியவளை, உலகியல் நிலையாமைகளை எடுத் துரைத்துப் பொறுமையுடன் அடங்கிப் போகுமாறு அன் புடன் கூறுவது.

4. அருமைக் காலத்துப் பெருமை காட்டி எளிமைக் காலத்து இரக்கக் கிளவி - கிட்டாத காலத்தில் மிகுந்த ஆசை காட்டி, அருகிலிருந்து வாழும் காலத்தில் ஆசை மழுங்க லுக்காக வருந்துதல்.

5. அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி - பிறர் துயரம் கண்டு பரிவும் இரக்கமும் தூண்டுதலால் உள்ளத்தில் சுரக்கும் அன்பை வெளிக்காட்டாமல் மறைத்துப் பேசும் சொற்கள்.

6. அவர்வயின் விதுப்பல் - அவர் மேல் மிகுகின்ற ஆசைப் பெருக்கம்.

7. அவன் சூள் உரைத்தல் - அவன் முன்பு உரைத்த சூளுரையை (சபதத்தை) நினைவூட்டுதல்.

8. அறத்தொடு நிற்றல் - உண்மையான உள்ளன்பால் இணைந்தவரை இல்லறத்தில் ஈடுபத்துவதே அறம் என் பதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தகவுற எடுத்துக் காட்டுதலில் உறுதியுடையராதல்.

9. அன்புமிக உரைத்தல் - ஆழ்ந்த அன்பைச் சொல்லால் வெளிப்படுத்தல்.

10. அன்புமிக உடைமை - ஆழ்ந்த அன்பைக் குறிப்பால் வெளிப்படுத்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. அன்பினது அகலமும் அகற்சியது அருமையும் - தொடர்புடையவர்களது உண்மையன்பின் பெருமையும் அத்தகையவரை ஒரு சிறிதும் பிரிய இயலாத நிலைமையும்.

12. அன்புதலைப் பிரிந்த கிளவி - அன்பில்லாத நிலைமையைத் தெளியக் கூறுதல்.

13. ஆக்கஞ் செப்பல் - உண்டாகிய நிலைமையைக் கூறுதல்.

14. ஆஞ்சிக் களஞ்சி - உடன்கட்டையேறுதல்.

15. ஆற்ருமை கூறல் - பொறுத்துக் கொள்ள இயலாமையைச் சொல்லுதல்.

16. ஆற்றிடை வருத்தம் - வழியிடையில் நேர்ந்த துன்பம் அல்லது நேரும் துன்பம்.

17. ஆற்றுவித்தல் - துயரத்தால் கொதிக்கும் உள்ளத்தை அமைதிப்படுத்தல்.

18. இகந்தகை இயம்பல் - விட்டுத்துறந்ததைக் கூறுதல்.

19. இகந்தமை சாற்றி இகழ்ததற் கிரங்கல் - இகழ்ந்து பேசியதற்காக அவர் விட்டுப் பிரிந்தார் என்று வருந்துதல்.

20. இகுளை வம்பெனல் - இது ஒரு செயற்கையான தோற்றம் என்று தோழி கூறுதல்.

21. இட்டுப் பிரிவு இரங்குதல் – சிறிது காலம் இடையிட்டுப் பிரிவான் என்றறிந்து வருந்துதல்.

22. இடித்துரைத்த செங்கடுமொழி - குற்றத்தைக் காட்டி உரைத்த கடுமை கலந்த இன்சொல்.

23. இயற்பட மொழிதல் – இயல்பாக அமைந்த குடிநலன் குணநலன்களைப் புகழ்ந்து கூறுதல்,

24. இயற்பழித்தல் - குடிநலன் அல்லது குணநலன்களைப் பழித்தல் அல்லது குறைத்துக் கூறுதல்.

25. இரவுத்தலைச் சேறல் - இருளில் தேடிச் செல்லுதல்.

26. இல்லத்தழுங்கல் - வீட்டிலிருந்தவாறு வருந்துதல்.

27. இளமை தீர்திறம் - இளமை நீங்கிய பின்னும் அறத்தில் ஈடுபாடு கொள்ளாமல் காமத்தில் ஈடுபாடு கொள்ளுதல்.

28. உட்கோள் கூறுதல் – உள்ளத்தின் உய்த்துணர்வைக் கூறுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

29. உணர்ப்பு வயின் வாரா ஊடல் - ஊடல் தணிவிக்கும் முயற்சிகள் தோல்வியுற்ற ஊடல்.

30. உருவெளித் தோற்றம் - நோக்கு மிடத்திலெல்லாம் தன்னால் விரும்பப்பட்டவரின் தோற்றம் காணுதல்.

31. உலகியல் புரைத்தல் - உலகத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இயல்பானவை எனக் கூறுதல்.

32. உறுதி காட்டி அறிவு மெய்ந்நிறுத்துதல் - நமக்கு உறுதி பயந்திடும் நன்மை இது என்று தெளியக்கூறி அறிவு கொளுத்துதல்.

33. உறுப்புநலன் புகழ்தல் - உடலுறுப்புகளின் அழகைப் பாராட்டுதல்.

34. ஊடலுவகை - தக்காரிடைத் தோன்றும் ஊடல் பேச்சுகளில் விளையும் மகிழ்ச்சி.

35. என்னை மறைப்பது என் எனத் தழால் - எனக்குத் தெரியாமல் சிலவற்றை ஏன் மறைக்கிறாய் என்று தோழி அன்பு மிக வினவுதல்.

36. ஏதுவின் உரைத்தல்-சான்று அல்லது கரணியம்(காரணம்) காட்டி ஒன்றை நிலைநிறுத்துதல்.

37. ஏமஞ்சாலா இடும்பை - யாராலும் தீர்க்க முடியாத துன்பம்.

38. ஏமுறு கிளவி - மனநலத்திற்குப் பாதுகாப்பளிக்கும் பேச்சு.

39. ஒருதலையுள்ளல் - எப்பொழுதும் ஒன்றையே நினைத்துக் கொண்டிருத்தல்.

40. ஒருவழியுள்ளுதல் - சிலபோழ்து நினைத்தல்.

41. ஓம்படைக் கிளவி - உன்னையும் உன் குடிநலனையும் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள் இவை எனக் கூறுதல்.

42. கங்குல் நோதல்-இரவுப் பொழுதை நொந்து கொள்ளுதல்.

43. கண்டுகண் சிவத்தல் - தன் சினத்திற்குக் கரணியமானவரைக் கண்டு சினம் கொள்ளுதல்.

44. கண் படை பெருதுகங்குல் நோதல் - உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் துயர நெருப்பால் உறக்கம்வராத நிலையில் இரவுப்பொழுதை நொந்து உரைப்பது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

45. கவின் அழிபு உரைத்தல் - அழகு அழிந்ததைச் சொல்லுதல்.

46. காட்சி வேட்கை - காணும் விருப்பம்.

47. காதற் சோர்வு - காதலியை மறத்தல்.

48. காமமிக்க கழிபடர் கிளவி - காமம் மீதூர்ந்த நெறிபிறழ்ந்த ஆசையுடன் தோன்றிய துன்பச் சொல்.

49. குற்றிசை - மனைவியைப் புறக்கணித்து அறநெறி பிறழ்ந்து நடத்தல்.

50. குறிப்பறிதல் - பொறியானன்றி மனத்தால் குறிப்பாக உய்த்துணர்வது.

51. குறிப்பின் உணர்தல் - பிறர் கருதியதனை ஏதேனும் ஒரு குறிப்பைக் கொண்டு உணர்தல்.

52. குறியிடங் கூறல் - கூடும் இடம் கூறுதல்.

53. கையறவு உரைத்தல் - செயலற்ற துன்பத்தை எடுத்துரைத்தல்.

54. கையறுநிலை - இறந்தாரை எண்ணி இரங்குதல்.

55. கையறு தோழி கண்ணீர் துடைத்தல் - துயரத்தைப் போக்கும் வழியறியாத நிலையில், தோழி கண்ணீர் துடைத்துத் தானும் துன்பத்தில் பங்கேற்று வருந்துதல்.

56 கையுறை போற்றல் - அன்புக் காணிக்கையாகக் கொடுத்த பொருளை உயிரேபோல் பாதுகாத்தல்.

57. கைவிடின் அச்சம் – தன்னைக் கைவிட்டுவிடுவாரோ என்னும் அச்சம்.

58 செங்கடுமொழி - மனத்தினால் இனியராகிக் கூறும் கடுஞ்சொல். அதாவது கடுமை கலந்த இன்சொல்.

59. செலவழுங்குதல் - பயணத்தை நிறுத்திவிடுதல்.

60. செலவிடையழுங்கல் - அப்பொழுதைக்குப் பயணத்தை நிறுத்தி வைத்தல்.

61. தகையணங் குறுத்தல் - அவளின் அழகு அவனை வருத்தும் தன்மையைக் கூறுதல்.

62. தபுதாரநிலை – மனைவியை இழந்த துன்பநிலை.

63. தலையொடு முடிதல் - கணவனொடு சாதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

64. தலைமகள் பெருமிதம் - மனைவிக்கே உரிய உரிமையால் வந்த செருக்கு.

65. தலைவனை நகுதல் - தலைவனை நகையாடுவது.

66. தலைவியை வியத்தல் - தலைவியின் உயர்பண்புகளை அல்லது அழகைப் போற்றுதல்.

68. தன்மனத் தழுங்கல் — மனதுக்குள் வருந்துதல்

69. தனிப்படர் மிகிதி — தனிமைத் துன்பத்தின் மிகுதி

70. தாபத நிலை — கணவனை இழந்த துன்பநிலை

71. தாய்போல் கழறித்தழீ இக் கோடல் — மேல் நின்று மெய் கூறும் தாய் போல், பொறுமையும் இனிமையும் கலந்த அறிவுரை கூறி, மனக்கவலை மாற்றி என்றும் போல் மனங்கலந்து மகிழ்வுறல்.

72. தீராத் தேற்றம் — இயற்கைப் புணர்ச்சியுடன் முடியாத தெளிவு

73. துனிகூர் எவ்வம் — வெறுப்பாலும் சினத்தாலும் ஊடலாலும் விளையும் மனத்துயரம்.

74. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் — சிறிதும் தெளி வில்லாமல் காமத்தில் ஈடுபாடு கொண்டு நடத்தல்.

75. தொல்லவை உணர்த்தல் — முன்பும் (பழங்காலத்திலும்) இவ்வாறு நடந்துள்ளது என எடுத்துக் காட்டி அறிவுரை கூறுதல்.

76. நயப்புற்றிரங்கல் — ஆசையுற்று வருந்துதல்.

77. நலம் பாராட்டல் — அழகைப் பாராட்டுதல்.

78. நலம் புனைந்துரைத்தல் — அழகை மிகுதிபடுத்தி உரைத்தல்.

79. நன்னெறிப் படரும் தொன்னலக்கிளவி — எக்காலத்திலும் நன்னெறிகளைப் பின் பற்றித் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் பழைய குடிப்பெருமையின் உயர்வைக் கூறுவது.

80 நாண நாட்டம் — நாணச் செய்து கண்டு மகிழ்தல்.

81. நாணு மிகவுரைத்தல் — நாணம் மிகுவதை உரைத்தல்.

82. நாணு வரையிறத்தல் — நாணத்தின் எல்லையைக் கடத்தல்.

83. நெஞ்சொடு கிளத்தல் — தன் நெஞ்சோடு தானேபேசுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

84. நெஞ்சோடு புலத்தல் — தன் நெஞ்சோடு தானே பிணங்கிக் கொள்ளுதல்.

85. நெருங்கச் சொல்லுதல் — இடித்துக் கூறுதல்.

86. நோக்குவை எல்லாம் அவையே போறல் — பார்க்கும் பொருள்களெல்லாம் தான் முன்பு கண்ட அப்பொருளே போன்றிருத்தல்.

87. பகுதியின் நீங்கிய தகுதிக் கூற்று — வேறுபடும் மனநிலை களால் தாக்கப்படாமல் தக்கது என அறிந்து கூறும் கூற்று

88. பசப்புறு பருவரல் — மேனி பசந்து தோன்றுதலால் உண்டாகிய மனத்துன்பம்.

89. பயனில் காட்சி — பயன் விளையாத வெறும் காட்சி.

90. பரிவுற்று மெலிதல் — பரிவு காட்டி உடல் மெலிவுதல்.

91. பருவங் கண்டழிதல் — குறித்த பருவகாலம் வந்தமைக் காகவும் கணவர் வாராததற்காகவும் வருந்துதல்.

92. பருவங் காட்டி வன்புறை மொழிதல் — கால நிலையை எடுத்துச் சொல்லி வற்புறுத்தி ஆற்றியிருக்க வேண்டுதல்.

93. பிரிவான் எய்திய பருவரல் — பிரிவு தந்த துன்பம்.

95. பிரிவிடைக் கலங்கல் — பிரிவுக் காலத்தில் வருந்தும் வருத்தம்.

96. பிரிவிடை மெலிதல்—பிரிவுக் காலத்தில் தோன்றும் உடல் மெலிவு.

97. பிரிவுடம் படுதல் — பிரிந்து செல்வதை ஒப்புக் கொள்ளுதல்.

98. புணர்ச்சியின் மகிழ்வு — கூடலால் விளைந்த மகிழ்ச்சி.

99. புணரா இரக்கம் — கூடாமையால் தோன்றிய வருத்தம்

100. புலவி நுணுக்கம் — கணவனும் மனைவியும் பிணங்கிக்கொள் வதில் சில நுணுக்கங்கள். அற்ப கரணியத்தால் ஊடுதல்

101. பெருநயப்பு உரைத்தல் — குன்றாத விருப்பத்தைச் சொல்லுதல்.

102. பேணு ஒழுக்கம் (கண்டு) நாணிய கிளவி — தகாத ஒழுக்கம் கண்டு நாணமுற்றதைக் கூறுதல்.

103. பொய் பாராட்டல் — பொய்யாகக் கூறுதல்.

104. மணமனை கண்டுவந்த செவிலி கூற்று — திருமணமான புதிதில் அவர்கள் நடத்தும் இல்லறம் கண்டுவந்த வளர்ப்புத் தாயின் கூற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

105. மறைந்தவற் காண்டல் — மறைந்து நின்று அவனைப் பார்த்தல்.

106. மறைந்தவட் காண்டல் — மறைந்து நின்று அவளைப் பார்த்தல்.

107. மனைமங்கலம் — மனையாளின் நலனும் பொலிவும்.

108. மனைமாட்சி — மனையாளின் மாண்பும் இல்லறச் சிறப்பும்.

109. மிக்க காமத்துமிடல் — ஒன்றுபட்ட அன்புவழியினின்றும் விலகி மாறுபட்டு நடக்கும் தீயொழுக்கம்.

110. முன்னிலைப் புறமொழி — முன்னால் நிற்பவனைக் கண்டு பிறரைக் கூறுவது போலக் கூறுதல்.

111. முதறிவுடைமை மொழிதல் — அறிவின் பெருமையை உணரச் சொல்லுதல்.

112. மென்மொழி விரும்பல் — மெல்லிய இன் சொல்லைக் கேட்க விரும்பும் ஆசை.

113. வணங்கிய மொழியான் வணங்கற் கூற்று — பணிந்த இயல்புடைய மொழிகளால் வணங்கிப் பேசுதல்.

114. வரவு கண்டு மகிழ்தல் — வருதலைக் கண்டு மகிழ்தல்.

115. வரவுணர்ந்து மகிழ்தல் — வரப்போகிறார் என்றறிந்து மகிழ்தல்,

116. வரை விடைஆற்றாமை — திருமணம் செய்து கொள்ளும் வரையில் இடையில் நேரும் காலநீட்டிப்பைப் பொறுக் முடியாமை.

117. வரைவு கடாதல் — திருமணம் செய்து கொள்ளுமாறு கூறுதல்.

118. வாணாளை முனிந்தது — வாழ்நாளை வெறுத்தல்.

119. வாயில் மறுத்தல் — தூதுவனை மறுப்பது.

120. வெளிப்பட இரத்தல் — வெளிப்படையாகச் சொல்லி உதவ வேண்டுதல்.

121. வேட்கை கைமிகல் — ஆசை மிகுதல்.

122. வேட்கை செப்பல் — ஆசையை எடுத்துக் சொல்லுதல்.

123. வேற்று நாட்டகல்வயின் விழுமம் — பிரிந்து செல்ல முடிவு செய்த பின்னும் போவோமா தவிர்வோமா என்னும் மனப் போராட்டம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்பாற் புலவர்கள்

1. அணுலச்சி [கா. ச. 2:82, 3:10]
2. அசுலத்தி [கா. ச. 2:39, 40]
3. பகயா [கா. ச. 1:65]
4. பேச்சா [5:39]
5. மாதவி [1:69]
6. ரேவா [1:66, 68]
7. ரோகா [2:26]
8. வத்தாவகீ [1;52]
9. வோகா [5:68]
10. சசிப்பகா [3:33]

பிழை திருத்தம்

வரிசை எண்	பக்க எண்	பாடல் எண்	விடுக்க	படிக்க
1.	3	—	விகாரிலால் மிசுரா என்பவர்......... மொழிபெயாத்தார்.	சார்புநூல் படைத்தார்.
2.	40	51	இர்செறிப்பு	இற்செறிப்பு
3.	71	127	நீங்கள் நோய்	நீங்கா நோய்
4.	76	140	ஆற்றலுவடட	ஆற்றலுடைய
5.	79	149	கவிதைகளை	பாடல்களை
6.	93	175	காமணம்பால்	காமனம்பால்
7.	104	205	அவன் விரலால்	அவள் விரலால்
8.	135	286	தவரத்தின்	தவசத்தின்
9.	136	288	பிடிவாதம்	ஒட்டாரம்
10.	150	326	கடுஞ்சினத்தவனே ......விடாத	கடுஞ்சினத்தவளே ......விடாதே
11.	160	350	பெசியபோது	பேசியபோது
12.	88	160	......	(கா. ச.1:10)
13.	153	333	......	(கா. ச.5:96)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Gurukul Kangri Library
Access on
Class on
Cat. on
Tag etc
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரின் நூல்கள்

வரலாறு

இலெமூரியாமுதல் அரப்பா வரை

பாவியம் (கவிதை)

குளிர் காவிரி

எல்லைப் போர் வில்லுப்பாட்டு

தமிழாக்கம்

ஆந்திர நாட்டு அகநானூறு

[ஆந்திர மன்னன் ஆளுனல் முதல் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட 'காதாசப்தசதி'யின் தமிழாக்கம். செருமானிய மொழியில் 17 பதிப்புகளாக வெளிவந்த நூல்]

சிவகோட்டாச்சாரியாரின் நல்லறக் கதைகள்

[10-ஆம் நூற்றாண்டுப் பழங்கன்னட உரை நடை நூல் 'வட்டாராதனை'யின் தமிழாக்கம் - சமண முனிவரின் வாழ்க்கை வரலாறு]

இலக்கியம்

குறள் அறிமுகம்

குறள்வழி பிராகிருத இலக்கிய இன்பம்

குமுகாயவியல் (Socialogy)

சாதிகளின் பொய்த் தோற்றம்

மொழி

தமிழ் வளர்ச்சி

கிரேக்க நாடகத்தில் தமிழ் உரையாடல்

Quotations on Tamil and Tamil culture

எஸ். தன்யகுமார் அச்சகம், சென்னை - 17.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar